பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

ஏப்ரல் 2023



கரிசல்காட்டுக் கவிதைக்காரல்

ஈகைத் திருநாள் சிறப்பு மலர்

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்®

உதயம் 1972 – ஏப்ரல் 2023

616



ஆசிரியர் / வெளியிடுபவர் :

அமின் மொஹமெட்

இணையாசிரியர் :

முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி

நிர்வாக ஆசிரியர் :

சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :

ஹிப்ஸீர் ரஹ்மான்

பாவேந்தல் பாலமுனை பாறூக்

கவிஞர் நெல்லை உலகம்மாள்

பாவலர்மணி இராம வேல்முருகன்

பாவலர் தென்றல் கவி

வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்

கவிஞர் பொன்மணிதாசன்

கவிஞர் ஈழபாரதி

ஆலோசகர்கள் :

பாட்டரசர் கி. பாரதிதாசன்

கவிதாயினி சக்தி ஜோதி


நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...


**இராம வேல்முருகன்**

எண் 12 புங்கஞ்சேரி முதன்மைச் சாலை
வலங்கைமான் 612804
திருவாரூர் மாவட்டம்
தமிழ்நாடு , இந்தியா
தொடர்பு எண்
+91 9952529619 ( கட்செவி)
web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com


புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன். படைப்பின் கீழ் படைப் பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

இலங்கையில் இவ்விதழை தபாலில் பெற்றுக்கொள்ள அனுகவும் ...

**+44 (0) 771020030**

# நெஞ்சோடு நெஞ்சம்

அன்பார்ந்த அன்புத் தமிழ் நெஞ்சங்களே! வணக்கம்!

இன்னுமொரு புதிய மாதத்தில் பல விசேட நிகழ்வுகளை வரவேற்று அடியெடுத்து வைத்திருக்கிறோம். ஆமாம்! மாண்புகளைக் கொண்டு வந்து நன்மைகளைக் கைசேர்க்கும் ரமழான் மாதமானது உதயமாகி சிலநாட்களே ஆகியிருக்கும் இவ்வேளை, நாம் பசித்திருப்பதோடும் தாகித்திருப்பதோடும் நில்லாமல், எல்லா விடயங்களிலும் இதயசுத்தியுடன் ஈடுபட்டு, நன்மைகளைக் கைக்கொள்வோமாக! எம் வசதிக்கேற்ப எளியோரை அரவணைத்து இறைவனுக்கு நெருக்கமானவர்களாகவும், அவன் அருளுக்குப் பாத்திரமானவர்களாகவும் வாழ முனைவோம். அத்துடன் பெரிய வெள்ளியுடன், கர்த்தர் உயிர்த்தெழுந்த ஈஸ்டர் ஞாயிறும் மலரவுள்ளது. இத்தனை நிகழ்வுகளும் ஒருங்கே அமையப் பெற்றுள்ள இம்மாதம் பல்லின மக்களின் ஒற்றுமையைக் குறிப்பதாகக் கூடி வந்திருப்பது தனிச்சிறப்புத்தான்.

வரும் ஈதுல் பித்ர் பெருநாளை இறைக்கு பிடித்த முறையில் மிக எளிமையாகக் கொண்டாடி மகிழ்வோம். அதேபோல சித்திரைப் பெருநாளும் மகிழ்ச்சியை அள்ளிக் கொண்டு வரும் இக்காலம், இயற்கைக்கு வசந்தவிழாக் கோலம். வசந்த கால உதயத்தைக் குயில்கள் இன்னிசைக்கீதம் இசைத்து வரவேற்க, எங்கெங்கும் பூக்களின் அழகோடு பசுமை படரவும் ஆரம்பமாகி விட்டது. அதேபோன்றே வாழும் காலம் வரை எல்லோர் மனங்களிலும் பசுமையை விதைத்துப் பண்புடன் வேற்றுமை களைந்து ஒற்றுமையாக வாழ்வோமாக!

தமிழ்நெஞ்சம் இதழை வாசிப்பதுடன், உங்கள் மேலான கருத்துக்களையும் எம்முடன் பகிர்ந்து, எம் வெற்றிப்பாதைக்கு உரமிடுங்கள்! உங்கள் ஆக்கங்களையும் அனுப்பி திறமைக்குக் களம் கொடுக்க நாம் தரும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்!

அனைவருக்கும் இனிய ரமழான், ஈஸ்டர், ஈத்பெருநாள் மற்றும் சித்திரைத் திருநாள் நல்வாழ்த்துகள்!

நன்றி!

என்றென்றும் அன்புடன்



(ஆசிரியர்)

பட விநயம் : கூகுள்

தொழுகை, நோன்பு, கொடை
எல்லாவற்றையும் விட மிகச் சிறந்தது எது
தெரியுமா? சக மனிதர்களிடம் நல்லுறவையும்
சமாதானத்தையும் நிலை நிறுத்துவதே.
ஏனென்றால் தீய உணர்வுகளும் சண்டை
சச்சரவுகளும் மனித இனத்தையே துவம்சம்
செய்து விடும் – பெருமானார் முஹம்மது (ஸல்)



# நோன்பின் சிறப்பு

மாற்றமே முன்னேற்றம், மாற்றம் ஒன்றே மாறாதது என்பது புரிந்தாலும் மாறுவது என்பது ஏன் அத்தனை இலகுவாக இல்லை என்று நினைக்காதவர்களே இல்லை எனலாம்.

எந்த ஒரு மாற்றமும் அது கொண்டு வரும் நன்மைகளை நினைவுறுத்துவதை விட எதை இழக்க வேண்டி இருக்கும் என்ற அச்சத்தையே ஏற்படுத்துகிறது. அதனாலேயே மாற்றம் என்பது மிகவும் சிரமமானதாகவும், அப்படி மாறினாலும் அது தனது இயல்பாக மாறாமல், மீண்டும் பழைய வாழ்க்கை முறைக்கே சென்று விட மாட்டோமா என்றும் மனம் ஏங்குகிறது. தான் மாறுவதற்கு பதிலாக தன் சூழல் மாறி விடாதா என மகிழ்ச்சியை தன்னை விட்டும் வேறு எதிலோ தேடச் செய்கிறது.

அரண்மனை வாயிலில் ஓங்கி வளந்திருக்கும் மரத்தின் தாழ்ந்த கிளையில் அமர்ந்திருக்கும் அந்த கிளியை அங்கு நின்றிருந்த காவலாளி மீண்டும் ஒரு முறை விரட்டுகிறான். இந்த முறை மிகவும் சத்தமாக தன் கையில் இருக்கும் கம்பை அதன் முன் நீட்டி அச்சுறுத்தியவாறு.. இருந்தும் அந்தக் கிளி தான் நின்றிருந்த அந்த ஒற்றை மரத்தின் கிளையை விட்டு எங்கும் பறக்க மறுக்கிறது.

இதே நிகழ்வு கடந்த ஒரு வாரமாக நடக்கிறது. காவலாளி அந்தக் கிளியை விரட்ட முற்படுவதும் பின் முடியாமல் அரசவை சென்று அரசன் முன் தலை குனிந்து நிற்பதும் இப்போதெல்லாம் வாடிக்கை ஆகி விட்டது.

சில தினங்

களுக்கு முன் அரசவை வந்த தலைமை குரு அரசன் கையில் இரண்டு கிளிகளைக் கொடுத்து அன்று இரவு அதை வெளியே பறக்க விடுமாறு சொல்லிச் செல்கிறார். அரசனும் அதே போல் பறக்க விட ஒரு கிளி மட்டும் உடனே பறந்து சென்று விட மற்றொன்று அங்கிருந்த ஒரு மரக்கிளை யில் அமர்ந்து கொண்டு இன்னும் நகர மறுக்கிறது.

இதோ இரண்டொரு தினங்களில் குரு மீண்டும் வந்து விடுவார். அதற்குள் எப்படியாவது இந்தக் கிளி அங்கிருந்து பறந்து விட வேண்டும் என்பது அரச கட்டளை. குரு சொன்னால் நிச்சயம் அதற்கு ஏதோ ஒரு அர்த்தம் இருக்க வேண்டும். ஆனால் யார் எப்படி முயற்சி செய்தும், விரட்டியும் பறக்க மறுக்கும் கிளியை என்ன செய்வது என்று தான் தெரியவில்லை.

குரு பறக்க விடச் சொல்லி கொடுத்த கிளி பறக்காமல் இருப்பதற்கு ஏதோ பாவ பரிகாரங்கள் காரணமாக இருக்குமோ என என்னென்னவோ நினைத்து மன உளைச்சல் படும் அரசர் நிலை பார்த்து அரசவை மந்திரியே இப்போது அந்தக் கிளியை விரட்டச் செல்கிறார்.


சற்று நேரத்தில் மன்னருக்கு கிளி பறந்து விட்ட செய்தி வருகிறது. மந்திரியை அழைத்த மன்னர் அவரைப் பாராட்டி பொன்னும் பொருளும் பரிசளிக்கிறார். பின்னர் கிளியை எப்படி அங்கிருந்து பறக்கச் செய்தார் என்று கேட்கிறார். அதற்கு மந்திரி, தன் பலம் தன் இறகுகளில் இருக்கிறது தான் வீற்றிருக்கும் கிளையில் இல்லை என்பதை அறியாமல் அந்தக் கிளி கிளையை விடாமல் பற்றிக் கொண்டிருந்தது. நான் அந்தக் கிளையை வெட்டி அதை அந்தக் கிளிக்கு உணர்த்தினேன். அதுவும் அழகாக பறந்து விட்டது என்கிறார். அரசருக்கும் இராஜ குரு தன் பலத்தை தனக்கு உணர்த்துவதற்கே இதை செய்திருக்கிறார் என்பது புரிகிறது.

இப்படித் தான் நீங்களும் பல நேரம் உங்கள் பலம் அறியாமல் உங்களிடம் இருப்பதை பிடித்துக் கொண்டு, நீங்கள் பழகியவைகளை பற்றிக் கொண்டு, அதிலிருந்தும் மாற முடியாமல் மீள இயலா மல் தவிக்கிறீர்கள். மாறினால் தடுமாறி விழுந்து விடுவோமோ என பதறுகிறீர்கள்.

**Dr.ஃபஜிலா ஆசாத்**
சர்வதேச வாழ்வியல் ஆலோசகர்

Drr.Fajila Azad,
International Lifecoach & Hypnoytist






மந்திரி கிளையை வெட்டி கிளிக்கு உணர்த்தியதுபோல, உங்களால் மாற முடியும், உங்கள் அடிப்படைத் தேவை யான உணவு உறக்கத்தில் கூட நல்ல முறையில் மாற்றங்கள் செய்ய முடியும் என்பதை அழகிய முறையில் உணர்த்தி விட்டுச் செல்கிறது அழகிய இந்த புனித ரமலான்.

அதுவரை எந்த பழக்க வழக்கத்தில் இருந்தாலும் அதில் இருந்து மாறுபட்டு சுயக் கட்டுப் பாட்டோடு கடைபிடிக்கப்படும் நோன்பால் ஏற்படும் மனரீதியான உடல் ரீதியான ஆரோக்கிய மான மாற்றங்கள் எத்தனையோ அறிவியல் ரீதியாக விளக்கப் பட்டுள்ளன.

1994 இல் Casablanca வில் நடந்த ஆய்வில் நோன்பு எனப் படும் உண்ணா விரதம் அஜீரணம், ஹைபர் டென்ஸன், கொலஸ்ட்ரால் உட்பட பல நோய்களுக்கு மருந்தாகிறது என்று கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.

சுயக் கட்டுபாடு வலியுறுத்தப்படும் ரமலா னில் உணர்வுகளை தங்கள் ஆளுமைக்குள் வைக்க முடியக்கூடிய, தங்கள் மனவலிமையை பலராலும் புரிந்து கொள்ள முடிவதால் ரமலான் மாதத்தில் தற்கொலையின் எண்ணிக்கை மிகக் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளது என்கிறது ஜோர்டானில் நடந்த முக்கியமான ஆய்வு ஒன்று.

இவை அனைத்தையும் விட முக்கிய மானது என்னவென்று அறிவீர்களா? எத்தனை வயதானாலும் மனித மூளையின் நடுப்பகுதியில் இருக்கும் Hippocampus ல் புதிய புதிய நியுரோ செல்கள் உருவாகிக் கொண்டிருக்கும். ஒருவரின் ஞாபக சக்தி, மூட், உணர்ச்சிகள் அனைத்தும் மூளையின் இந்த பகுதியைத்தான் சார்ந்துள்ளது. அந்த புதிய செல்களே மனிதனின் வயது மாற்றத்திற்கு ஏற்ப சூழல் மாற்றத்திற்கேற்ப அவனைத் தயார் செய்கிறது.

தோல்விகள் அவமானங்கள் என ஏதாவது பிரச்னையில் மனம் உழன்று மனம் அழுத்தம் ஏற்படும் போதும் புதிய செல்கள் உருவாகுவது தடைபடும். அதனால் மனதில் ஒரு விதமான சலிப்பும் தேக்க நிலையும் ஏற்படும். அதே நேரம் இதற்கு மிக எளிய தீர்வு இருக்கிறது. அது உங்கள் கைகளில் தான் இருக்கிறது என்கிறது வாழ்வியல்.

நீங்கள் உங்களால் முடிந்த அளவிற் கேனும் உடற்பயிற்சிகள் செய்யும் போதும், ஏதாவது ஒன்றை கற்றலின் போதும் புதிய நியுரோ செல்கள் உருவாகத் தொடங்கும். அது உங்களுக்குள் உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் தரும்.

தவிர மிகவும் கவனிக்க வேண்டிய முக்கியமான மருத்துவ செய்தி. உணவுக் கட்டுபாட்டை தரும் நோன்பு இருக்கும் போது புதிய நியூரோ செல்கள் உருவாகு

வது மட்டுமல்லாமல் பல நோய் செல்களும் அழிகின்றன என்கிறது ஒரு அறிவியல் ஆய்வு.

இப்படி உடல் ரீதியான நன்மைகள் ஒருபுறம் இருக்க மனதை மாற்றத்திற்குத் தயார் செய்வதுதான் இதில் இன்னும் மகத்தானது.

முந்தின தினம் வரை நேரத்திற்கு காபி குடிக்க முடியாவிட்டால் கூட தலைவலி என உழலும் மனம் அடுத்த நாள் நோன்பு என்று அறிவிக்கப்பட்டவுடன் அதற்கேற்றாற் போல் சூரிய உதயம் முதல் அஸ்தமனம் வரை எதையும் உண்ணாமல் உறங்காமல் இருக்க தயாராகி விடுகிறது.

உணவு உறக்கம் என அடிப்படை விஷயங்களில் மாற்றத்தைக் கொண்டு வரும் ரமலான், எதுவும் சாத்தியமே எனும் தன்னம்பிக்கையைத் தருகிறது.

தன்னை எந்த சூழலுக்கு ஆட்படுத்தி கொள்வதற்கும் தேவைக்கேற்ப ஒருவன் மாறுவதற்குற்கும் அவன் மனதை தவிர வேறு எதுவும் தடை அல்ல. அப்படி அவன் தன்னை தேவையான மாற்றத்திற்கு உட்படுத்தும் போது அது அவன் ஆற்றலை அவனுக்கு உணர்த்தி தன்னம்பிக்கை கொடுத்து பல நன்மைகளை அவன் பெறச் செய்கிறது.

அதாவது மாற்றங்களுக்கு நீங்கள் தயாராக இருக்கும்போது எத்தகைய மாற்றங்கள் வரும்போதும் அவற்றை சரியான முறையில் எதிர்கொண்டு அதை உங்கள் வாழ்க்கையில் தேவையான வகையில் அடாப்ட் செய்து கொள்வீர்கள். அதனால் மகிழ்ச்சி மலரும். ■

# நோன்பின் மாண்புகள்



## ஜன்னத்
### மாவனல்லை

புனித ரமழான் மாதம் எம்மை அடைந்து விட்டால் முஸ்லீம்கள் அனைவர் மீதும் நோன்பு கடமையாகின்றது. உடலாலும் மனதாலும் எம்முள் ஒரு மாற்றம் ஏற்படுகின்றது. சென்ற வருட ரமழானுக்குப் பின் எமது வாழ்க்கையில் ஏற்பட்ட தவறுகள், பிழைகள், அநியாயங்கள், அநீதிகள், இவை அனைத்தையும் முஹாசபா எனும் சுய விசாரனை மூலம் இனங்காணப்பட்டு அவற்றிற்கான பாவமன்னிப்பு செய்து கொள்ளக் கூடிய பாக்கியத்தை பெறுகின்றோம். உண்மையிலேயே புனித நோன்பானது உள்ளத்தையும், உடலையும் தூய்மைப்படுத்துவதோடு இறைவன் கண்காணிக்கிறான் என்கின்ற உள்ளச்சம் இயல்பாகவே ஊற்றெடுக்கிறது. பல்லாயிரக்கணக்கான அமல்களை நன்மைகளை அதிக அளவில் பெற்றுக்கொள்ளக்கூடிய மாதமாகவும் இந்த ரமழான் மாதம் அமைந்திருக்கிறது.

மேலும் நபி (ஸல் கூறினார்கள் “யாரொருவர் அல்லாஹ்வின் பாதையில் ஒரு நாள் நோன்பு நோற்கின்றாரோ அவரது முகத்தை அல்லாஹ் எழுபது ஆண்டுகள் நரக நெருப்பில் இருந்து

தூரமாக்குகின்றான்'' இதை அல்லாஹ் நோன்பின் மாதமாக ஆக்கி இருக்கிறான். அத்தோடு ஆதமுடைய மகன் செய்யக் கூடிய அனைத்து செயல்களும் அவருக் குரியது. ஆனால் நோன்பைத் தவிர, அது எனக்குரியது அதற்கான கூலியை நானே வழங்குபவனாக இருக்கின்றேன்'' என்று அல்லாஹ் வாக்களிக்கிறான். ஏனென்றால் மனிதன் தனது ஆசைகளை,இச்சைகளை, உண்ணுவதை,பருகுவதை,எனக்காகவே விட்டு விடுகின்றான் என்று. அத்தோடு புனிதமிகு ரமழான் மாதத்தில் ''லைலதுல்கத்ர்'' எனும் இரவில் அல்லாஹ் வை யாரொருவர் நின்று வணங்குகிறாரோ அவரது முன்செய்த பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படுகின்றன.

மேலும் நபி (ஸல்) கூறினார்கள் நோன்பாளிக்கு இரண்டு விதமான சந்தோஷங்கள் இருக்கின்றன. ஒன்று காலையில் இருந்து பசியோடும், தாகத் தோடும் இருந்த மனிதன் நோன்பு திறக்கும் வேளையில் ஏற்படும் சந்தோஷம். மற்றொன்று நோன்பின் மூலம் மறுமையில் அல்லாஹ்வை சந்திக்கும் போது ஏற்படும் மகிழ்ச்சியாகும்.

உலகத்தில் எதை வேண்டுமானாலும் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் யாரொருவர் மாண்புமிகு நோன்பை இறைவனுக்காகவே நோற்று, இரவு முழுவதும் கண்விழித்து நின்று வணங்கி, திக்ருகளில் ஈடுபட்டு சிறந்த முறையில் கழிக்கன்றாரோ, அவரால் மறுமையில் அல்லாஹ்வை தன் இரண்டு கண்களால் பார்க்கக்கூடிய பாக்கியத்தை பெற்றுக் கொள்ள முடிகின்றது.

மேலும் நோன்பானது நோன்பாளிக் காக நாளை மறுமையில் பரிந்துரை செய்து சாட்சி கூறும். நோன்பாளிக்கென்று "ரைய்யான் எனும் சுவர்க்க வாயிலில் நுழையக் கூடிய பாக்கியத்தையும் அல் லாஹ் வழங்குபவனாக வாக்களிக்கின்றான்.

ரஸூல் (ஸல்) அவர்களிடம் ஒரு சஹாபி வந்து ''என்னை சொர்க்கத்துக்கு கொண்டு செல்லக் கூடிய நற்கிரியை எது'' என்று வினவினார்கள். அப்போது ரஸூலுல்லாஹ் கூறினார்கள் ''அதற்கு நோன்பாளியாக இருப்பீராக'' என்று பதிலளித்தார்கள்

தமது உடலால் எவ்வாறு இஃலாஸ் உடையவராக இருக்கின்றோமோ அவ்வாறே உள்ளத்தாலும் இஃலாசுடை யவராக இருக்கக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்தித் தருகின்றது. நோன்பு.

அதாவது புறம் பேசுதல், கோள் சொல்லுதல், கேளிக்கைகள், வீண் பேச்சுக் கள், சண்டை சச்சரவுகள் போன்ற அனைத்து காரியங்களிலும் எச்சரிக்கை யாகஇருக்ககற்றுக்கொடுக்கின்றது.மனோ இச்சைக்குக் கட்டுப்பட்டு யாரும் பார்க்க மாட்டார்கள் என்று எண்ணி தீய செயலில் ஈடுபட முற்படும் போது அல்லாஹ் எம்மை கண்காணிக்கிறான் என்கின்ற பயம் சூழ்ந்து கொள்கிறது. மேலும், இந்த நோன்பின் மூலம் ஏழைகளின் பசியை உணர்ந்து தான தர்மங்களில் அள்ளி வழங்கும் மனோ பக்குவத்திற்கு உள்ளம் தூண்டப் படுகின்றது. மேலும் விட்டுக் கொடுப்பு,புரிந்துணர்வு,சகிப்புத் தன்மை, சகோதரத்துவம் போன்ற சிறந்த குணங்கள் கட்டி எழுப்பப் படுகின்றன. மேலும் மாண்புமிகு நோன்பானது மனிதனின் உடல் ஆரோக்கியத்துக்கு சிறந்த மருந்தாக துணைபுரிகிறது. அதாவது பல மாதங்களாக உண்ணக்கூடிய உணவுகளின் நச்சுத்தன்மைகளை வெளியேற்றுவதோடு, உடம்பில் உள்ள தேவையற்ற கொழுப்புகளை வெளியேற்ற உதவுகின்றது. எனவே மாண்புமிகு நோன்பானது மனிதனுக்கு இம்மைக்கும் மறுமைக்கும் உரிய சிறந்த பயிற்சிப் பாசறையாகத் திகழ்கின்றது. அனைவரும் இப்புனித நோன்பை தூய எண்ணத்தோடு கடைப்பிடித்து ஈருலகிலும் சிறந்த நன்மைகளைப் பெற்று வாழ முயற்சிப்போமாக! ■

# ஈடேற்றம் பெறுவோம்



அந்திவானில் ரமழானின் தலைப்பிறை தோன்ற
ஆரம்பமானதே மாண்புகளைக் கொண்ட மாதம்
வந்திருக்கும் ரமழானை சங்கை செய்து
வரவேற்றோம் வாஞ்சையுடன் வாழ்த்துக் கூறி

பசித்தோம் தாகித்தோம் அல்லாஹ் பெயரால்
பாவங்கள் விட்டுத் தொலைத்தோம் தூரமாகி
பசியறிய ஏழைகள்தம் துயரறிய நம்மை
படைத்தவன் அருளினானே உயர்மிகு ரமழானை

உடல் மன இச்சைகள் கட்டுப்பாடாய்
உறுதியில் எஃகாக நின்று வெல்ல
கடமையாய் வந்ததே கண்ணியம் மிக்கதாய்
கரங்களில் அமல்கள் தரும் உபவாசமே

இரவெலாம் நின்று இறை வணங்கி
இருகரங்களில் திருமறை தனை ஏந்தி
இரவுகளில் மேலான லைலத்துல் கத்ரை
இன்புற்றுத் தேடியதும் அருள் நாடி

ஈகையின் பொருள் தனை யுணர்த்தும்
இருலோக வாழ்வுக்கும் ஏற்றம் ஆகும்
ஸக்காத்தில் ஸதகாவில் நற்கூலி உண்டு
சரியான பங்கீட்டில் ஈடேற்றம் உண்டு

பித்ராவில் தானே நோன்பு பூர்த்தியாகும்
பிழைத்தாலே நன்மைகள் பட்டுப் போகும்
ஈத்பெருநாள் பிறக்கும் ஷவ்வாலின் பிறையோடு
ஈமானோடு எளிமையாய் கொண்டாடி மகிழ்வோம்

ஹஃபீரா ஹஃபி

# உளி பேசும் மொழி

1

**நெல்லை க. சோமசுந்தரி**
(கவிஞர், எழுத்தாளர் & தொல்லியல் ஆர்வலர்),
சென்னை, தமிழ்நாடு

பூமியில் தோன்றிய ஒவ்வொரு உயிரினங்களும் தனது உணர்வுகள் வெளிப்படுத்த உதவும் ஒரு கருவியாக "மொழி' செயல்படுகிறது என்பது நாம் அனைவரும் அறிந்ததே. மனித மற்றும் விலங்கின உயிரினங்களைத் தாண்டி, தாவரங்களுக்கும் உயிர் உள்ளது என்பதை பதினெட்டாம் நூற்றாண்டின் அறிவியல் அறிஞர்கள் கண்டுபிடித்த விடயம் நமக்கு ஆச்சிரியத்தைத் தந்து சென்றது. தாவரங்களுக்கும் அவைகளின் உணர்வுகளை வெளிப்படுத்தக் கூடிய ஒரு சங்கேத மொழி ஒன்றுள்ளது என்பதை அறியும் போது, இப்பிரபஞ்சத்தில் கண்ணுக்குப் புலப்படாத பல சக்திகள் நம்மைச் சுற்றிப் பரவி இருக்கிறது என்ற உண்மையை நாம் ஒப்புக் கொள்ள தான் வேண்டியிருக்கிறது.



இலக்கண, இலக்கிய வரையறை களுக்குட்படாமல் ஆறறிவு படைத்த மனித குலத்திற்குப் புரிபடாத பல மொழிகள் இப்புவியில் இன்றும் வலம் வந்துக் கொண்டிருக்கின்றன. ஒரு மொழியின் ஆழமான தன்மை என்பது எப்படி கணிக்கப்படுகிறது? நினைக்கும் ஓர் உணர்வை எளிய முறையில் மற்றவர்களுக்கு வெளிப்படுத்தும் இயல் பைப் பொறுத்தே ஒரு மொழி சிறப்பு மொழியாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. பழங்காலம் முதலே மொழிகள் தொன்று தொட்டு வழங்கினாலும், கால பரிமாற்றத்தில் பரிமாணங்கள் பல கடந்தாலும், எவற்றின் மூலமும் சிதையாமல் தன் அடையாளத்தை நிலை நிறுத்தி நிற்கும் மொழியாக நம் தமிழ்மொழி, அதன் தன்மையாலும், வளமையாலும் செம்மொழியாக எல்லோ ராலும் அங்கீகரிக்கப்படுகிறது.

உயிருள்ள அனைத்து உயிரினங் களுக்குள்ளும் ஒரு தொடர்பாக இருப்பது «மொழி» என்பது அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்பதனை நாம்

அறிவோம். ஆனால் உயிரற்ற அஃறிணை பொருளால் ஒரு உயிர்ப்பு தன்மையை ஏற்படுத்தி, உயிருள்ள ஜீவராசிகளிடம் உள்ள உணர்வின் வாயிலாக ஒரு தாக்கத்தைத் தந்து அதன் தன்மையையோ அல்லது கருத்துக்களையோ வெளிப்படுத்த முடியும் என்பதை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியுமா?

உயிரற்ற ஒரு அஃறிணை பொருள் நம்மோடு பேசும் என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா? அல்லது உங்களால் ஏற்றுக் கொள்ள முடியுமா? என்ற கேள்விக்கு இந்த தொடர் ஒரு பதிலாக அமையும் என்று நான் நம்புகிறேன். வாருங்கள் தொடர்ந்து பயணிப்போம்.



'மொழி' என்பது மனித உயிரினங்களிடையே மிகவும் சிறப்பான ஒரு தன்மையுடன் எடுத்துக் கையாளப் பட்டாலும் மற்ற ஜீவராசிகளிடம் அவைகளின் இனக் குழுக்களிடம் வெவ்வேறு முறை களில் தேவைகளுக்கு ஏற்பப் பயன்படுத்தப் படுகிறது. குறிப்பாக உடல் மொழியாகவோ, சங்கேத மொழியாகவோ ஒலி எழுப்பும் சப்தமாகவோ அவைகளால் தன் இனத்தார்களுடன் தொடர்பு கொள்ள முடிகிறது. அம்மொழிக்கு எழுத்துருவோ, சொற்களோ, சொற்றொடரோ இலக்கண மற்றும் இலக்கிய விதிகளோ எதுவும் கிடையாது. அதனாலேயே ஆறறிவு படைத்த மனிதன் பேசும் எம்மொழியும் மேற்கூறிய மற்ற இனங்களின் தொடர்பு மொழியை விடவும் மிகவும் சிறப்புப் பொருந்தியதாக நம்மால் உணர முடிகிறது.

ஒரு மொழியின் சிறப்பு மற்றும் அதன் வளமானது அம்மொழியில் இயற்றப் பெற்றுள்ள இலக்கியங்கள், காவியங்கள், கலைநயமிக்க கவிதைகள், கட்டுரைகள் இன்னும் பல பரிமாணங்களில் உள்ள அனைத்து வகையான மொழி சார்த்த படைப்புகளினால் தீர்மானிக்கப்படுகிறது. அவ்வழியே, இங்கே ஒரு உளி பேசும் மொழியினை நாம் கேட்க இருக்கிறோம்.

அம்மொழியானது உயிரற்ற கற்களினால், உளி இயற்றிய கவிதைகளாக நம்மிடையே பரிமணிக்க இருக்கிறது வாருங்கள் அவை கூறுவது கேட்கத் தயாராவோம்.


முப்பரிமாணம் கொண்டு உயிர்ப்புடன் நிற்கும் கற்சிற்பங்கள் காலம் கடந்தும் உளியால் செதுக்கிய மனிதர்களின் கலை நுட்பத்தை மிக அழகியலாக பல நேரங்களில் நம்மிடையே பேசிச் செல்கின்றன. அப்படிப்பட்ட இச்சிற்பங்கள் காண்பவர்களின் கண்களுக்கு காட்சிப் பொருளாக மட்டும் இல்லாமல் அதற்கு அப்பால் சென்று கருத்துக்களையும், உணர்ச்சிகளையும் ஊட்டிச் செல்வதாக அமைகிறது.

ஆதிமனிதனின்நாகரிகவளர்ச்சிக்கு ஆற்றங்கரை எவ்வாறு முதன்மையாக விளங்கியதோ, அதுபோல ஒரு கிராமமோ,



நகரமோ உருவாவதற்கு முதன்மையாக இருப்பது அவ்விடங்களில் அமையப் பெற்றுள்ள ஆலயங்களே ஆகும். அந்த வகையில் தமிழரின் கட்டடக்கலை என்பது அழகியல் கலந்த மரபின் நுட்பங்களைச் சிற்பங்களாக செதுக்கி வெளிப்படுத்துகிறது.

பிரபஞ்சத்தின் இயக்கம் என்பது எவ்வாறு இயங்குகிறது என்பதனை தத்துவார்த்த நோக்கிலும், பஞ்ச பூதங்கள் வெளிப்படுத்தும் சக்தியின் இயக்கத்திலும், மனித உடல் அமைப்பிற்கும் கோவில் கட்டடக் கலையில் சிற்பங்களுக்கு இடையே இருக்கும் தொடர்பியலுக்கும், கோவிலைச் சார்ந்த ஒரு சமுதாயம் எவ்வாறு இயங்கியது என்பதையும் ஒரு தொலைநோக்கு மற்றும் உள்ளார்ந்த பார்வையுடன் இத்தொடரில் காண இருக்கிறோம்.



இந்த உளி பேசும் மொழியின் சப்தத்தை உணர வேண்டுமானால் அடுத்த இதழுக்காக காத்திருங்கள் !!!.

(தொடரும்...)

# முருகனே துணை

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

பற்றறுந்தெம் மானோடிப் பதுங்கிப் வாழ
பாரமில்லை பாரமில்லை கரும்பொன் நெஞ்சில்
சொற்சிலையாய் வடித்தனளோ துறக்கம் சேர
சொப்பனமாய் மாறுமென்றெண் ணியேவாழ் மீளி
குற்றுயிராய் உடற்சேர்ந்த குழந்தை இல்லாள்
குடிநீங்கிப் போம்நொடியில் வெறுமை யாயின்
உற்றவனாய் யாவுமாகி முள்ள மெங்கும்
உமையாலன் வீற்றிருக்க அநாதை யானோ?

எம்மான் - தந்தை ;
துறக்கம் - சொர்க்கம்
மீளி - ஆண் பருவம் ;
குற்றுயிர் - பாதிஉயிர் ;
உமையாலன் - முருகன்

**- ஸ்ரீவி.முத்துவேல்**
சென்னை

# தோட்டம்

எங்கள் வீட்டுத் தோட்டம் மனத்தில்
எழிலாய்  இன்பம் நல்கும்!
தங்கும் குளிர்ச்சி நிலத்தில் பரவித்
தண்ணீர்  பாய்ந்து கூட்டும்
மங்கும் மாலை  மயக்கம் குழந்தை
மகிழ்ச்சி பொங்கும் கூட்டம்
எங்கும் பசுமை மின்னி யாங்கே
ஏங்கும்  உள்ளத் தேட்டம்

மஞ்சள் வண்ணச் செவ்வந் தியாட
மயில்மா ணிக்கம்  பூக்கச்
செஞ்சாந் தாகச் செம்ப ருத்தி
செல்லும் என்னை  இழுக்கும்
பஞ்ச மில்லாப் பூக்கள் பார்க்கப்
பறிக்கக் கையும் நீளும்
விஞ்சும் இதனின் அழகில் மயங்கி
விரைந்து தேனீ அலையும்

வாசம் வீசும் பவள மல்லி
வகைதான் செண்டு மல்லி
நாசித் துளைக்கும் பாரி சாதம்
நகர விடாதே மயக்கும்
காசு போல வட்ட மலர்கள்
கணக்கே யிலாது பூக்கும்
பேசி அழைக்கும் பெரிய மலர்கள்
பெண்ணின் முகமாய்ச் சிரிக்கும்

ஊசி வடிவும் ஊதா நிறமும்
உலகை உலுக்கச் செய்யும்
கூசும் கண்கள் இதனின் வண்ணம்
குழந்தை போலே சிரிக்கும்
வீசும் தென்றல் காற்றில் நிறையும்
வீதி வரையும் வாசம்
தூசு போல மகரந் தத்தைத்
தும்பி ஊதிப் பரப்பும்

வேனிற் கால மாம்பூக் களுமே
விரைவாய்க் கொட்டி நிரம்பும்
தானே மிதிக்க மெத்தைப் போலச்
சருகாய்க் காலில் ஒட்டும்
தூணாய் நிற்கும் மரத்தின் அடியில்
தூசாய்க்  காற்றில் பறக்கும்
மேனி யெங்கும் மகிழ்வு பொங்க
மேலே  குயிலும் அமரும்

பூசை செய்ய அரளி உரோசா
புதிய பூக்கள்  மலரும்
ஆசை கொள்ள வைக்கும் தாழை
அழகுப் பூவாம்  அல்லி
மாசிப் பச்சை மருக்கொ ழுந்தே
மஞ்சள் சூரி யப்பூ
வீசும் வாசம் மலரின் மென்மை
வியப்பே பெண்டிர் போலே



தென்றல் கவி – தமிழ்சிட்டு

# வாழ்க்கை வாழ்வதற்கே..!

பா. சூர்யா M.Sc.,M.Phil.,B.Ed.,

பிறப்பிற்க்கும் இறப்பிற்க்குமான இந்த இடைவெளியில் நம்முடைய வாழ்க்கை பயணம் எத்துனை சுவை மிகுந்தது என்பதில் தான் சுவாரஸ்யம். இறுதி ஊர்வலத்தில் நம் பின்னால் வரும் உறவுகளின் கூட்டம் தான் நாம் சேர்த்து வைத்த சொத்து. காலங்கள் கரைந் தோடிய பின்னரும் நம்மை நினைவு கூறும் மனங்கள், நம் சிறப்புகளை எடுத்துரைக்கும் நன்மக்கட்பேறு அமைந்தால் நாம் சிறப்பாக வாழ்ந்து சென்றோம் என்ற பாக்கியம் கிட்டும்.

நாம் வாழ்வதற்காக பணமா? இல்லை பணத்திற்கான தேடல் தான் வாழ்க்கையா? இந்த பெரும் திணறலில் தான் இன்றைய இளைய சமுதாயம் ஓடி கொண்டிருக்கிறது. மேலும் சவாலாக அறிவியல் வளர்ச்சி, தொழில்நுட்ப மேலாதிக்கம், உறவுகளின் நேரங்களை மெல்லமாய் உறிஞ்சி குடித்து ரசிக்கிறது.

பக்கத்து வீட்டில் போட்ட பந்தல் திருமண நிகழ்விற்கா? இல்லை இரங்கல் கூட்டத்திற்கா? என்பது கூட தெரியாமல் கடந்து செல்லும் அவசர உலகம். எந்த நண்பனுக்கு பிறந்தநாள் என்று தெரியாமல் whatsapp group இல் வாழ்த்து சொல்லும் ஆட்டுமந்தை ஒருபக்கம். சமையற்கட்டில் இருக்கும் அம்மாவிற்கு தண்ணீர் எடுத்துவர தன் படுக்கையிலிருந்தே குறுஞ்செய்தி அனுப்பும் புதுயுகம் மறுபுறம்.

மனிதனின் ஆறாம் விரலாய் மாறிப்போன கைப்பேசியின் ஆதிக்கம். அதிகாலை கண் விழித்ததும் விரல்கள் தேடும் முதல் நண்பன். இரவில் குழந்தை போல் அருகிலேயே வைத்து உறங்கும் அதிசயமும் இந்த நாகரிக உலகில் தான். புகைப்படத்திற்காக ஒரு போலி புன்னகை மட்டும் கடமையாகி போனது. Facebook நினைவு படுத்தாவிட்டால் நம் உறவுகளின் பிறந்த நாளும், திருமண நாளும் தெரியப் போவதில்லை. நம் நேரத்தை விழுங்கி முட்டாளாக்கி சிரிக்கிறது கைப்பேசி. கையளவு அடக்கத்தில் கட்டி ஆள்கிறது நம்மை .

ஒரு வேடிக்கை கதை ஒன்று சமீபத்தில் கேட்டேன். ஆனால் அதன் தாக்கம் என்னுள் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது. கணேசன் என்ற தாத்தா எப்பொழுதும் வெற்றிலை பாக்கு போடும் பழக்கம் கொண்டவர். தன் பேரனிடம் சில்லறை கொடுத்து வெற்றிலை வாங்கி தன் பெட்டியை நிரப்பி கொள்வார்.



அவர் வெற்றிலை பெட்டியை திறக்கும் போதெல்லாம் மேலிருக்கும் இரண்டு மூன்று வெற்றிலைகள் சற்று வாடியிருக்கும். சிக்கனமாய் இருக்க எண்ணி, வாடிய வெற்றிலைகளை வீணாக்காமல் முதலில் உண்டுவிட்டு நல்ல பசுமையான பச்சை வெற்றிலைகளை பத்திரப்படுத்தினார். அடுத்த நாள் பெட்டியை திறக்கும் பொழுது மேலும் இரண்டு வெற்றிலைகள் வாடி தயாராக இருந்தது. மீண்டும் இதையே தொடர்ந்து செய்தற் கணேசன்.

ஒரு நாள் வயோதிக மூப்பின் பொருட்டு இறைவனடி சேர்ந்தார் கணேசன். அவரின் இறுதி சடங்கில் கணேசனுக்கு பிடித்த வெற்றிலை பாக்கு வைத்து மகன் தேம்பி தேம்பி அழுது கொண்டிருந்தான். சட்டென்று அந்த வெற்றிலையை எடுத்து விட்டு பேரன் சொன்னான் “தாத்தாவிற்கு பச்சை வெற்றிலை பிடிக்காது அப்பா.! சற்று வாடி வதங்கிய வெற்றிலை தான் பிடிக்கும்” என்று கூறி வாடிய வெற்றிலையை வைத்தான். கணேசன் வாழும்போதும் நல்ல பசுமையான வெற்றிலையை சுவைக்க வில்லை இறந்த பின்னும் கிடைக்கவில்லை. வாடிய இலையை அன்றைக்கே தூக்கி யெறிந்துவிட்டு நல்ல வெற்றிலையை கணேசன் ரசித்து உண்டு மகிழ்ந்திருக்கலாம். தேவையற்ற சிக்கனம் கடைசிவரை நல்ல வெற்றிலையை ருசிக்கவிடவில்லை .

விழிப்பதற்க்கே உறக்கம்.!
வெல்வதற்க்கே தோல்வி.!
எழுவதற்கே வீழ்ச்சி.!
வாழ்வதற்க்கே வாழ்க்கை.!

இனியாவது விழித்துக் கொள் வோம். அன்றாட வாழ்க்கையை ரசித்து வாழ்வோம். விஞ்ஞான வளர்ச்சியை தேவைக்கேற்ப பயன்படுத்துவோம். உறவு களின் உன்னதம் உணர்வோம். கடந்து செல்லும் அனைவருக்கும் புன்னகையை பரிசளிப்போம். வளமான அடுத்த தலை முறையை உருவாக்கிடுவோம்.

# எங்க ஊரு அய்யனாரு

எங்க ஊரு அய்யானாரு
ஏரிக்கரையில நிக்கிறாரு.
எங்கிருந்தோ வந்தவரு
ஏழெட்டுத் தலமொறபாத்தவரு

மானம் பொய்ச்சிருச்சு
மழதண்ணி நின்னுபோச்சு
வெவசாயம் நின்னுபோச்சு
சனங்களல்லாம் சரிஞ்சுபோச்சு

அய்யனாருக்கிட்ட
அழுதுபொலம்பி
ஆடுவெட்டி பூசைபோட
அம்புட்டும் நேந்தாச்சு

அய்யனாரு பாத்தாரு
அல்லா கூடப்பேசுனாரு.
அரபு நாடுகள்ல வேலை இருக்குன்னு
ஆளுகளைஅனுப்பிச்சாரு

சம்பாரிக்க போனவங்க.
குடும்பம் காக்க
சாமியா அருவாளோட
நிக்கிறாரு

மானம் திரும்பிட்டுச்சு
மழதண்ணி நெறஞ்சிடுச்சு
கம்மா நெறஞ்சிடுச்சு
கரையெல்லாம் முங்கிடுச்சு

விட்டுப்போன அய்யனாரும்
வெளச்சல் காண வயக்காடும்
பொண்டுபிள்ளைகளும்
மேலயே பாத்துக்காத்துக் கெடக்கு

வானம். வழியா வந்து எறங்கி
போனவங்க திரும்பிவந்து
பொங்கவைச்சி
வெளச்சலாகும்

சக்கரைப் பொங்கலும் கெடாவெட்டும்
நடக்குமுன்னு
ஆனா அதுக்குள்ள
ஊரு பூராம் வேலநடக்குது

அஸ்ஸாமில இருந்து ஆளுக வந்து
அழகழகா வீடு கட்டி
ஆர்பாட்டமாக் குடியேறிட்டானுக
மாங்கிலாலும் மாகாவீர் சேட்டும்

**அ.முத்துவிஜயன்**

# மரணிக்க வேண்டிய மரணங்கள்

## மாலதி சந்திரசேகரன்



தன்னுடைய குவார்ட்டர்சுக்கு வந்தும், ஷர்மிளாவிற்கு மருத்துவமனையில் பார்த்த இருளாயியின் ஞாபகமாகவே இருந்தது. அவளை எங்கே பார்த்திருப்போம். கல்யாணத்திலா இல்லை யாராவது அவள் சாயலில் இருக்கிறார்களா? இப்படி மனது அசை போட்டுக் கொண்டிருந்தது. எங்கோ பார்த்த அந்த முகம் . தன்னை விட இரண்டு அல்லது மூன்று இன்ச் உயரம் கூடுதலாகவே இருப்பாள். பணிவான பேச்சு. அன்பான சொற்கள். டாக்டரம்மா, டாக்டரம்மா என்று நொடிக்கு நூறு தரம் கூப்பிடும் அந்த அந்நியோன்னியம். எதனால் அவளுக்கு தன்மேல் மேல் இப்படி ஒரு ஈடுபாடு ஏற்பட்டது என்பது ஷர்மிளாவிற்குப் புரியவில்லை.

ரவுண்ட்ஸ் ஐ முடித்துக்கொண்டு, தன் இருக்கைக்கு போக வேண்டுமென்றால் , மார்ச்சுவரியைத் தாண்டித்தான் செல்ல வேண்டும். ‘‘டாக்டரம்மா’’ என்கிற குரல் கேட்டு சற்று நின்றாள் ஷர்மிளா.

‘‘எம் பேரு இருளாயி, டாக்டரம்மா. நான் இங்கதான் வேலை செய்கிறேன்’’ என்றாள் ஒரு பெண்மணி. ஆமோதிப்பது போல் தலையை அசைத்து விட்டு ஒரு சிரிப்பையும் உதிர்த்துவிட்டு அங்கிருந்து நகர்ந்தாள். அப்பொழுதிலிருந்து தொடங் கியதுதான் யாரிந்த இருளாயி யாரிந்த இருளாயி என்கிற ஒரு கேள்விக் குடைச்சல்

மறுநாள் காலை சீக்கிரமாகவே மருத்து வமனைக்குச் சென்று விட்டாள்.

அன்று பிணக்கூறாய்வு செய்ய வேண்டியது அவளுடைய முறை. அறையில் அமர்ந்திருந்த பொழுது,

‘உள்ளே வரலாமா’? என்று கேட்ட குரலுக்கு உரிமையாளர் யார் என்று நிமிர்ந்து பார்த்தாள். ஒரு காவல்துறை அதிகாரி.

‘எஸ் கம் இன் ‘என்றபடி எதிர்ப்புறம் இருந்த நாற்காலியை காண்பித்தாள்.

‘டாக்டர் என் பெயர் சண்முகம்’ என்றார்.

அவர் கையில் அரசு முத்திரையுடன் இருந்த பேப்பர் ஒன்று அவளின் பார்வைக்கு கொடுக்கப்பட்டது. படித்துப் பார்த்தாள்.

‘ இன்றைக்கு போஸ்ட்மார்ட்டம். அதற்குண்டான ஆவணத்தை கொடுக்க த்தான் வந்தேன் ‘என்றார்.

‘எஸ் ஐ நோ. சடலம் எதுவென்று எங்களுக்கு தெரியும் என்றாலும் முறைப்படி நீங்கள் அடையாளம் காட்ட வேண்டும் இல்லையா? வாங்க.’ என்றாள்.

பிணக்கூறாய்வு செய்யவேண்டிய அறைக்கு சென்றாள். ஒரு ஆணின் சடலம் பென்ச்சின் மேல் கிடத்தப்பட்ட து.. உடலில் ஒட்டுத் துணி இல்லை. உடலெல்லாம் பாதி கருகிய நிலை. தற்கொலை என்று போலீஸ் தரப்பில் முடிவான ஒரு சமாசாரம்.. கூடுவிட்டு ஆவி போனபின் மானம் ,அவமானம் இதற்கெல்லாம் இடம் எங்கே இருக்கிறது?

‘இருளாயி, டோக்கனைப் பாரு. என்ன நம்பர்ன்னு பார்த்து சொல்லு.’ என்றாள். சடலத்தின் கால் கட்டை விரலில் கட்டி விடப்பட்டிருந்த டோக்கனைப் பார்த்தாள், இருளாயி.

‘முப்பது டாக்டரம்மா’.

கையில் இருந்த மருத்துவமனை ரெக்கார்டில் சரி பார்த்தாள், ஷர்மிளா. அதிலும் முப்பது என்றுதான் இருந்தது. தீக்குளித்து தற்கொலை என்கிற விபரமும் போலீஸ் தரப்பு ஆவணத்திலும் இருந்தது.

கூராய்வு செய்யப்படும்பொழுது அணிந்து கொள்ளவேண்டிய கவச உடுப்பு, ஷூ இத்யாதிகளை அணிந்து கொண்டாள். அதற்குள் மருத்துவம் பயிலும் மாணவர்கள் இருவரும் உதவியாளர்களும் வந்தார்கள்.‘ குடும்பத்தில் யாராவது வர வேண்டியிருக்குதா’ என்று கேட்டாள் ஷர்மிளா.

‘இல்ல டாக்டரம்மா. வயசான அம்மா மாத்திரம் தான் இருக்காங்க. அவங்க உள்ளே வந்து பாக்குறதுக்கு கஷ்டப்படுறாங்க. வரலைன்னு சொல்லிட்டாங்க’.

‘டாக்டர் இது ஒரு ட்ரான்ஸ் ஜெண்ட ரோட பிணம். பதினஞ்சு வயசு தான் ஆகுது. அக்கம்பக்கத்துக் காரங்க, உறவுக்காரங்க எல்லாருமே நிராகரித்ததால் இந்த முடிவு எடுத்துகிட்டான்.. மண்ணெண்ணெய ஊத்தி தீக்குளிச்சுட்டான், ஈவினிங் ஃபோரோ க்ளாக்குக்குள்ள ரிப்போர்ட் வேணும் டாக்டர்’ என்றார், காவல்துறை அதிகாரி.

தெரியும் என்பதுபோல் தலையை ஆட்டிவிட்டு ,தன் பங்கு சேவையைத் தொடங்கினாள், ஷர்மிளா. டாக்டருக்குத் தோதாக, கத்தி, ஆக்ஸா பிளேடு, கிருமி நாசினி எல்லாவற்றையும் உடனுக்குடன் எடுத்து கொடுத்து உதவி செய்து கொண்டிருந்தாள் இருளாயி.

‘டாக்டரம்மா, சீக்கிரம் நம்ம ஊர்ல ‘‘விர்ச்சுவல் அட்டாப்ஸி’’ முறை வந்துருச்சுன்னா, இந்த மாதிரி அறுக்கிற வேலை உங்களுக்கு இருக்காது இல்லையா? பலவிதமான ஸ்கேன் மிஷின்கள் தான் வந்திருக்கு தாமே. அதே பண்ணிடுமாமே எல்லாத்தையும். கேள்வி பட்டேன் டாக்டரம்மா’ என்றாள் இருளாயி.

இவ்வளவு தூரம் விஞ்ஞான முன்னேற் றத்தைப் பற்றி ஒரு கீழ்நிலை ஊழியர் பேசுவதைக்கேட்டு,ஷர்மிளா,காவல்துறை அதிகாரி, உதவியாளர்கள் எல்லோருமே வியப்போடு இருளாயியைப் பார்த்தார்கள். அன்றைய தினமே நிச்சயம் இருளாயியைப் கூப்பிட்டு, அவளைப் பற்றி விசாரிக்க வேண்டும் என்கிற எண்ணம் இத்தனை வேலைகளுக்கு நடுவிலும் ஷர்மிளாவுக்குத் தோன்றியது.

கிடத்தப்பட்டிருந்தசடலத்தின்,இரண்டு தோள் பட்டை பக்கங்களிலிருந்தும் ‘வி’ போன்ற கீறல்களை ஏற்படுத்தி, அப்படியே ஒரே கோடாக அடிவயிறுவரை மேல்தோலை கிழித்தாள். எப்படியும் குறைந்தது ஒரு மணி நேரமாவது பிடிக்கும்.

' சி .என். எஸ். டேமேஜ்ட் ' ,ஆய்வு செய்து ஷர்மிளா சொல்லிவந்த குறிப்புகளை, மாணவர்கள் தங்கள் குறிப்பு புத்தகங்களில் எழுதிக்கொண்டார்கள்.போஸ்ட்மார்ட்டம் சிரமமாக இருக்கவில்லை. சுலபமாக முடித்துக் கொண்டு, கிழித்த சடலத்தை தைக்கும்படி உதவியாளர்களிடம் கூறி விட்டு,

'ரிப்போர்ட்டைசிஸ்டத்தில்ஏற்றிவிட்டு பிரிண்ட் அவுட் எடுத்து என்னிடம் கையெழுத்து வாங்கிக் கொள்ளுங்கள்' என்று மருத்துவ மாணவர்களிடம் கூறிவிட்டு, கைகளை கழுவச் சென்றாள், ஷர்மிளா.

இனி பிணத்தைத் தைப்பது, தைத்ததை வைத்து, ,காடா துணியைச் சுற்றி, கட்டி வைப்பது, எல்லாம் உதவியாளர்களின் பாடு. போஸ்ட் மார்ட்டம் செய்த சடலத்தை உரியவர்களிடம் சேர்க்கும் வேலையை காவல் துறை மேற்கொள்ளும்.

ஷர்மிளா சென்னைக்கு மாற்றலாகி வந்து சிலநாட்கள் தான் ஆகின்றன. மருத்துவத் துறையில் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்ததால் பிணக்கூறாய்வு செய்யும் தகுதியும் ஷர்மிளாவுக்கு இருந்தது. என்னதான் கைதேர்ந்த மருத்துவராக இருந்தாலும், ஒரு பிணத்தை வெட்டி, ஆய்வு செய்வது என்பது அவள் மனதிற்கு சிறிது உறுத்தலாகவே இருந்தது. மருத்து வரான அவளுக்கே அப்படி இருக்கும் பொழுது பெற்றவர்களின் நிலைமையைப் பற்றி கூறவே வேண்டாம். இருளாயி சொன்னதுபோல் விர்ச்சுவல் அட்டாப்ஸி வந்துவிட்டால்,இந்தநெருடல்குறையலாம் என்று நினைத்துக்கொண்டாள்.

மருத்துவமனையின் வளாகத்திற்கு உள்ளேயே ஷர்மிளாவிற்கு உண்டான குவார்ட்டர்ஸ் இருந்ததால் இருளா யியை அங்கு வரும்படிச் சொல்லி இருந்தாள். மாலையில் ஷர்மிளா கூப்பிட்டதையொட்டி, அவள் குவார்ட்டர் சிற்கு இருளாயி வந்தாள்.

டீ உபசாரத்திற்குப் பின்பு ஷர்மிளா, இருளாயியிடம் பேச்சுக் கொடுத்தாள்.

'இருளாயி நான் வந்த அன்னியிலிருந்து பார்த்துகிட்டு இருக்கேன். உன்னை எங்கையோ பார்த்தாப் போல இருக்குது. நானும் யோசனை பண்ணிப் பண்ணி பார்த்தேன். எனக்கு கவனத்துக்கு வரல. நீ இந்த ஊர்லதான் இருந்துகிட்டு இருக்கியா?'

'நான் இந்த ஊர்லியேதான் இருந்து கிட்டிருக்கேன், டாக்டரம்மா .ஏன் நீங்க கூட சின்ன வயசுல இந்த ஊர்ல தானே இருந்துட்டு இருந்திங்க.'

' ஆமா, உனக்கு எப்படி அது தெரியும்?'

'டாக்டரம்மா என்னை நிஜமாவே உங்களுக்கு அடையாளம் தெரியலையா டாக்டரம்மா.?'

'தெரியவில்லை' என்பது போல் உதட்டைப் பிதுக்கினாள் ஷர்மிளா.

'என்ன டாக்டரம்மா, நான் உங்கள ஞாபகம் வச்சுக்கிட்டு இருக்கேன். நீங்க என்ன மறந்துட்டேன்றீங்களே. இந்த ஊர்ல நீங்க இருக்கும் போது உங்க வீட்ல வேலை பார்த்துட்டு இருந்த பார்வதிய நியாபகம் இருக்கா? அவங்க புள்ள இந்திரன் தான் நான். ஞாபகம் வருதா உங்களுக்கு? எங்க அம்மா உங்க வீட்டுக்கு பலதடவை என்னை கூட கூட்டிக்கிட்டு வந்து இருக்காங்க. அப்படி வந்த போதெல்லாம், நான் பார்க்கிற பொழுது, நீங்க ஒரு டாக்டர் செட்ட வெச்சுக்கிட்டு விளையாடிகிட்டு இருப்பீங்க. 'டாக்டர் பாப்பா.....' அப்படீன்னு நான் கூட உங்களைக் கூப்பிடுவேன். இப்ப என்னை ஞாபகம் வருதா?'

ஆமாம் என்பது போல் நினைவு வந்தவளாக தலையை ஆட்டிக்கொண்டே, 'அப்படி நீ எப்படி இப்படி இருளாயீ..... ஒண்ணுமே புரியல. ஆனா முதல்ல

உன்னை பார்த்த நாளிலிருந்து எங்கேயோ பார்த்த கவனம் மட்டும் என் மனசுல அரிச்சுகிட்டே இருந்தது.'

' அதை ஏன் கேக்குறீங்க டாக்டரம்மா. இன்னிக்கு ஒரு போஸ்ட் மார்ட்டம் பண்ணினீங்களே, அந்த மாதிரி நிலைமை தான் எனக்கு இருந்தது. உங்க அப்பாவுக்கு மாத்தலாயி நீங்கள் வெளியூர் போயிட்டீங்க. உங்களுக்குத் தெரிஞ்சிருக்க நியாயமில்லை. பதிமூணு வயசில எனக்கு குரல் மாறிப் போய் பொம்பள குரல் வந்துடுச்சு.நடை உடை எல்லாம் மாறிடுச்சு. எனக்கு பொம்பள மாதிரி வேஷம் போட்டுக்கணும்னு ஆசை வந்துருச்சு. வீட்டில சொன்னால் திட்டு, அடி, உதை. அதைத் தவிர வேற ஒண்ணும் கிடைக்கல. பெத்தவங்க உறவுக்காரங்க, ஸ்கூல் ஃபிரண்ட்ஸ் எல்லோருமே வெறுக்க ஆரம்பிச்சாங்க. எல்லோரும் என்னை பல பேரு வச்சு கூப்பிட்டாங்க. அப்பா அம்மாவே என்னை வெறுக்கும் போது நான் என்ன பண்ண முடியும்? வீட்டை விட்டு வெளியே வந்துட்டேன். '

' அப்புறம் என்ன ஆச்சு? சாப்பாட்டுக்கு என்ன செஞ்ச? எங்க இருந்த?'

'இந்த உலகம் ரொம்ப மோசமானது டாக்டரம்மா. வீட்டை விட்டு வெளியே போனா,எங்களமாதிரிஆட்களுக்குபிச்சை எடுக்கிறது, பாலியல் தொழில் பண்றது இதைத்தவிர வேற வழியே இல்லாம போயிடுச்சு. அந்த சூழ்நிலைக்கு நானும் தள்ளப்பட்டேன். அப்பதான் என்னை மாதிரி ஆளுங்களை வச்சு காப்பாத்தற தெய்வம் போல ஒரு அம்மாவ பார்த்தேன். அவங்க தான் சாப்பாடு போட்டு தங்க இடமும் கொடுத்தாங்க. பூனாவுக்கு போய் ஆபரேஷன் செஞ்சுகிட்டா பொம்பளையா மாறலாம், அப்படின்னு சொன்னாங்க. எனக்கு ஆணா இருக்க பிடிக்கல. பொம்பளையா இருக்கத்தான் பிடிச்சது.'

'அப்புறம் '

'அவங்க கூட்டத்தோட நானும் சேர்ந்துட்டேன்.. பூனாவுக்கு போய் ஆபரேசன் பண்ணிக்கிட்டு வரதுக்கும் அந்த அம்மாவே பணம் கொடுத்து ஒத்தாசை பண்ணினாங்க. கவர்மெண்ட்ல ஃப்ரீயாவே இந்த ஆபரேஷன் பண்றது உங்களுக்கு தெரியுமே டாக்டரம்மா. அந்த மாதிரிதான் பண்ணிகிட்டேன். கரெஸ்ல டிகிரிய முடிச்சேன். எம்ப்ளாய் மெண்ட் எக்ஸ்சேஞ்சில பதிவு பண்ணி யிருந்தேன். அது மூலமா எனக்கு கவர்மெண்ட் உத்தியோகம் கிடைச்சுது. இந்த ஆஸ்பத்திரியிலேயே வேலையும் கிடைச்சுது. இந்திரன்ங்கிற பெயரை கெசட்ல, இருளாயி அப்படீன்னு மாத்திக் கிட்டேன் '

' அம்மாடீ கேட்க பிரமிப்பா இருக்கு, இந்திரா.'

'இன்னிக்கு தீயில வெந்து செத்தானே, அந்த மாதிரி நான் கோழையாய் இருக்க விரும்பல டாக்டரம்மா. அடுத்ததா, டி.என்பி.எஸ்.சி. பரீட்சையும் எழுதப் போறேன். இப்பவும் மேல படிச்சுக்கிட்டு தான் இருக்கேன். நான் பெரிய ஆளா வந்தா, அன்னிக்கு என்னைக் கேலி செஞ்சவங்க எல்லாம் எனக்கு முன்னாடி கைகட்டி வாய்பொத்தி நிப்பாங்க. எல்லாத்துக்கும் வழி இருக்குது டாக்டரம்மா. நாம்ப அத அழகா உபயோகப் படுத்திக் கொள்றதிலதான், திறமை அடங்கி இருக்கு. நான் சொல்றது சரிதானே டாக்டரம்மா?'

இருளாயியை வியப்போடும் ஆச்சரி யத்தோடும் பார்த்தாள், ஷர்மிளா. அவளின் மனத் திண்மை போற்றத் தகுந்ததாய் இருந்தது. இந்த மனோதிடம் ஒவ்வொரு வரிடமும் இருந்துவிட்டால் எந்த நிலையிலும் யாரும் தன்னை குறைவாக எடை போட்டு கொள்ளவே மாட்டார்கள். தன்னுடைய குறைகளுக்கு மரணம்தான் முடிவு என்கிற முடிவிற்கும் வர மாட்டார்கள்.

‘இந்திரா... சாரி.. சாரி.. இருளாயி, உன்னுடைய எல்லா முயற்சிக்கும் நான் எப்போதும் உறுதுணையா இருப்பேன்னு நிச்சயமா நம்பு. உனக்கு படிக்கிறதுக்கு புத்தகங்கள் வேணும்னா என்னை கேளு .நான் வாங்கித் தரேன். வேறு ஏதாவது உதவி வேணும்னாலும் என்னை வந்து கேளு. உன்னுடைய இந்த வாழ்க்கையை, எனக்கு தெரிஞ்சவங்க கிட்ட எல்லாம் சொல்லப்போறேன். இத, நீ, ஒன்ன அவமானப்படுத்துவதா நினைக்க வேண்டாம். சுமுகமான வாழ்க்கை இல்லேன்னா மரணம் தான் முடிவுன்னு பலரும் நினைச்சு வாழ்க்கைய முடிச்சுக்கிறாங்க. அந்த எண்ணம் முதல்ல எல்லார்கிட்டயும் இருந்து ஒழியணும். வாழ்க்கையில எப்படி உயரலாம் அப்படீங்கறதுக்கு நீ ஒரு முன் உதாரணம். அதை எல்லோருக்கும் வெளிப்படுத்தணும். அவ்வளவுதான்’

இருக்கையை விட்டு எழுந்தாள், ஷர்மிளா .

‘இந்த சேர்ல நீ உக்காரு. நான் கீழே உட்கார்ந்து உங்ககிட்ட கேட்டுக்கிறேன். உன்ன மாதிரி வாழ்க்கையை ஒவ்வொத் தரும் எதிர்கொண்டா, தோல் விங்கிற வார்த்தையே அகராதியிலிருந்து காணா மப்போயிடும். ஹாட்ஸ் ஆஃப் டு யூ. உனக்கு நானொரு சகோதரி இங்கு இருக்கிறேன். மறந்து விடாதே’.

ஏற்றமும் தாழ்வும் இருப்பதுதான் வாழ்க்கை. அதைப் புரிந்துகொண்டு ஏற்றம் வரும்பொழுது சந்தோஷமாக இருப்பதும் தாழ்வு வரும்போது எதிர்கொள்ளத் தெரியாமல் தவிர்பபதும் அதிலிருந்து மீண்டு வர முடியாமல் இருந்தால் மரணத்தைத் தழுவுவதும் இன்றைய பதின் பருவத்தினருக்கு இயற்கையான சுபாவமாக இருந்து வருகிறது. அவர் களைப்போன்றவர்களுக்கு, இருளாயி ஒரு முன் உதாரணமாக இருப்பாள் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

■

# நேச முள்ள நெஞ்சு ஒன்று தேவை

சேர்த்து வைத்த தொன்று மில்லை
சேர்க்க மனம் எண்ண வில்லை
ஏற்கவில்லை என்மனது வாட
ஏற்புடைய ஒன்று யில்லைத் தேட!

வேர்த்து மனம் சாய்ந்த தில்லை
வேதனைத் தோள் கண்ட தில்லை
தூர்ந்த தில்லை எந்தன் மனக்கேணி
துவண்ட தில்லை ஒருபொழுதும் நாணி!

பா வெழுதி பந்தி வைத்தேன்
பல நூல்கள் பொந்தி வைத்தேன்
நானு முத அத்தனையும் பொன்னு
நானி லையேல் ஏதுயிந்த மண்ணு!

ஆசை யில்லை அடக்கி வைக்க
அணுக்களை நான் முடக்கி வைக்க
நேச முள்ள நெஞ்சு ஒன்று தேவை
நித்தம் செய்வேன் அதற்குதானே பூஜை!

**பொன்மணிதாசன்**

# எனையீர்த்த தன்முனைகள் – 1



தன்முனைக் கவிதை என்பது ஒரு தவம். வாசித்தவுடன் ஒருநொடி வாசிப்பவரை சிந்திக்கச் செய்யும் வண்ணம் இருப்பின் அதுவே ஆகச்சிறந்த கவிதை,

- கவிஞர். அன்புச்செல்வி சுப்புராஜூ

ஆயிரக் கணக்கானோரை
எழுப்ப வேண்டும்
மரணத்திற்கெதிரான மருந்து
யார் கையில் இருக்கும்?

– முனைவர் ம.ரமேஷ்.

கொரோனா காலக்கட்டத்தில்... மருந்துக்காக கோடிகளைக் கொட்டிக்கொண்டு மூலைக்கு மூலை... எத்துனை பேர் அலைந்தோம்... கவிதை படிக்கையில்... கண் முன்னே கசங்கும் இதயம்... வாசித்தவுடன் ஒருநொடி வாசிப்பவரை சிந்திக்கச் செய்யும் வண்ணம் மட்டுமா... அழவைக்கிறது இத்தன்முனை. அதுவே ஆகச்சிறந்த கவிதையாய்...

வரிக்கு இரண்டு அல்லது மூன்று எளிய சொற்கள் கொண்டு நான்கு வரிகளில் எழுதவேண்டும். கூடுமான வரையில் கூட்டுச்சொற்களை தவிர்ப்பது நன்று.

பேருந்துப் பயணத்தில்
ஊசி விற்ற சிறுவன்
தைத்துக் கொண்டே வருகின்றான்
என் பயணம் முழுதும்.

– ஆ.நடராஜன்

மிக எளிய வரிகள்தான்... ஆனால் மனம் தைக்கப்படுகிறது... எளிய வார்த்தைகளில் வலியதைச் சொல்ல.. தன்முனை வடிவம் , எளிதானது மட்டுமல்ல... வலிதானதுமாகும் என்கிறது இச்சிறப்புக் கவிதை...

* உணர்வு மிகு வரிகளுக்குள் நாமும் பயணித்து உள்வாங்கி சொல்ல வரக் கூடிய கருத்துக்களை சிதையாமல் சுருக்கமாகச் சொல்லவேண்டும்.

வண்ணங்களில் சிறந்தது
கறுப்புதான் என்கிறேன்...
காரணம் கேட்கிறீர்கள்
கண் இல்லை எனக்கு.

– செல்வா ஆறுமுகம்

ஆஹா... அய்யா செல்வா
ஆறுமுகத்தின் தன்முனையில்
பயணிக்கையில்... உணர்வுகள்
உறைகின்றன... கண்ணில்லாதோர்க்கு
எல்லாம் ஒன்றுதான்... கருப்பாய்...
நாம்தான் நிறங்களை வைத்துப்
போரிடுகிறோம்... ஆனால் அவர்கள்..
இதைவிட அவர்களின் உணர்வுகளை
எப்படி கவிதையாய் வடிப்பது?

முதலிரண்டு வரிகளில் ஒரு செயல் அல்லது செய்தி குறியீடாக வரவேண்டும். அடுத்த இரண்டு வரிகள் அதைச் சார்ந்தோ முரணாகவோ அமையுமாறு இருப்பின் சிறப்பு .

ஒவ்வொரு சொல்லாக
உதிர்த்துக் கொண்டிருக்கிறாய்
நான் கவிதைகளாகக்
கோத்துக் கொண்டிருக்கிறேன்

– மதுரா

ஒவ்வொரு சொல்லாக
உதிர்த்துக் கொண்டிருக்கிறாய்

பார்த்தீர்களா... சொற்களை உதிர்த்தல் அதுவும் ஒவ்வொரு சொல்லாக ...முதல் செய்தி!

நான் கவிதைகளாகக்
கோத்துக் கொண்டிருக்கிறேன்

அடுத்த இரண்டு வரிகள் அதை ஒட்டியே அமைகிறது...

உன் வேலை உதிர்ப்பது...
என் வேலை கவிதை கோர்ப்பது....
இதைக் குறியீடாகக் பல அர்த்தங்கள் நிறையச்செய்யம் கவிதை... ஆகச்சிறந்த தன்முனையாய்...

8 -12 சொற்கள் என்பதால் தோன்றியதும் பதிவிடாமல் சிறு தெறிப்பு வருமாறு உருவாக்கம் செய்து பதிவிட்டால் ஆகச் சிறந்த கவிதையாக மிளிரும் .

தெரிந்த நண்பர்களைத்
தேடிப் பார்த்தேன்
வறியவன் ஆனதை
உணர்த்திச் சென்றனர்

- இராம வேல்முருகன்,

‘இச்சொல்லை நீக்கி வேறொரு சொல்லை இங்கு அமைத்தால் இக்கருத்தும் அமைப்பும் சிறக்காது’ என்று கருதுமளவிற்கு இன்றியமையாத சொற்சேர்க்கையைக் கொண்டு திகழ்வது கவிதை. படிப்போரும் கேட்போரும் மகிழும் வண்ணம் நல்ல நடையுடையதாக விளங்க வேண்டியது கவிதைக்கு அவசியமானதோர் இலக்கணமாகும். கருத்து, உணர்ச்சி, கற்பனை, வடிவம் ஆகியவற்றால் பிற எல்லாவற்றினும் சிறந்திருக்க வேண்டியது கவிதைக்கு மிகத் தேவையான பண்பாகும். என்ற திரு. நா.நிரோஷ் அவர்களின் கூற்றுப்படி.... தேய்ப்பாய் வெளிப்படுத்தி ஆகச்சிறந்த தன்முனையாய் நம்மை சிந்திக்க வைக்கும் கவிதை இது.

நன்றி : தமிழ் நெஞ்சம் - இணையப்பக்கம் மற்றும் அமின் அய்யா. எழுத்தாளர்களின் வேடந்தாங்கலான தமிழ்நெஞ்சம் மின்னிதழுக்கும் என் வணக்கங்கள்.அதிலிருந்து எடுக்கப்பெற்ற தன்முனைக்கவிதைகளையே இங்கு இணைத்துள்ளேன்.

இன்னும் நிறைய கவிதைகள் உள்ளன... சிறு சிறு தொகுப்பாய், வாசக விருப்பத்தின் பேரில் வெளியிடலாம் என நினைக்கிறேன்.

நன்றிகளுடன்,

ராஜூ ஆரோக்கியசாமி
திருச்சி, தமிழ்நாடு, இந்தியா.

# ஈகை!

## கவித்திலகம் வெற்றிப்பேரொளி

●
இதயத்தின்
ஈரச்சுரப்பு
ஈகை!

●
ஈகைக்கு இரு கை...
கொடுக்கும் கை
வாங்கும் கை!

●
ஈதல்
இசைபட வாழ்தல்
தமிழர் ஓதிய மறைமலை!

●
ஈகை என்பது
பொருள் சார்ந்தது அன்று
அருள் சார்ந்தது!

●
ஈகை என்னும்
தோகை விரிக்கும் போது
அழகாகிவிடுகிறது மனம்!

●
ஈகைத் திருநாளும்
ஈகப்* பெருநாளும்
இசுலாத்தின் இரு கண்கள்!

●
ஈகைத்துவம் என்பதைத்
தவமாகக் கொண்டவர்களுக்கு
மகிழ்ச்சி வாழ்வே வரம்!

●
பசிக்கெதிரான
பகைப்பிரகடனமே
ஈகை!

●
வறுமை கொண்டிருக்கும் - தன்
வளமையும் ஒருபங்கு ஈவதே
ஈகைத்திருநாள்!

●
ஏழையின் சிரிப்பில்
இறைவனைக் காணும்
முயற்சிக்குப் பெயர்
ஈகை!

●
வள்ளுவன் கொண்ட
133 அதிகாரங்களில் ஒன்று
ஈகை!

●
ஈகைக்கு
அடுத்த அதிகாரம்
புகழ்! - ஆம்....
ஈகையாளரைத்
தேடி வரும் புகழ்!

●
ஈகைக்கு
வள்ளுவனின
வகுத்த இலக்கணம்
"வறியார்க்கு ஒன்று ஈவதே
ஈகை!"

●
ஈகை ஈகை ஈகை
இயலாதெனில்
சாகை சாகை சாகை!**

( பொருள் )

* *ஈகம்.... தியாகம்*
** *சாகை.... சாதல்*

நேர்காணல்



# கரிசல்காட்டுக் கவிதைச்சாரல்

கரிசல்காட்டு மண்ணில் பிறந்து ஏதுமறியாத பெண்ணாக வளர்ந்து திருமணமாகி இனிமையான திருமண வாழ்க்கை சென்றுகொண்டிருந்தபோது கணவரின் எதிர்பாரா மரணம் வாழ்க்கையைப் புரட்டிப்போட்டாலும் தனது விடாமுயற்சியாலும் தளராத தன்னம்பிக்கையாலும் வாழ்க்கையில் படிப்படியாக முன்னேறி தனது மகனைத் தன் கணவர் ஆற்றிய காவல்துறைப்பணிக்கே அனுப்பி, தானும் ஒரு அரசு பள்ளியின் தலைமை ஆசிரியராக முன்னேறி சாதனைப் பெண்மணியாகத் திகழ்வதோடு மட்டுமல்லாது தமிழ்மொழி மீது கொண்ட தாளாத பற்றினால் தமிழ்ச்சங்கம் போல ஒரு அமைப்பை நிறுவி ஆண்டுதோறும் விழா எடுத்து நூற்றுக்கணக்கான கவிஞர்களை உருவாக்கும், ஆதரிக்கும், வளர்க்கும், ஊக்குவிக்கும் பணியை ஆற்றிவருகிறார் கவிதைச்சாரல் சங்கத்தின் நிறுவுநரும் வடக்குப் பட்டு அரசினர் உயர்நிலைப்பள்ளியின் தலைமை ஆசிரியருமான திருமதி பேச்சியம்மாள் ப்ரியா அவர்களின் நேர்காணல்.

நேர் கண்டவர் : பாவலர்மணி இராம வேல்முருகன்

வணக்கம் சகோதரி

தமிழ்நெஞ்சம் இதழ் சார்பாக இனிய வணக்கங்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வணக்கம் சகோதரா. தமிழ் பேசும் அனைத்து உறவுகளுக்கும் என் இதயம் கனிந்த வணக்கத்தையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.தமிழ்நெஞ்சம்இதழ் சார்பாக உங்களோடு கலந்துரையாடுவதில் பெரு மகிழ்வடைகிறேன்.

1. தங்கள் சொந்த ஊர் எது? தற்போது எப்படி சென்னையில் பணியாற்றுகிறீர்கள்?

எனது சொந்த ஊர் தூத்துக்குடி மாவட்டத்தில் விமான நிலையம் அருகில் உள்ள பொட்டலூரணி என்ற குக்கிராமம். நான் அரசு உயர்நிலைப் பள்ளியில் பதினெட்டு ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணியாற்றி பதவி உயர்வில் உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியில், தென்மாவட்டங்களில் காலிப் பணியிடம் இல்லாததால் சென்னையை ஒட்டிய காஞ்சிபுரம் மாவட்டத்தை தேர்ந்தெடுக்கும் சூழல் உருவாயிற்று.

2. உங்கள் பெற்றோர் கணவர் குடும்பம் பற்றி ஒரு சில வார்த்தைகள்..

எனது தந்தை திரு ஆ. இராமசாமி. தாயார் திருமதி மு. சிவஞானம். இருவரும் ஆசிரியர்களாகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர்கள். பெற்றோர்களுக்கு எட்டு பிள்ளைகளில் நான் மூத்தவள். மூன்று தம்பிகள் இராணுவம். ஒரு தம்பி சுயதொழில். இரண்டு தங்கை கணவர் இராணுவம். எனது கணவரும், அடுத்த தங்கை கணவரும் காவல்துறை.

எனது கணவர் பெயர் சூடாமணி. காவல் துறையில் பல பயிற்சிகளை நிறைவு செய்தவர். மனேசார் கமாண்டோ பயிற்சி முடித்தவர் என்பது குறிப்பிடத் தக்கது. காவல்துறையில் கமாண்டோ ஆசிரியராகப் பணியாற்றியவர். தூத்துக்குடி மாவட்டத்தின் துப்பாக்கி சுடுதளம் அவரது மேற்பார்வையில் கட்டி முடிக்கப்பட்டது. திறமைமிகுந்த அவருக்கு ஆயுட்காலம் அதிகமில்லை. சாலை விபத்து ரூபத்தில் அவரை இழக்கும் நிலை எனது முப்பத்து இரண்டு வயதில் ஏற்பட்டது.

3. ஆசிரியராகப் பணியாற்றும் உங்களுக்கு எவ்வாறு ஒரு கவிதைக்குழுமம் தொடங்க வேண்டும் என்ற எண்ணம் வந்தது?

எனது குடும்பச் சூழல் என்றுதான் சொல்ல வேண்டும். கவிதைக் குழுமத்தை நான் முதலிலேயே தொடங்கிடவில்லை. பணியின் காரணமாக குடும்பத்திலிருந்து வெகுதூரத்தில் பணிபுரிந்ததால் மாலை நேரத்தில் பொழுது போக்கிற்காக முக நூலில் நுழைந்தேன். எனது முகநூலில் கவிதைகள் பதிவு செய்தேன். 'வாங்க பேசலாம்' இதழாசிரியர் முதன்முதலில் எனது ஆக்கங்களை மாத இதழில் பதிவு செய்தார். நட்புகளின் அழைப்பினை ஏற்று அவர்களின் முகநூல் குழுமங்களில் பொறுப்பேற்றேன். ஆயினும் என் கவிதை தாகத்திற்கேற்ப செயல்பட முடியவில்லை. ஏனென்றால் கவிதையோடு நூல் வெளியிட வேண்டும் என்ற எண்ணமும் இருந்தது. முகநூல் குழுமம் என்றால் அது புதிய கவிஞர்களை உருவாக்க வேண்டும். கற்றலும் கற்பித்தலும் அங்கே நிகழவேண்டும். நிறைய எழுத்தாளர்கள் உருவாக வேண்டும். அவர்களின் ஆக்கங்கள் நூல் வடிவம் பெற உதவ வேண்டும். அப்போது அவர்கள் முகத்தில் தோன்றும் மகிழ்வைக் கண்டு மகிழ

வேண்டும். இவையெல்லாம் நிறைவேற கவிதைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் குழுமத்தை உருவாக்க வேண்டும். அவ்வாறு உருவானதே கவிதைச்சாரல் சங்கம்.

4. நாவல் எழுதுவதற்கெல்லாம் எவ்வாறு நேரம் ஒதுக்குகிறீர்கள்? நீங்கள் எழுதிய நாவல் குறித்து...

கொரானா காலம் எனக்கு நாவல் எழுதுவதற்கு உதவியது. நான் எழுதிய நாவல்கள் கரிசல் காட்டுக்காவியம், வானம் தொட்டுவிடும் தூரம் தான். இரண்டு நாவலுமே எங்கள் ஊரில் நடைபெற்ற உண்மைச் சம்பவங்களோடு சேர்ந்து புனையப்பட்ட நாவல்.

கரிசல்காட்டுக்காவியம் நூறாண்டுகால கரிசல் மக்களின்வாழ்வியலைவிளக்குவது. இயற்கையோடு பின்னிப்பிணைந்து மழைக்கும், வெயிலுக்கும் வானம் பார்த்து ஏங்கிக் கிடந்த அவர்களின் விவசாய ஆற்றலை விளக்குவது. இராமையா என்ற இராணுவ வீரரின் காதலை விளக்குவது. இந்திய சீனப் போரை விளக்குவது. கருவேல முள்ளடர்ந்து விவசாயம் அழிந்துவரும் கண்ணீர்க் கதையைச் சொல்லுவது. இன்னும் ஆச்சி சொன்ன கதைகளை சொல்லாமல் விட்டது ஏராளம் ஏராளம்.

வானம் தொட்டுவிடும் தூரம்தான் மாணவர்களுக்கான நாவல். இரட்டைக் குவளை முறை, ஆலய நுழைவு ஆகியவை சார்ந்து நடைபெற்ற நிகழ்வுகளின் புனைவு. சாதியம் ஒழித்த நண்பர்களின் நகர்வு. கரிசலில் மலர்ந்த கள்ளிப்பூ.

5. எந்த மாதிரியான கவிதைகள் தங்களுக்குப் பிடிக்கும் ? ஏன்?

மரபு, புதுக்கவிதை இரண்டும் பிடிக்கும். ஆனால் பேருந்து நிறுத்தத்தில் ஏறி ஒரு கிலோமீட்டர் தூரத்தில் மறுநிறுத்தத்தில் இறங்குவதற்குள் ஒரு புதுக்கவிதை படைத்திட முடிகிறது. இலக்கண முறைப்படி அமைய வேண்டுமென்பதால் மரபுக்கு சற்று நேரம் ஒதுக்கத் தானே வேண்டும். அதனால் அதிகம் பிடிப்பது புதுக்கவிதைகளே...

கருத்தைப் பொறுத்தவரை பெண்ணியத்திற்கு பங்கம் ஏற்படுத்தாத கவிதைகள் அனைத்தும் பிடிக்கும். காதல் என்ற பெயரில் அடிமைத்தனம் பாடும் கவிதை பிடிப்பதில்லை. சமூகத்தில் ஒரு மாற்றம் வேண்டுமென்றால் அது கவிதையில் முதலில் வேண்டும். எதுகையும், மோனை

மகனுடன் கவிஞர் பேச்சியம்மாள் ப்ரியா





யும் இயைந்து நடந்திட சந்தச்சுவை சிந்தும் மண்மணப் பாடல்கள் மனதைக் கவரும்.

6. நிறைய புத்தகங்களை வெளியிடு கிறீர்கள். எவ்வாறு நேரங்களை ஒதுக்கி இந்தப் பணிகளைச் செய்ய இயல்கிறது?

எனது தனிமைக்கு மொழி துணை சேர்கிறது. பள்ளி நேரம் தவிர தூக்கம் கண்களைத் தழுவும் வரை தமிழே எனது தோழி. கவிதைச் சாரல் சங்கத்தின் நோக்கங்களுள் தலையாயது நூல் வெளியீடு.

எனது முதல் நூல் நான் வெளியீடு செய்த போது நூல் தயாரிப்பு பணி என்பது கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போல் இருந்தது. நிறைய அலைச்சல். பொருட்செலவு. காலதாமதத்தின் காரண மாக மன அழுத்தம்.

புதிதாக நூல்வெளியிட நினைக்கும் எழுத்தாளர்களுக்கு குறிப்பாக பெண் எழுத்தாளர்களுக்கு இந்நிலை ஏற்படாமல் இருக்க உதவ வேண்டும் என்று நினைத் தேன் விளைவே அதிக நூல் வெளியீடு. நேரம் ஒதுக்குவது அவ்வளவு சிரமமாகத் தெரியவில்லை. தொலைக் காட்சியில் செய்தி தவிர வேறெதுவும் பார்ப்பதில்லை. தூக்கம் ஆறுமணி நேரம் மட்டுமே. இதனால் இப்பணி சாத்தியமாகிறது.

7. ஒரு பெண்ணாக இப்பணிகளைச் செய்வதில் எம்மாதிரியான இடர்பாடு களைச் சந்திக்கிறீர்கள்? எவ்வாறு அவற்றை எதிர்கொண்டு சமாளிக்கிறீர்கள்?

ஒரு பெண்ணாக கவிதைச்சாரல் சங்கத்தை நிருவகிப்பதில் பெருமை கொள்கிறேன். சுயநலமற்று மொழிச் சேவையாற்றும் பதினைந்து நிருவாகி களும் ஆண்டு முழுவதும் நல்கும் ஒத்துழைப்பு கவிதைச்சாரலின் வளர்ச் சிக்கு பெருந்துணை புரிகிறது. என்னோடு துணை நிற்கும் கலைவாணி சுரேஷ் பாபுவின் விழாக்கால சேவை மகத்தானது. கவிதைச் சாரல் சங்கத்தின் நிருவாகத்தில் உள்ளவர்கள் ஒரு குழுவல்ல குடும்பம்.

இடர்பாடுகள் என்று எதைச் சொல்வது? சாதாரணமாக ஒருவர் முன்னேறினாலே பொறாமை உள்ளவர்களுக்கு பொறுத்துக் கொள்ள இயலாது. இதில் ஆண் பெண் பேதமில்லை. அதுவும் பொதுச் சேவையில் விமர்சனங்கள் எழுவது இயல்பு தானே...! எங்கள் சேவையைப் பாராட்டி விழாக் காலங்களில் விழாவிற்கென நன்கொடை நல்கும் நண்பர்களும் உண்டு. எந்தப் பங்களிப்பும் இல்லாமல் மாபெரும் கவிஞரான தன்னை தலைமைக்கு அழைக்கவில்லை என்று வேறுவகையில் விமர்சனம் செய்யும் சூத்திரதாரிகளும் உண்டு. சிறு உதவி செய்துவிட்டு

பெண்களைவிடத் தன்னையே முதன்மைப் படுத்தி சிறப்பிக்க வேண்டும் என விவாதிக்கும் மேதைகளும் உண்டு.

இவை எல்லாவற்றையும் தாண்டி எங்களுக்கு ஆதரவும், பாராட்டும் தந்து ஊக்கப்படுத்தும் நல்லுள்ளங்கள் அதிக மிருப்பதால் இந்த இடர்பாடுகள் எங்களுக்கு பெரிதாகத் தெரிவதில்லை. உளி தாங்கும் கல்தானே சிலையாகின்றது? சிறுசிறு குறைகளையும் களைந்து அடுத்தடுத்த மொழிச்சேவையில் எங்கள் பணி புடமிட்ட பொன்னாக மின்னும் என்ற நம்பிக்கைப் பாதையில் நடைபோடுகிறோம்.

**8. ஆசிரியராக, தலைமை ஆசிரிய ராகப் பணியாற்றும் போது தாங்கள் சந்திக்கும் சவால்கள் யாவை?**

எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பணி எவ்வளவு சவால்கள் நிறைந்ததாயினும் அதை ஏற்றுக்கொண்டு வெற்றிநடை போடுவதே எனது இயல்பு. நான் தமிழாசிரியராகப் பணியாற்றிய காலங் களில் 95% குறையாமல் தேர்ச்சி விழுக்காடு இருக்கும். பட்டதாரி ஆசிரியர் பணியில் இருக்கும் போதே முதுகலை தமிழாசிரியர் இல்லாத நிலையில் கூடுதல் பணியாக மேனிலை மாணவர்களுக்கு தமிழ் போதித்து தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் நூறு சதவிகித தேர்ச்சி கொடுத்துள்ளேன்.

கல்வியோடு மட்டுமின்றி கும்மி, நாட்டுப்புற நடனம் முதலியவற்றில் மாணவிகளுக்கு பயிற்சி கொடுத்து மாவட்ட அளவில் முதலிடம் பெறச் செய்துள்ளேன். இவையாவும் நான் மொழியிலும், கலை

மேனாள் காவல்துறை அதிகாரி திரு திருஞானம் யாதுமரியான் அவர்களுடன் கவிஞர்



யிலும் கொண்ட ஈடுபாட்டால் எனக்குக் கிடைத்த வெற்றியெனவே மகிழ்கிறேன்.

அரசு ஊழியர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் ஆறுமுறை மாவட்ட அளவில் முதலிடம் பெற்றுள்ளேன்.

தலைமையாசிரியர் பணியும் சவால்கள் நிறைந்ததே... இடைநிற்றல் இல்லாமல் மாணவர்கள் தொடர்ந்து பள்ளிவர வேண்டுமாயின் ஆசிரியர்களும், தலைமையாசிரியரும் சிறப்பாக செயலாற்ற வேண்டும். எனது பள்ளியில் மாணவர்கள் இடைநிற்றல் இருக்காது.

மாணவர்களுக்கு பள்ளி நேரத்தையும் கடந்து கராத்தே, யோகா, சிறப்பு வகுப்பு நடத்தி முழுத்தேர்ச்சிக்கு பாடுபடுகிறோம். கலைத்திருவிழாவில் மாவட்ட அளவில் வெற்றிபெற்று மாநில அளவில் மாணவிகளைத் பங்கு பெறச் செய்தது வெற்றியே...

9. பொதுவாக இடமாற்றத்தின்போது எவ்வாறு மாணவர்களைப் பிரியும்போது ஏற்படும் துயரத்தைக் கடந்து செல்கிறீர்கள்?

என்னிடம் பயிலும் மாணவிகள் பதவி உயர்வு என்பதையும் மனதில் கொள்ளாது "எங்களை விட்டுப் போகாதீர்கள் அம்மா" என்று கெஞ்சும் நிலையே ஏற்படும். மற்ற பாடஆசிரியர்களைவிடதமிழாசிரியர்களை பிரியும் போது அதிகத் துயர் அடைவார்கள். மற்ற பாட ஆசிரியர்களை 'டீச்சர்' என்றும் தமிழாசிரியர்களை 'அம்மா' என்றும் அழைப்பதும் உண்மையில் தாய் - குழந்தை ஈடுபாட்டை ஏற்படுத்திவிடுகிறது. சில நாட்கள் குழந்தையைப் பிரிந்த தாயின் மனநிலையே தொடரும். காலம் எல்லாவற்றிற்கும் அருமருந்தாக அமையும்.

10. ஆசிரியர் பணியோடு தமிழுக்கான சேவை எவ்வாறு நேரம் ஒதுக்குகிறீர்கள்?

எனது ஆசிரியர் பணியும் தமிழ் சார்ந்ததே என்பதால் எனது வாழ்நாளின் முழுநேரமும் தமிழுக்கான சேவையாகவே அமைவதில் பெருமகிழ்வு. நான் விடும் மூச்சே தமிழாக நிறைந்திருக்க வேண்டும்
.

11. தூத்துக்குடி பற்றி...

பாரதி, வஉசி பிறந்த மாவட்டம். உப்பு விளைத்தல் முக்கியத் தொழில். ஐவகை நிலமும் அமைந்த மாவட்டம். அடர் சிவப்பு நிறமுடைய தேரி மண்ணும், அடர் கருப்பு நிறமுடைய கரிசல் மண்ணும் சிறப்பு. தாமிரபரணி பாய்ந்து நெல்விளையும் பூமி.

'ஜவான்களின் நகரம்' என்று அழைக்கப்படும் முடிவைத்தானேந்தல் உள்ளடங்கிய பதினெட்டு 'பட்டிகள்' உள்ள மாவட்டம். கீழடிக்கு முந்தைய நாகரிகம் உடைய 'சிவகளை' இங்கு உள்ளது. தற்போது அகழ்வாராய்ச்சி தொடர்ந்து நடைபெறுகிறது. பாண்டிய மன்னனின் தலைநகராகவும், துறைமுக நகரமாகவும் இருந்த கொற்கை இங்குள்ளது.

12. தங்கள் குழந்தைகள் பற்றி..

இரண்டு ஆண். ஒரு பெண். மூத்த மகன் கோபால் காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஆசிரியராகப் பணிபுரிகிறார். மகள் சிவாதேவி தூத்துக்குடி மாவட்டத்தில் ஆசிரியராகப் பணிபுரிகிறார். இளைய மகன் இராமசாமி சென்னையில் காவல் துறையில் பணியாற்றுகிறார்.

13. தங்கள் படைப்புகள் பற்றி..

என் மனவானில், ஆவாரம்பூ, ஓரவிழிப் பார்வையிலே, யாதுமாகி, தேன் மழைச்சாரல், மனதின் ஓசைகள், உலகின்

உயிர்ப்பு, இது பெரியார் தேசம் உள்ளிட்ட கவிதை நூல்களும், கரிசல் காட்டுக் காவியம், வானம்தொட்டுவிடும்தூரம்தான் முதலிய புதினங்களும், பதினோரு தொகுப்பு நூலும் படைத்துள்ளேன்.

தமிழக அரசின் அகரமுதலி ஆய்வு மலரில் தொடர்ந்து ஆய்வுக் கட்டுரைகள் படைத்து வருகிறேன். தங்கமங்கை மாத இதழில் 'தாய் வழிச் சமூகம்' என்ற தொடரை இருபது மாதத் தொடராகப் படைத்துள்ளேன். எனது நூல்விமர்சனம், கவிதைகள் தமிழ்நெஞ்சம் மின்னிதழிலும், பல்வேறு இதழ்களில் சிறுகதை, கவிதைகள் வெளிவந்துள்ளன.

### 14. தாங்கள் பெற்ற விருதுகள் பற்றிக் குறிப்பிட இயலுமா?

நிறைய விருதுகள் கிடைத்திருந்தாலும் கரிசல் காட்டுக் காவியம் நூலுக்கான சௌமா இலக்கிய விருதையும், ஆற்றிவரும் தமிழ்ப் பணிக்காக சமீபத்தில் தஞ்சைத் தமிழ் மன்றம் வழங்கிய தமிழ்ப்பணிச் செம்மல் விருதும், உலக மகளிர் அமைப்பு வழங்கிய தமிழகக் குலவிளக்கு விருதும், மதிப்புறு மகளிர் விருதும், அமெரிக்க முத்தமிழ் பேரவை வழங்கிய மதிப்புறு முனைவர் பட்டமும் குறிப்பிடத் தகுந்தவை.

### 15. தங்களுக்குப்பிடித்த கவிஞர்கள் பற்றி...

பாரதியார், பாரதிதாசன். தற்காலக் கவிஞர்களில் கவிதைச் சாரலின் கவிஞர்கள் அனைவரையும் பிடிக்கும்.

### 16. ஒரு சில வார்த்தைகளில்...

1. பெரியார் - பெண்கல்வி
2. அண்ணா - தமிழ்நாடு எனப் பெயர் மாற்றம்

நேர்காணல் செய்யும் தமிழ்ச்செம்மல் இராம வேல்முருகன் அவர்களுடன் கவிஞர் பேச்சியம்மாள் ப்ரியா






கவிதைச்சாரல் விழாமேடையில் கவிஞர்கள் அனுராஜ், ஈழவேங்கை தம்பியின் தம்பி, தமிழ்ச்செம்மல் இராம வேல்முருகன், யாதுமறியான் சிவஞானம், கலைவாணி ஆகியோருடன் கவிஞர் பேச்சியம்மாள் ப்ரியா

3. கலைஞர் - பன்முக வித்தகர், அரசியல் சாணக்கியர்
4. எம்ஜியார் - இயல்பிலேயே உள்ள இரக்க குணம், சிறந்த நடிப்பு
5. ஜெயலலிதா - ஆங்கிலப் புலமை, சிறந்த பெண் ஆளுமை
6. பாரதி - எனது மானசீக குரு
7. பாரதிதாசன் - புரட்சிக் கவிஞர்
8. அன்னை இந்திரா - பெண்மை மிளிரும் பேராண்மை
9. அன்னை தெரசா - மனித நேயத்தின் இமயம்
10. காமராசர் - சம்பாதிக்காத ஒரே முதல்வர். கல்விக்கண் திறந்தவர்.

17. தங்கள் எதிர்கால இலக்கு என்ன?

இறுதி மூச்சுவரை தமிழுக்குச் சேவை செய்வது. கவிதைச்சாரல் மூலமாக கவிஞர் களுக்கு நூல்வெளியீட்டிற்கு உதவுவது.

18. தமிழ்நெஞ்சம் குறித்து தங்கள் கருத்து

பிரான்ஸ் தேசத்திலிருந்து வரும் மின்னிதழ் மட்டுமல்ல பொன்னிதழுங் கூட.... பல கவிஞர்களின் படைப்புகளை உலகறியச் செய்து மகத்தான சேவையை தமிழுக்கு ஆற்றுகிறது. அதன் ஆசிரியர் திருமிகு அமின் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னோடு நேர்காணல் செய்த சகோதரர் இராம வேல்முருகன் அவர்களுக்கும் நன்றியும் வாழ்த்துகளும். வாசிக்கும் உங்களோடும் தமிழால் இணைந்திருப்போம்.

என்றும் தமிழ்ப்பணியில் கரிசல் கானம் இரா. பேச்சியம்மாள், அவரது குழும ஆண்டுவிழாவுக்கிடையே நமக்கும் பேட்டி யளித்த சகோதரி அவர்களுக்கு நன்றி கூறி விடைபெற்று வந்தோம். அவரது தமிழ்ப்பணி மேலும் சிறக்க வாழ்த்துகள் கூறுகிறது தமிழ்நெஞ்சம்.

■



# மாற்றம் தேவை

கருத்தரித்தாய்
மனிதனாய் அவதரித்தாய்
கரு வாசல் மிதித்து
கல்லறை வாசல்
கடக்கும் வரை
கடவுள் போட்டு வைத்த
கணக்கை காலம் கடக்கும் வரை
காலத்தால் கூட
அழிக்க முடியாது
பின்னை ஏன் கலங்குகிறாய் ...
நடப்பது நடக்கட்டும் என்று
விட்டுவிடு...

நீ
முகமூடி போட்டாலும்
மொள்ளத்தனம் போட்டாலும்
முட்களாய் மாறினாலும்
மலரும் மலர்களை
மறைக்க  முடியாது
மடியும் மலர்களை
மறுக்க முடியாது ...
மனிதா நீ
மனித தனத்திலிருந்து
மாறுவது ஏன்...

போர்க்களம் போன்று
பூமியில்
பிறந்த உயிர்கள் அத்தனையும்
போரிடுவதில்லை
எனக்கு உனக்கு என்று
பித்தனாய் போரிடுவது
மனிதனால் மட்டுமே
ஆறடி மண்ணில்
புதைந்து போவது
புரியாமல்...

கோடிக்கணக்கான
சொத்துக்கள் இருந்தாலும்
தெருக்கோடிக்கு
வரத்தானே செய்ய வேண்டும்
பின்னை ஏன்
ஏற்றத்தாழ்வுகள்
ஏழை பணக்காரன் என்று...

எந்த சாதியாக இருந்தாலும்
உயிர் பிரிந்த உடலை
உரிய  சாதிக் கொண்டு
எரிப்பது இல்லை
எரிப்பதற்கு
வெட்டியான் தானே வேண்டும்
பின் ஏன் சாதிய
வன்கொடுமை...

மனிதா மாற்றம்
மண்ணில் வாழும்
மற்ற உயிரினங்களுக்கு
அல்ல...
மனிதனாய் பிறந்த
நமக்கு மட்டுமே
மாற்றம் தேவை...

மாறுவோம்
மண்ணில் மறுமலர்ச்சி
மலர
மாறுவோம்...
இறைவன் படைத்த
இயற்கையோடு இணைந்து
இருப்பவர் இல்லாதவர்க்கு ஈந்து
இன்புற வாழ்வோம்
இறைவனுக்கு நன்றி சொல்லி
வாழ்வோம்...

**கி.அனிதா**
ஆசிரியை, கடலூர்.



# தந்தை

அண்டத் திறைவன் என்றே
அகிலம் போற்றும் தந்தை
எண்ண மினிக்கப் பேசி
என்றும் துணையா யிருப்பர்
தன்னை வருத்தி எம்மைத்
தரமாய் உயர்த்தி நிற்பார்
வண்ணக் கனவு பலிக்க
வழிகள் செய்து தருவார்

தருவார் கேட்ப தெல்லாம்
தயக்க மேது மின்றி
அருகி லிருந்து காப்பர்
அன்பை பொழிந்து நன்கு
விருப்ப மெல்லாம் தீர்க்க
வியர்வை சிந்தி உழைத்தே
உருக்க மாக நிற்பார்
உள்ளம் மகிழும் வண்ணம்

உள்ளம் மகிழும் வண்ணம்
உருகிக் காக்கும் தந்தை
எல்லை யில்லா அன்பை
என்றும் தந்து நிற்பார்
துள்ளித் திரியும் பருவம்
துயரம் வாரா வண்ணம்
அள்ளி அணைத்து வளர்ப்பர்
அனைத்தும் தருவார் மகிழ்ந்தே

**நிர்மலா சிவராசசிங்கம்**

# அடுக்குமல்லி தொடுத்து வச்சேன்

ஆசையா நேசமா அன்பை நெறச்சு
ஆனந்தமா ஒங்களுக்கா பூவு பறிச்சு
அடுக்கு மல்லி தொடுத்து வச்சேன்
இடுக்கிலே எங்கே ஒளியுறீங்க மாமா!

வடக்கிலே புசல் (புயல்)காத்தாம் மாமா
வாங்க வேலைக்குப் போக வேணாம்.
படுக்கைக்குப் போகும் வரை என்னோடிருங்க
பருப்புக்கறி சோறு பொங்கித் தாரேன்மாமா.

தொடுத்து வெச்ச மாலையைச் சூட்டிவிடுங்க
தொகை தொகையாப் பேசிக் கொண்டாடுவோம்.
தோப்புக்குப் போயி இளநீ குடிப்போம்.
தோடை மரமும் காய்ச்சுக் குலுங்கியிருக்கு.

ஆவணிக்குத் தானே கண்ணாலம் மாமா
அதுவரை பேசிக் கலந்தி ருப்போமே
அப்பாரும் ஏதுஞ் சொல்லார் வந்திடுங்க
ஆத்தாவுக்கு நானு சொல்லிக்கிறேன் மாமா

வராட்டா நானு வதங்கிடுவேன் மாமா
வரும்போது மறக்காம முறுக்கோடு வாங்க
வாசக் கதவோரம் வச்ச கண்ணுமாறாம
வாரப்பாடாய் பாத்திருப்பேன் என்னாசை மாமாவே

## பா வானதி வேதா.
## இலங்காதிலகம்.
டென்மார்க்

- என் அதிகாலை வேளையை
சுறுசுறுப்பாய் இயங்க வைக்கும்
ஒரு குவளைத் தேநீருடன்
நேர்யறை சிந்தனைகள்

- புறமுதுகு காட்டி ஓடவில்லை
என் முதுகில் காயங்கள்
அதில் தெரிவது எல்லாமே
பலர் துரோகத்தின் சாயல்கள்

**வஃபீரா வஃபி**

தாயீ கொல்லாபுரி உசுரு இழை அருந்துடாம பார்த்துக்க .. போயிக்கிட்டு இருக்க உசுர இழுத்து பிடிக்க வேற வழி தெரியல... சாமி..

பூமாக்கிழவிக்கு மடியில இருக்குற சுருக்குப் பைதான் முதலுதவிப் பெட்டி.. சுருக்குப்பையை எடுத்து வசம்பு துண்டை நெருப்புல காட்டி கொளுத்தி மூச்சி பேச்சி இல்லாம கெடக்கும் புள்ளதாச்சி மூக்கு துவாரத்துல புகைச்சல் போட்டுச்சு கொஞ்ச நேரத்துல புகை மூக்குல ஏறுச்சி.. உடம்புக்குள்ளாற காத்து பையில புகை நிரம்பி மூச்சு முட்டி பக்கு பக்குன்னு இருமல் வந்துச்சி தொடச்சியா உஷாரும் வந்துச்சி.

பூமாக்கிழவிக்கும் மனசுல தெம்பும் வந்துச்சி. உசுரு அடங்கி கிட்டு இருக்குற நேரத்துல மூக்கு துவாரத்துல புகைச்சல் போட்டாக்கா மூச்சு முட்டி பட்டுன்னு இருக்குற கொஞ்ச உசுரும் போவும்னு கெழவிக்கு தெரியும் இருந்தாலும் போவுற உசுர உசுப்பேத்தி நிப்பாட்ட இதை விட்டா வேற வழி தெரியல.. தொடச்சியா இருமல் வந்துச் சுன்னா வெளிக்காத்து உள்ளுக்கும் உள்ள இருக்குற காத்து வெளியிலையும் ஓலாத்த ஆரம்பிக்கும்... திடும் திப்புன்னு அது மனசுக்கு தோணறதை செஞ்சிது..வேற வழி ஏதும் கிழவியோட மனசுல தோணல.. போக கிடக்குற உசுர இப்படித்தான் மொரட்டு தனமா இழுத்துப் புடிக்கணும்...



பூமாக்கிழவி எனும் ராக்காச்சி

– ரிஸ்வான் தொடர் நாவல்

புள்ளத்தாச்சி பொண்ணுக்கு பல்லை கட்டிக்கிட்டு இறுகி பூட்டிகிட்டு கிடந்த தாடைகளை லேசா இளக்கி விட்டுச்சு. வெளிக்காத்து உள்ளாராப் போக தரையில போட்ட மீனாட்டும் வாயை திறந்து திறந்து ஆ.. ன்னு வெளிமூச்சு காத்தை உள்ளுக்குள் ஆவேசமா இழுத்து வச்சிது.. நெஞ்சு நிமிந்து ஆ ன்னு பெரிசா மூச்சை இழுத்து வெளியே தள்ளுச்சு.

புள்ளத்தாச் சிப் பொண்ணு.. பக்கு பக்குன்னு இருமுச்சு.. இருமுன இருமல்ல உள் காத்து வெளியாகி வெளிக்காத்து ஒடம்புக்குள்ளர பரவ ஆரம்பிச்சுது புள்ளத் தாச்சி பொண்ணுக்கு.

– ரிஸ்வான்



## பூமாக்கிழவி..6

ரிஸ்வான்
தேநீர் நேரக்கதை



பூமாக்கிழவிக்கு நம்பிக்கை வந்து டுச்சி... போயிகிட்டு இருந்த உசுர நிப்பாட்டியாச்சு. இனி உசுர நிரந்தரமா ஒடம்புக்குள்ள தங்க வைக்கணும் சாமி. உசுரு தேறிடுச்சு இனி போராடி பாத்துப் புடலாம்..

என்னபெத்த தாயீ கண்ணைத்திற பூமா ஆத்தா இருக்கேன்... பக்கத்துல.. யாரடி அங்கே.. வேப்பெண்ணைய கொண்டாங்கடி... கிண்ணியில சீக்கிரம்.. புள்ளத்தாச்சி உசுர கையில புடிச்சுகிட்டு நிக்கேன்..சுருக்கா... வாங்கடி.. சொரணை கெட்ட செத்த மட்டைகளா..பீத்தைகளா..

சத்தம் ஒசக்கமா உக்கிரமா வந்துச்சி பூமாக் கிழவிக்கு. உசுரங்களை காப்பாத் தும் போது ராக்காச்சி சாமிக்கு வரும் ஆவேச ருத்திர தாண்டவம்...வந்தாப்போல ஒத்தை நாடி உடம்புல..பதட்டம் உதறல் கண்ணு முழி எல்லாம் பிதுங்கிடுச்சி.. கொஞ்ச நேரத்துல....

பூமாக்கிழவிக்கு பதட்டம் கொஞ்சம் கொஞ்சமாக குறைஞ்சி நிதானதுக்கு வந்துச்சி...வேலையை பாக்க ஆரம்பிச்சுடுச்சி..

# பண்பாடு

எத்தனை எழுதுகோல்
இன்சொல் செப்பின !
கவின்கலை ஓவியம்
சிறப்பாய் தந்தன !
இவைகளை நாமும்
முழுவதும் வீணாய்
அலட்சியம் செய்ததால்,
மேல்நாட்டு மோகம்
நம்மிடம் கூடவே ...
நமது பண்பாடு
முற்றிலும் இழந்தோம் !
அந்தோ பரிதாபம்
இச்செயல் தகுமா?

**- தமிழ்நெஞ்சம் அமின்**

வேப்பெண்ணையில கைகளை முக்கி எடுத்து வானத்தை பாத்து கைகளை நீட்டி தாயே கொல்லாபுரி ஆத்தா நீதான் தொணைக்கு நிக்கனும் புள்ளத்தாச்சி வவுத்துல வேப்பேண்ணெயை ஊற்றி தடவி தடவி அழுத்தி நீவி நீவி விட்டு குழந்தையோட நிலைமையை கையால மட்டம் பாத்துச்சி..

புள்ளத்தாச்சி வயித்துல கொழந்தை நெஞ்சுக்குழிக்கு மேல ஏறி கெடந்துச்சு.. புள்ளத்தாச்சிக்கு மூச்சு முட்டுச்சு கெழவி அழுத்தமா புள்ளதாச்சி வவுத்தை கீழே கால்வாட்டம் பக்கமா அழுத்தி அழுத்தி நீவி விட்டுச்சி... கூனிப்பாளயத்தாரு பொஞ்சாதி உசுரு போறாப்பல கத்துச்சி வலியை தாங்க முடியாம கத்துச்சு... உதடுகளை கடிச்சிகிட்டு ரத்தம் கொட்டுச்சி.

தாயீ கொஞ்சம் பொறுத்துக்க உன் புள்ள முகத்தை பாக்க வேணாமா.. வைராக்கியத்தோட உசுர முடிஞ்சி வை தாயீ.. இடுப்பு வலி எடுக்கனும் ...இடுப்பு வலி எடுக்கலைன்னா குழந்தை தாய் வாசல் வழியா வெளியாவறது கஷ்டமாயிடும்... நடுக்கால சிக்கிரும்.. பொறவு ரெண்டு உசுருக்கும் ஆவத்து மூச்சி பிடிச்சி முக்கு தாயீ மூச்சைப் பிடிச்சி நல்லா முக்கு... இடுப்பு எலும்பு பூவாட்டம் விரியனும் தாயீ..

தாயீ... மறுபடியும் கண்ணை மூடிடாதே பத்து மாசமா உசுருல சொமந்த சின்ன உசுரு செதைஞ்சி போயிரும்... தாயீபூமாக்கிழவி புள்ளத்தாச்சிகிட்ட பக்கு வமா பேச்சி கொடுத்துகிட்டே வயித்த நீவி.. நீவி கொழந்தை யை நிதானமா நெலைக்கு கொண்டாந்துச்சி... உசுரு வலியில புள்ளத்தாச்சி கத்துச்சி.. கிழவி காதுல வாங்காம காரியத்துல கவனமா இருந்துச்சி.. வலியையும் அழுவையிலும் கவனம் பெசகி போச்சுன்னா காரியம் செதஞ்சி சேறாயிடும்..

வேப்பெண்ணெய்யை கைகளை முக்கி முக்கி எடுத்து வயித்துல தடவி நீவி கிட்டே

இருந்துச்சி.. வயித்துல இருக்க புள்ளைய மெதுவா மெதுவா கால்மாடு பக்கமா நவுட்டிகிட்டே வந்துச்சி..பூமாக் கிழவி..

ஆத்தா.. ன்னு புள்ளத்தாச்சி உசுரு போராப் போல அலறுச்சு உசுரவிட்டு கத்துச்சி..ஒரு உசுர பூமிக்கு கொண்டுவர பொம்பள படுற உயிர் அவஸ்தை..என்ன விட்டுடு ஆத்தா நான் செத்து போறேன்.. முடியல தாயீ..

ஓ... ன்னு தொடச்சியா மூச்சு பிடிச்சி உசுரு வலியில அலறுச்சு... தாடைகள் இரண்டும் வலியில இறுக்கி கிடுக்கி போட்டுக்கிடுச்சி மறுபடியும்..

பூமாக்கிழவி இரண்டு தாடைகளை விலக்கி வாயில குறுக்கால அகப்பை காம்பை செருகி தாடைகள் ஒன்னு சேர்ந்து இறுகாம தடுத்துச்சி இல்லன்னா..நாக்கும் உதடுகளும் தாடைகளுக்கு நடுவே சிக்கி வெட்டிக்கிட்டு இரணமாயிடும்...சில நேரம் பல்லுக்கு இடையில சிக்கி நாக்கும் உதடும் துடிக்க துடிக்க துண்டா விழுந்துடும்..சில பேத்துக்கு முன் பல்லுங்க இறுக்கிக்கிட்டு தூள் தூளா நொறுங்கிறும். அம்புட்டு வலி.. உசுருல வலி..கொடுமைடா சாமி..

கிராமத்துல வயக்காட்டுல வளைஞ்சி நெளிஞ்சி வேலை செஞ்சி, இடுப்புல பாரம் சொமக்குற பொண்டுங்க அதாலே கிராமத்துல எப்பவாச்சும் நூத்துல ஒன்னுதான் இப்படி யாயிரும்.

இடுப்பு வலி எடுக்கலன்னா இடுப்பு எலும்பு மலந்து விரியலன்னு அர்த்தம் பூமாகிழவிக்கு தெரியும் ..கொழந்தை தாய் வாசல் வழியா வெளியாவாது நடுக்கால சிசுவோட தலை சிக்கி கிடும் பொறவு ரெண்டு உசுருங்களுக்கும் ஆபத்தா போயிரும்.

தலை பிரசவத்துக்கு ஊரும் உறவையும், அக்கம் பக்கத்து சனங்களை கூப்புட்டு புள்ள தாச்சிக்கு.. சூல் (சீமந்தம்) செய்யி றோம்.. நலங்கு வச்சி மஞ்சள் பூசி சீவி முடிச்சி சிங்காரிச்சி, தலை நெறைய பூவால ஜடை

சோடிச்சி கைகள் நேரிய வளையல் போட்டு சந்தனம் பூசி அலங்காரிச்சு உக்காத்தி வச்சி அழகு பாக்குறோம்.. வாய்க்கு ருசியா திங்கறதுக்கு கொடுத்து கொண்டாடுறோம்.

எதுக்குன்னா தலைப் பிரசவம் ஒரு பொண்ணுக்கு தப்பிச்சி மீண்டு வந்தாதான் மறுபொறப்பு.. அவள் உசுரோட இருக்கும் போதே எல்லாரும் சிங்காரிச்சு சிறப்பா கண்ணு குளிர ஒருவாட்டி கடைசியா பாத்துக்குங்கன்னு சொல்லாம சொல்லி ஊரு உறவுகளை கூட்டி வச்சு கொண்டாடுறோம்..இதுதான் நெசமும்..

கிழவி பக்கத்துல தொணைக்கு நின்ன பொம்பளைங்களுக்கு வேத்து கொட்டுச்சி கைகால் எல்லாம் வெட வெட ன்னு ஆடுச்சு.. கெழவிக்கு உசுருங்களை காப்பாத்தனும்னு வைராக்கியம் இருந்துச்சி ஏண்டி புள்ளய பெக்காதவங்களா நீங்க போங்கடி வெளியே.. போக்கத்த சிறுக்கிங்களா பக்கி மட்டைகளா.. கவனத்தை கெடுக்காதீங்க போங்கடி வெளியே..உசுரு எப்ப போவும் ஒப்பாரி வைக்கலாம்னு சூழ்ந்து நிக்கீங்களா. நாயிங்களா.. இவங்கெல்லாம் யாருன்னே பூமாக்கிழவிக்குத் தெரியாது.இருந்தாலும் மூஞ்சி முகம் பாக்காம திட்டறதுக்கு அஞ்சாது..

பூமாக்கிழவி எல்லாத்தையும் வெளியே வெரட்டி அடிச்சுது...எதுக்கும் ஆளாகாம.. கவனம் செதையாம உசுருங்களோட போராடிகிட்டு இருந்துச்சி.. ஒத்தையில.. ஆத்தா வயித்த நீவுறத கொஞ்ச நேரம் நிப்பாட்டுச்சி..நிறுத்தி நிதானமாக பாத்துச்சி புள்ளத்தாச்சி தொடச்சியா வலி இருந்துச்சி ஆ.. அம்மான்னு துடிச்சி கிட்டே இருந்துச்சி.. பூமாக்கிழவி மூஞ்சி லேசா மாறிச்சி.. வயித்துல கொழந்தை உசுரோட இருக்கான்னு சந்தேகம்.. வந்துச்சி...

(தொடரும்...)

# பொருண்மை ( மனித உருவில் மாணிக்கம் )

**வாழ்வியல் கவி சா.நாகூர் பிச்சை**
திண்டுக்கல்

மதுரை அரசு மருத்துவமனையில் பிரசவப் பிரிவில் பணியாற்றும் மருத்துவர் மாலதிக்கு வாழ்த்துகளும், பாராட்டுகளும் குவிந்த வண்ணமே இருந்தது. தனது பணியை முடித்து ஒருவாரம் கழித்து தனது வீட்டிற்குள் நுழைகிறார் மாலதி.

''மாலதி, செல்லம்... வாடா.. வாடா... உனக்கு ஒருவாரமா அதிகமான வேலையா... டா? உன்னைப் பார்த்த வுடனே தான்டா என் மனசு நிம்மதியா இருக்கு.'' என்று கோகிலா கூறினாள்.

''அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லேங் கமா. என்னோட கடமைய தானே செய்தேன்.''

''உன் மனசுக்கு எப்பவுமே நீ நல்லா யிருப்படா! என் புள்ள எப்பவுமே மாணிக்கம் தானே!''



''அம்மா, நான் உங்க புள்ளதானே! அப்புறம் எப்படி இருப்பேன்.''

''ஒரு வாரத்துக்கு முன்னாடி உன்னால பிரசவம் பார்க்கப்பட்ட அந்த சுமதி பொண்ணும், அவளோட குழந்தையும் நலமா?''

''ம்..ம்...அவங்க இப்ப நலமா இருக் காங்க அம்மா! பிரசவ நேரத்துல அந்தப் பொண்ணுக்கு நிர்பந்தமா அறுவை சிகிச்சை தேவைப்பட்டது. கடவுள் புண்ணியத்துல என்னோட இரத்த வகையும் அந்த பொண்ணோட இரத்த வகையும் ஒண்ணா இருந்ததால யாரையும் எதிர்பார்க்காமல் நானே இரத்தத்த கொடுத்திட்டேன்.''

''அப்படியா! நல்ல காரியம் செய்தி ருக்க மாலதி. இரண்டு உயிரைக் காப்பாத்தியிருக்க. உன்னை நினைச்சு நான் ரொம்பவும் பெருமைபடுறேன்.''

''இன்றைக்கு தான் அந்தப் பொண்ணை அவள் கணவன் வீட்டுக்கு நல்லபடியா அனுப்பி வச்சேன். இது அவளுக்கு மூன்றாவது பெண் குழந்தையாம்! அதுனால அவளோட உறவுகள் யாருமே வரவில்லையாம். அவள் தாய் தந்தை இல்லாத அநாதைன்னு கேள்விப்பட்டும்; நான் எப்படி மா அவள விட்டுட்டு நம்ம வீட்டுக்கு வருவேன்? நீங்களே சொல்லுங்க?''

நான் உன்னை பெருமையாகத் தான் பார்க்கிறேன். மாலதி!''

அந்தப் பொண்ணோட கணவரும்

ஏழ்மையான குடும்பத்தில உள்ளவர். ஏதோ கூலி வேலை பார்க்கிறார். அந்தக் குழ்ந்தையப் பற்றி என்னோட தோழியிடம் சொன்னேன். அவளோட நண்பரும் அந்தக் குழந்தைய ஆறு மாதத்திற்கு பிறகு தாங்களே தத்தெடுத்துக் கொள்வதாகவும், மீதமுள்ள இரு குழந்தைகளையும் நல்ல படியாக படிக்க வைக்க தாங்களே பொறுப் பேற்றுக் கொள்வதாகவும் வாக்குறுதியும் தந்து விட்டாங்களாம்''

''மாந்த நேயம் மண்ணில் இன்னும் நிலைத்திருக்கிறது. உன்னைப் போன்ற நல்லுள்ளங்களால்! நீ முதலில் சாப்பிடு, அப்புறம் உன் அறைக்கு சென்று ஓய்வெடுத்தப் பிறகு நாம பேசலாம்.''

தன் மகளுக்கு உணவையும் கொடுத்துவிட்டு, அவளை அவளின் அறைக்கு ஓய்வெடுக்க அனுப்பியும் வைத்துவிட்டு, தன் இறந்த கணவரின் புகைப்படத்தின் முன்பு நின்று கொண்டு, 'நீங்கள் சொன்னபடியே நமது பிள்ளை யான மாலதியை; நாம் தத்தெடுத்த உண்மையை, என் உயிர் உள்ளவரை யாரிடமும் சொல்ல மாட்டேன். இவள் என் வயிற்றில் பிறக்காமல் போய்விட்டாளே! என்ற வருத்தமே எனக்கு.' என்று கூறிக்கொண்டே கண்களில் கண்ணீ ரோடும், மனதில் கனத்தோடும் இருக்கை யில் அமர்ந்தாள்.

## கவிதை....

நண்பகல் வேளையில்
குழாயில் வரும்
சுடுநீர் உணர்த்துகிறது...

தண்ணீர் தொட்டியில்
சூரியன்
குளித்ததை...

அ.கேசவராம்
கும்பகோணம்



## ஏழைக்...

.
காற்றென சுவாசம் தந்தான்
கண்களுக் கொளியை தந்தான்
ஊற்றென நீரைத் தந்தான்
உயிர்வளர் புவியைத் தந்தான்
ஆற்றுநீர் நிரம்ப வானில்
அழகுடன் முகிலைத் தந்தான்
போற்றுதற் குரிய தேவன்
பொன்றிடா வாழ்வைத் தந்தான்
.
கொடுத்ததை பெற்றுக் கொண்டு
குதூகலம் மனத்தில் கொண்டு
அடுத்தடுத் திங்கே வாழ்வை
அழகுடன் நகர்த்து கின்றோம்
எடுத்ததிங் கனைத்தும் அந்த
இறைவனே தந்த தாலே
அடுத்தவர் ஏழ்மை பற்றி
அகங்கொள மறந்து விட்டோம்
.
சேர்த்ததை பதுக்கக் காடு
செல் லை கயில் ஒன்றும் இல்லை
நீர்த்துளி வானில் தங்க
நிலத்தினில் உயிர்கள் இல்லை
ஓர்ந்துநம் வாழ்வில் ஏழைக்(கு)
உதவிகள் செய்து விட்டால்
பார்தனில் மகிழு தற்குப்
பஞ்சமே இல்லை இல்லை

- தமிழ்நெஞ்சம் அமின்

# அறிவின் கருவறை நூலகம்

சமூகத்தின் கண்களைத் திறக்கும் சாவி
சடப் பொருளுக்கும் உயிருண்டு என்பதை
சமூக வலைத்தளங்களில் தேடுவோருக்கு
சற்றும் கிடைக்காத பொக்கிஷங்கள் தான் அவை
அறிவை பிரசவித்து அங்கே உன்னை செதுக்கிட்ட
கருவறையே நூலகம்.

கைகளுக்குள் மாட்டிக்கொண்ட பேனாக்களை
காகிதங்களுக்குள் வசப்படுத்தி காத்திரமான படைப்புகளை
கற்றுக் கொடுக்கும் அழகிய உலகம் நூலகமே.
அங்கு நீ வரலாறு பார்க்கலாம்.
ஏன் உன்னை கூட வரலாறாக்கி பார்க்கலாம்.

தூங்கும் இதயங்களை தட்டி எழுப்புங்கள்
துவண்டு போகும் மனங்களை தூசு தட்டி விடுங்கள்
புதிய உலகம் ஒன்றை வாசித்துக் காட்டுங்கள்.
நூல்கள் என்னும் பெயரில் இருக்கும் நூதனமான
அறிவுக் கருவூலத்தை உணரச் செய்திடுங்கள்
நூலக வாசல் படியை அவர்களும் மிதித்து தான் பார்க்கட்டுமே.

ஒரு எழுத்தாளனை படித்துப் பார்க்கலாம்,
ஒரு சமூகத்தை உயிரூட்டி பார்க்கலாம்,
காகிதங்களுடன் உறவாடக் கற்றுக் கொள்ளலாம்,
அறிவுக்கு விருந்து புகட்டும் நூல்கள்
எங்கே எனத் தேடிப் போகலாம்..
நூலக வாசல் தன்னை மிதித்து நீ இருந்தால்.

ஒரு எழுத்தாளனின் உள்ளத்தை வாசிக்கலாம்
அவன் சமூகத்தோடு பேசுவதை காது கொடுத்து கேட்கலாம்
சமூகத்திற்கு எமது குரலையும் பதிவு செய்யலாம்
அநீதிக்கு எதிராக போராடலாம் பாரதி போல
எழுத்தோடு ஒன்றி வாழ்வோடு பயணிக்கலாம்
இத்தனையும் ஒரு நூலகத்தின் ஊடாக.

புதைக்கப்பட்ட செடிகளுக்கு விதையிடுவது போல
மனிதம் துறந்த மனிதனையும் பேச வைக்கிறது
மனிதாபிமானத்திற்காக...
பேசாத பேச்செல்லாம் நூலிலிருந்து
மனிதனை செதுக்குவது மட்டுமல்ல
சிதைக்கப்பட்டவர்களுக்கும் நூல்களின் வாயிலாக
குரல் கொடுக்கிறது...

வீதி விபத்துக்களில் இறந்த எத்தனையோ
அஸ்மாக்களைக் காணலாம்.
மனித வன்மத்தால் பழி தீர்க்க பட்ட எத்தனையோ
ஆசிபாக்களை காணலாம்
நூலகத்தில் பத்திரிகை வாயிலாக..

சமூகத்தோடு நூல்கள் பேசுகிறது
மனிதாபிமானத்தை தட்டி எழுப்புகிறது
போராட வேண்டும் எனும் வெற்றி வேட்கையை
தூண்டி விடுகிறது.. நூல்கள் பேசுகிறது..

அறிவுக்கு அடித்தளமிட்டு வாழ்க்கைக்கு அத்திவாரமிட்டு
அறிவுக்கு கருவறையாகவும் மனிதனை செதுக்கும்
உளியாகவும் அடுக்கப்பட்ட புத்தகங்களின் வரலாறு
இருக்குமேயானால் நூலகங்களை விட அறிவுக்கு
சிறந்த கருவறை வேறு ஏதும் உண்டோ இவ்வுலகில்..

**சுமையா சத்தார்**
அனுராதபுரம், இலங்கை.



## அவளும் தமிழும்

*மொழியின் முகவரி*
*அவள் விழிகள் தந்தது!*
*மையல் கொண்டதால்*
*பல கவிதைப் பிறந்தது!*

*என்னைத் தீண்டிடும்*
*முத்தமிழ் நீயடி!*
*உன்னை நேசிக்கும்*
*புலவன் நானடி!*

*குறளின் வழியிலே*
*அறம் புரிந்தவள்!*
*மூன்று நெறியுடன்*
*நலம் பொழிந்தவள்!*

*தமிழைப் போலவே*
*வலிமை வாய்ந்தவள்!*
*பண்பாட்டில் ஊறிய*
*பழமை சூழ்ந்தவள்!*

*அழகியின் வரவிலே*
*புலமை வந்ததே!*
*இதய அரங்கிலே*
*இனிமை சேர்ந்ததே!*

*கற்பனை மெருகேறும்*
*அற்புதம் போற்றி!*
*அறிவொளி ஞானத்*
*தீபம் ஏற்றும்!*

*காலம் முழுவதும்*
*மணக்கும் சந்தனம்!*
*கன்னித் தமிழுக்கு*
*என்றுமே வந்தனம்!*

*லீ. லியாகத்அலி.*



# பிரச்சினைகளும் நாம் பார்க்கும் கண்ணோட்டங்களும்

பிரச்சினையில்லாத வாழ்க்கையே இல்லை. ஒவ்வொருவருக்கும் என்றும் எப்போதும் எந்த விதத்திலாவது பிரச்சினைகள் வந்து கொண்டேயிருக்கின்றது. சில வேளைகளில் பிரச்சினைகளை சமாளிக்க முடியாமல் கடவுளை கூட நிந்தித்து உள்ளோம். ''இறைவா ஏன் என்னை மட்டும் சோதிக்கிறாய்'' என்று பல கேள்விகளை எழுப்பியுள்ளோம். சில நேரங்களில் நம்மையறிமாலே திட்டியுள்ளோம்.எந்தப் பக்கம் திரும்பினாலும் பிரச்சினை... பிரச்சினை... இன்று பிரச்சினை என்ற வார்த்தையை கேட்டாலே நம்முடன் மன அழுத்தமும் (stress) சேர்ந்து உறவாடுகிறது.

இவ்உலகில்எதனைநோக்கினாலும் எங்கு பார்த்தாலும் stress என்ற வார்த்தை மிக சுலபமாக பாவிக்கப்படுகிறது. ஆம்... நாம் எந்த முயற்சி எடுக்காவிடினும் எந்த பிரச்சினையையும் இலகுவாக தீர்க்க முடியாது. பிரச்சினையை எவ்வாறு கையாள வேண்டும் என்று யோசித்தால் தெரியவில்லை என்றே பாதி பேருக்கு பதில். இப்போது நவீன உலகம் எம்மை ஆட்கொண்டு விட்டது. இதுவும் ஓர் முக்கிய காரணமே.....

குறைந்த பட்சம் ஒரு நாளாவது தொலைபேசி இல்லாமல் இருக்க முடியுமா? என்று கேட்டால்... இல்லை என்ற பதிலே அதிகமாக இருக்கும். இன்னும் சிலர் தொலைபேசி இல்லைவிடின் பைத்தியமே பிடிக்கும் என்பார்கள். இன்னும் சிலர் இதனை வாசித்து விட்டு என்னை பைத்தியமா என்று கேட்பார்கள். இது தான் உலகம்.

பிரச்சினைகளை இலகுவில் கடக்க உங்களுடன் ஒன்றை பகிர்கின்றேன். பயணங்களை மேற்கொள்கின்ற நாம் அநேகமாக ரயில் பயணத்தில் சென்றதுண்டு. மிகவும் விரும்புகின்ற ஒன்று யன்னலோர சீட்டு. ஆம்... அதில் அமர்ந்து பயணிக்கின்றேன். ஏராளமான புது முகங்கள்,அறிமுகம்இல்லாதவர்கள்ரயிலில் இருக்கின்றனர். என் பக்கத்தில் இருந்த ஒரு நபர் என்னுடன் சரளமாக கதைத்தார். நானும் கதைத்தேன். முன் சீட்டில் உள்ள நபர் நான் கதைப்பதை பார்த்து புன்னகைத்தார். நானும் புன்னகைத்தேன். சுற்றியுள்ளவர்கள் நான் அந்த நபருடன் என்ன கதைக்கிறேன் என்று பயணத்தோடு கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

பின்பு சில மைல் தூரம் செல்ல இறங்கும் இடம் வரவும் என்னோடு பேசிய

---

# நீர்க்குமிழி

துருக்கி-சிரியா பூகம்பத்தில்
30,000 பேர் மரணம்
நியூசிலாந்து புயலில்
சிக்கிய மக்கள்
கார் பஸ் விபத்தில்
குடும்பத்தோடு 5 பேர் பலி
இரயிலில் அடிபட்ட
வாலிபர் சாவு
செய்தித்தாளில் தினமும்
இப்படியான செய்திகள்
உச் கொட்டி
நொடிபொழுது
கவலைகொண்டு
உயிர்த்தெழும் மனிதம்
செய்தித்தாளை மூடி வைப்பதோடு
மரணிக்கிறது மீண்டும்

**- பா.சிவகுமார்**

நபர் விடை பெற்று சென்று விட்டார். நானும் விடை கொடுத்து அனுப்பி விட்டு யன்னல் பக்கம் திரும்பினேன். ரயிலும் நகர்ந்தது...

ஓர் அருமையான இயற்கைக் காட்சி.. உயரத்தில் மலைச்சாரல் பள்ளத்தில் வயல்களும் வீடுகளும் தூரத்திலிருந்து பார்க்க மிகச் சிறியதாக தோன்றுகிறது. இயற்கை ரசனையுள்ள எனக்கு பார்க்கவே பார்க்கவே அழகாக இருந்தது.

இவ்வாறு தான் எம்மைச் சூழ்ந்துள்ள பிரச்சினைகளும். சிலது ஒட்டி உறவாடி கஷ்டப்படுத்தும். சிலது தள்ளி நின்று வேடிக்கை பார்க்கும். இவை எல்லாவற்றையும் கடக்க பிரச்சினை களிலிருந்து வெளியேற நாம் எமக்கான சந்தோஷ பொழுதை உருவாக்கி அச் சந்தோஷ பொழுதினை அனுபவிக்க வேண்டும். அந்த மகிழ்ச்சியில் பிரச்சினைளும் சின்னதாகவே தெரியும். ரயிலில் ரசிக்கப்பட்ட ரசனை போல...

எனவே இலகுவாக விடையும் பெறலாம். இதனை விட்டு எல்லாவற்றையும் அருகிலே வைத்து பார்த்தால் மன அழுத்தம் (stress) என்ற ஒன்றே எம்மை அடியோடு அழித்து விடும்.

என்றும் எப்போதும் பிரச்சினைகளை பிரச்சினையாக பார்க்காது சிறிய கண்ணுக்கும் விளங்காத ஒரு நமக்கு பிடித்த விடயமாக யோசித்தாலே எல்லா பிரச்சினைக்கும் பதில் கிடைக்கும். எல்லா பிரச்சினைக்கும் வாழ்வில் விடை உண்டு.

பிரச்சினைகளை இலகுவான கோணத்தில் பார்த்து வாழ்வில் துணிவாக முன்னேறுவோம்.

**ஹப்ஸா பஹுமீர்.**
ஹுரிமலுவ, இறம்புக்கணை,
இலங்கை.

# மெல்லியதாய் வலியதாய்


மெல்லியதாய் ஒரு புன்னகையோடும்
வலியதாய் ஒரு கண்ணீர்துளியோடும்
வாழ்க்கையை கடக்கநேர்கையில்
அடக்கிக்கொள்கிறேன்
அத்தனை ரணங்களையும்
குரூரங்களையும்

கசக்கிப் பிழிந்த காயச்சட்டைகளை
காயப்போட்டுவிட்டு வருகிறேன்
ஆறிவிடாமல் காய்ந்துவிட்டன போலும்
என் சட்டைக்காயங்கள் யாவும்
போதும், காய்ந்தவை போதுமே.

கிழித்து சிதிலங்களாக்கப்பட்ட - என்
நிரப்பமான வலிகளின் முகப்பில்
நான் கூடாரமடித்து ஓய்வெடுக்கிறேன்.
கூடியாடி கதைபேசி அளவளாவ
கிடைத்துவிடுவார்களா யாரும்?
பார்த்திருக்கிறேன்,
வந்துசேர்வார்கள்.

அழுது தீர்க்கவும்
பொழுது நீங்கவும்
வழிகோலாமல் கழிகின்ற
கசப்பப்பிய காலவோட்டத்தில்
கிடந்து வீழ்கின்றேன்,
எழுந்துகொள்ளலாமென்ற நப்பாசையில்.


நச்சரிப்பு உச்சந்தொடுகையில்
அச்சமொன்று எனக்குள் எழுகிறது.
அது எனக்காக அழுகிறது,
அவசரப்படுகிறது,
அபிமானம் கொள்கிறது.
அவதானம் அளிக்கிறது.
அதுபோதுமாகட்டும்
அத்தனைக்குமென்று
என் மனசாட்சி என்னை
அணைத்துச்சொல்கிறது.



**முஷ்தாக் அஹ்மத்**
இலங்கை

Power Point Stories – 5

# பவர் பாயிண்ட் கதைகள் – 5



எழுதியவர்கள் :

அத்தியாயம் 1 : ருக்மணி வெங்கட்ராமன்

அத்தியாயம் 2 : வனஜா முத்துக்கிருஷ்ணன்

அத்தியாயம் 3 : விஜி சிவா

அத்தியாயம் 4 : கி. இரகுநாதன்

கதை நெறியாளுமை : விஜி சிவா

ஓவியம் : லீனா கிரிதர்

## அத்தியாயம் 1

### ருக்மணி வெங்கட்ராமன்

கதிரவன் தன் கடமையைச் செய்யத் தொடங்கினான். பறவைகள் தங்கள் இரை தேடிப் பறந்தன.

சென்னையின் மையப் பகுதியில், ஒரு அடுக்குமாடிக் குடியிருப்பில் அமைந்துள்ள பூங்காவில், பலர் நடைப்பயிற்சி செய்து கொண்டிருந்தனர். தங்கள் உடல் நலனைப் பேணுவதில் மிகுந்த ஈடுபாடுட்டுடன் சிலரும்...

மற்றவர்களைப் பற்றி புறம்பேசி மகிழ்வதற்காகவே சிலரும்...!

அங்கே கடமையே கண்ணாக யாரையும் ஏறெடுத்துப் பார்க்காமல் ஒரு அழகிய பெண் ஜாக்கிங் செய்து கொண்டிருந்தாள்.

''ராணி... அது யாரு..? புதுசா இருக்கு....!'' கலா கேட்க, "அந்தப் பெண்ணா...! புதுசு இல்லை, பழசு தான். வந்து ஒரு மாசமாச்சு. எங்க வீட்டிற்கு பக்கத்து வீடு தான். ஆனால் யாரோடும் பேசறதில்லை."

"அப்படியா...! பெரிய ராங்கிக்காரி போல..." என்று முகவாயை இடித்தபடி வசந்தா தொடர்ந்தாள். ''இரண்டு நாளைக்கு முன்னாடி இவ யாரோ ஒருத்த னோட கார்ல போறத நான் பாத்தேன்."

"கல்யாணம் ஆன மாதிரி தெரியல. கழுத்தில் தாலி இல்லை. காலில் மெட்டி இல்லை" என்றாள் கலா.

"காலம் கெட்டுப் போச்சு... சரி சரி நாளைக்குப் பார்ப்போம். அவளப் பத்தி ஏதாவது விசயம் தெரிஞ்சா வந்து சொல் றேன்" என்று விடை பெற்றாள் ராணி.

அந்தப் பெண் யாரைப் பற்றியும் கவலைப் படாமல் தன் நடையைத் தொடர்ந்தாள். அடுத்த நாள் அந்தப் பெண்ணின் வரலாற்றைத் தெரிந்து கொள்ள, மூவரும்

ஆவலுடன் சீக்கிரமே பூங்காவிற்கு வந்தனர்.

அந்தப் பெண் பூங்காவுக்குள் வர,

''அவ வந்துட்டா ராணி'' என்றாள் கலா. "அவளப் பத்தி ஏதாவது விஷயம் தெரிஞ்சுதா.."

''அவ பேரு மீனா. கல்யாணமாகி ஒரு பெண் குழந்தை இருக்காம். இந்த வீட்டை விலைக்கு வாங்கி வந்திருக்காளாம். பெண்ணை அம்மா வீட்டிலிருந்து நேத்து தான் கூட்டிட்டு வந்திருக்கா. புருசனப் பத்தி ஒண்ணும்தெரியல...விரட்டிவிட்டுட்டாளோ என்னமோ'' என்று கிசுகிசுத்தாள் ராணி.

வசந்தா எதுவும் பேசாமல் நின்றதைப் பார்த்து கலா கேட்டாள். ''என்ன வசந்தா... அப்படியே திகைச்சுப் போய் நிக்கற..!"

''ஒண்ணுமில்ல... ராணி இவ்வளவு விசயத்தையும் எப்படி தெரிஞ்சுகிட்டானு யோசிச்சேன்.''

''அவ வீட்டுல வேல செய்யற பொண்ணுக்கிட்ட பேச்சுக் கொடுத்தேன். அவதான் சொன்னா.'' என்றாள் ராணி பெருமையாக.

"இரண்டு நாட்களுக்கு முன்னாடியே அவளைப் பார்த்தேன். யாரோ ஒருத் தனுடன் கார்ல போனா.'' என வசந்தா கூற, "அதான் நேத்தே சொன்னயே. ஒரு வேளை அவன கல்யாணம் பண்ணிக்கப் போறாளோ?'' ராணி சந்தேகத்தை எழுப்ப,

''நீ வேற... இவ நேத்தைக்கு வேற ஒருத்தனோட சிரிச்சு பேசிக்கொண்டே போனா.'' என்று வசந்தா சிரித்தபடி



கூறியதைக் கேட்டு இருவரும் வாயடைத்து நின்றனர்.!

இதைக் கேட்டுக் கொண்டே அவ் வழியே வந்த வேதம் பாட்டியும், பாலுத் தாத்தாவும், ''மூன்று பேரும் சேர்ந்தா ஊர்ல ஒருத்தரையும் விடமாட்டாங்க'' என்று கூறியபடி அவர்களைக் கடந்து சென்றனர்.

மீனாவின் பெண் கீர்த்தி ''ஆன்ட்டி...! உங்க பெண்ணோடு விளையாடட்டுமா... அம்மா வர நேரம் ஆகும்.'' என்று கேட்டுக் கொண்டே ராணியின் வீட்டிற்குள் சென்றாள்.

''அவளுக்கு வேலை இருக்கு. நீ போ'' என்று துரத்தாத குறையாக கீர்த்தியை வெளியே அனுப்பினாள் ராணி.

''ஏன்மா..? அவளோட விளையாடினா என்ன? என்னை டி.வியும் பார்க்க விட மாட்டேங்கிற? அந்தப் பொண்ணோட விளையாடவும் விட மாட்டேங்கிற?'' என்று சிணுங்கினாள் ராணியின் பெண் ரேகா.

''அவளோட விளையாட்டு எல்லாம் வேண்டாம். அந்த பொண்ணோட அம்மா சரியில்ல... இவ அப்பனே இவளை விட்டுட்டு ஓடிட்டான் போல... அவளோட சகவாசம் வேண்டாம்.'' என்று ரேகாவிடம் ராணி கூறியது, கீர்த்தியின் மனதை காயப்படுத்தி குழப்பியது.

அந்த வார்த்தைகள் கீர்த்தியின் மனதில் மீண்டும் மீண்டும் வந்து நங்கூரம் பாய்ச்சு வது போல் உரச, 'அம்மா நல்லவள் தானே?' சின்னப் பெண் கீர்த்தியின் மூளை சிந்திக்கத் தொடங்கியது.

..........................

அத்தியாயம் 2

**வனஜா முத்துக்கிருஷ்ணன்.**

அழுது கொண்டே ஓடிவந்து அந்தப் பூங்காவில் அமர்ந்த கீர்த்தியின் முகத்தில் சிறிது குழப்பமும் சிந்தனையும் ஓடிக் கொண்டிருந்தன..!

அங்கு குளிருக்குக் கம்பளியைப் போர்த்திக் கொண்டு வந்த பாலுத்தாத்தா வும், வேதம் பாட்டியும், அழுது கொண்டி ருந்த கீர்த்தியின் அருகில் வந்தனர்.

மெதுவாக அவள் கண்களைத் துடைத்த வேதம் பாட்டியை சற்றே மிரட்சியுடன் ஏறெடுத்துப் பார்த்தாள் கீர்த்தி.

''ஏம்மாகுட்டி...இங்கதனியாஉட்கார்ந்து அழுதுகிட்டு இருக்க? உங்கம்மா அப்பா எங்கே?'' என்று கனிவுடன் பாலுத்தாத்தா கேட்க, ஓவென்று அழ ஆரம்பித்தாள் கீர்த்தி.

''தாத்தா, எல்லாரும் என்னை ஸ்பெஷல் சைல்ட்னு சொல்றாங்க! ஆனா... நான் ஸ்பெஷல்னா ஏன் ராணி ஆன்ட்டி என்னையும் எங்கம்மாவையும் திட்டுறாங்க..?''

கீர்த்தியின் முகத்தில் வடிந்த ஒரு அப்பாவித்தனமான பார்வையைப் பார்த்து, அவள் கண்களில் ஆறாகப் பெருகிய நீரைத் துடைத்த வேதம் பாட்டி, ''நீ ஒரு ஸ்பெஷல் சைல்ட்னு யாரும்மா சொன்னாங்க?'' என்றார்..

''எங்கம்மா... ம்... ஸ்கூல் பசங்க, அப்புறம்... இங்க! நானும் மத்த குழந்தைங்க மாதிரி வரணும்னு தான் எங்க அம்மா எத்தனை கஷ்டப்படறாங்க தெரியுமா தாத்தா?. பாவம் அம்மா!. வேலைக்குப் போயிருக்காங்க. கொஞ்ச நேரத்துல வந்துடுவாங்க.'' திக்கித் திணறியது கீர்த்தியின் குரல்.

"சரிடா குட்டி... அதுக்காகலாம் அழக் கூடாது. இங்க எத்தனை குழந்தைங்க விளை யாடறாங்க பாத்தியா... அவங்க கூட போய் விளையாடு." என்றாள் வேதம் பாட்டி..

''அதுக்குத்தான் நான் ராணி ஆன்ட்டி

பெண் ரேகா கூட விளையாடப் போனேனா.. ராணி ஆன்ட்டி என்னைத் திட்டி அனுப்பிட்டாங்க. எங்கம்மா சரியல்லையாம். எனக்கு அப்பா இல்லைன்னு சொல்றாங்க பாட்டி..'' சிணுங்கியபடி தொடர்ந்தாள் கீர்த்தி. "என் மம்மி ரொம்ப நல்லவங்க.. என்னை நல்லாப் பார்த்துப்பாங்க..என் மேல அவங்களுக்கு எத்தனை ஆசை தெரியுமா..?"

குழந்தையின் பேச்சால் திடுக்கிட்ட வேதம் பாட்டி, தன் கணவரை ஏறிட்டுப் பார்த்தாள்.

''பாருங்க.. ஒரு குழந்தைகிட்ட என்னவெல்லாம் சொல்லி இருக்கா அந்த வம்புக்காரி ராணி.. இவங்களுக்கு வேற வேலயே இல்லையா?.'' என்றவள் கீர்த்தியைத் தூக்கி முத்தமிட்டாள்.

''சரி..இனிமே எங்கேயும் போகாதே. உங்கம்மா வர வரைகயும் நாங்க ரெண்டு பேரும் உன்னப் பாத்துக்கிறோம்..சரியா.!'' என்ற வேதம் பாட்டியின் முகத்தில் ஏனோ ஒரு பிரகாசம்..!' முகம் தெரியாத இந்தக் குழந்தையின் மேல் ஏன் எனக்கு இத்தனை பாசம்.!!'

''ஏன் தாத்தா. நான் உங்களப் பாத்ததே இல்லயே....இந்த அபார்ட்மெண்ட்லயா இருக்கீங்க...?'' என்று கொஞ்சும் குரலில் கேட்டாள் கீர்த்தி.

அந்த வழியாக நடைப் பயிற்சி செய்து கொண்டு இருந்த ராணி, கலாவைப் பார்த்து கண்ணடித்து,''ஏண்டி கலா.. இந்தப் பெரிசுங்க ரெண்டும் ஏன் இந்த பொண்ணுக்கிட்ட இத்தனை கொஞ்சல்...!? நம்மளப் பாத்தா இதுங்க முகத்தைத் திருப்பிட்டு போகுமே.!'' என்று கிண்டலாய்க் கேட்க, ''ஆமாமா... அதுங்களுக்கும் பொழுது போகணும்ல. இந்த வயசுலயும் அந்தத் தாத்தா, பொண்டாட்டி கையை பிடிச்சுகிட்டு தான் நடப்பாரு... சகிக்கல. ரெண்டுக்கும் ஒரே புத்தி.. அதான் அவ கிட்ட ஒட்டிக்க பாக்குதுங்க.'' என்றாள் வசந்தா, கேலியும் கிண்டலும் கலந்த கிசுகிசுப்பான குரலில்.!

சட்டென்று கோபத்துடன் திரும்பிப் பார்த்த தாத்தா ஏதோ சொல்ல ஆரம்பிக்க... அவர் கைகளைப் பிடித்து அடக்கிய வேதம் பாட்டி, ''வேண்டாம்... எப்பவும் எச்ச இலையுடன் எதிர் இலை போடக்கூடாது.. அவங்க எல்லாம் நாக்கில நரம்பு இல்லாத கோழைங்க. அவங்க பேசறதை கண்டுக்காதீங்க. வம்பு பேசுற வாயை மூட முடியாது!.''

''ஆமா வேதம்; சரியாச் சொன்ன. திருவள்ளுவரே வம்பு பேசறவங்களைப் பத்தி தன் குறளில்.. 'ஏதிலார் குற்றம் போல் தன் குற்றம் காண்கிற்பின் தீதுண்டோ மண்ணும் உயிர்க்கு..' என்று சொல்லியிருக்காரே..!! அவங்களுக்கு தான் செய்யற குத்தங்கள் தெரியாது.ஆனா பிறத்தியார் குத்தம் நல்லாத் தெரியும்.'' என்று பாலுத்தாத்தா, தன் பொக்கை வாயைத் திறந்து புன்னகைத்தபடி கூறுகையில்... ''ஹை.. அதோ அம்மா வராங்க.'' என்று கீர்த்தி மகிழ்ச்சியுடன் துள்ளிக் குதித்தாள்!

ஆர்வமாய்த் திரும்பிய இருவரும், அவளைப் பார்த்து விக்கித்து நின்றார்கள்!?

..........................

## அத்தியாயம் 3

## விஜி சிவா

'சுவற்றின் ஓரமாய் வரிசையாகச் சென்று கொண்டிருந்த எறும்புகள், திடீரென திசைக்கொன்றாய்ப் பிரிந்து, எதையோ பரபரப்பாகத் தேடி, மீண்டும் தலையை மோதிக்கொண்டு, தன்னைத் தானே சுற்றியபடி வரிசையில் இணைந் தன! உடனே பரபரப்பாக சுவற்றின் இடைவெளிக்குள் நுழைந்து எதையோ தூக்கிக் கொண்டு வந்தன! அவை சுவற்றின் மேலே ஏறும் முயற்சியில் தடுமாறிக் கீழே விழ, அவற்றுடன் சில எறும்புகள் ஏதோ பேச, மீண்டும் மேலே ஏறின! அவற்றின் செய்கையை கூர்ந்து

கவனித்துக் கொண்டிருந்தாள் ரேகா!

''அம்மா... அம்மா...''

''எதுக்குடி கத்துற இப்ப...'' எரிச்சலாய் வெளிப்பட்டது ராணியின் குரல்.

''அம்மா ,எனக்கு ஒரு சந்தேகம்...! இந்த எறும்புல எதுமா அப்பா, அம்மா, புள்ள எறும்பு?''

''ம்.... அதுவந்து....''

''இந்த எறும்புகள்ல எதுவுமே ஸ்பெஷல் எறும்பு இல்லையாம்மா...?''

«என்னடி உளறுற.. ஸ்பெஷலா..?»

# சாயல்

நாளையிலிருந்து கைவிடுவதற்கு
எத்தனையோ இருக்கிறது....

இந்த இரவையும்
சேர்த்துதான் சொல்கிறேன்

தீரா துயரங்களின்மீது
படிந்து விட்ட என்
சாயல்களுக்குகூட
இரவின் நிறம்தான்...

தன் இருகைகளைக்கொண்டு
பந்தாட துணிந்திருக்கும்
உலகத்தின் நிழல்கூட எனக்கு
அப்படித்தான் தோன்றுகிறது

நான் என்பது
எனக்கு நானே
படிந்துவிட்ட இருளின் சாயலாக

**தினுஷா மகாலிங்கம்.**

''ஆமாம்மா.... ஸ்பெஷல் சைல்டுனு சொல்றீங்கல்ல... அது மாதிரி இந்த எறும்புல ஸ்பெஷல் எறும்பு எதுமா...? எல்லாரும் சேர்ந்து போறாங்க, யாருமே இங்க தனியா இல்லையே..!. அப்ப எறும்புல ஸ்பெஷல் எறும்புனு ஒண்ணு இல்லையாமா...?''

ராணி விக்கித்து நின்றாள் .

''அப்புறம்... இதுல அப்பா எறும்பு அம்மா எறும்ப விட்டுட்டுப் போகுதா... அப்படி போய்ட்டா மத்த எறும்பெல்லாம் அந்த அம்மா எறும்போட பேசுதான்னு பாக்குறேன்..!?''

"போயி படிக்கிற வேலயப் பாரு ரேகா.... கண்டவங்களோட சேர்ந்து லூசு மாதிரி பேசுன, நாலு சாத்து சாத்திடுவேன்." என கோபமாய்க் கூறிய ராணி, சற்றே குழப்பத்துடன் பால்கனியில் நின்று வெளியே பார்த்தாள். காற்றின் வாசம் முகத்தை வருட, ரேகா கேட்ட கேள்விகள் சற்றே மனதை உறுத்த, தூரத்தில் தெரிந்தாள் மீனா.... ஒரு நளினமான நடையும் புன்னகை யுமாய்! அதைப் பார்த்தவுடன் எரிச்சலும் பொறாமையும் மீண்டும் எட்டிப் பார்க்க, காற்றின் வாசம் திசை மாறியது!

..........................

பாலுத்தாத்தாவையும் வேதம் பாட்டி யையும் நோக்கி புன்னகைத்தபடி வந்த மீனாவைக் கண்டு இருவரும் சிறிது அதிர்ச்சியும் குழப்பமும் அடைந்தனர்...!

வேதம் பாட்டி, தாத்தாவின் கையைப் பிடித்து கலங்கிய கண்களுடன் 'அவளா இவள்..' என வினவ, தாத்தா தடுமாற...

''நான்.... கீர்த்தியோட அம்மா மீனா. கீர்த்தி ஏதாவது உங்களை தொந்தரவு பண்ணிட்டாளா அம்மா..?'' வணங்கி புன்னகைத்தாள் மீனா.

'அம்மா' என மீனா கூப்பிட்டதில் வேதம் பாட்டியின் மனம் உருக, ''இல்லடா

மீனா.... கீர்த்தி குட்டி ரொம்ப சமத்து.'' வேதம் பாட்டியின் வார்த்தைகளில் மீனாவின் மனது குளிர்ந்தது .

'நாம் அன்று புகைப்படத்தில் பார்த்தது இவள் தானா..?' மீனாவையே உற்றுப் பார்த்தபடி இருந்த தாத்தாவின் கைகள் கீர்த்தியை தானாய் அணைத்துக் கொண்டன.

''கீர்த்தி குட்டி சொன்னா; நீ வேலைக்குப் போறதா... பாவம் குழந்தை தனியா இருக்குறா, உனக்கு விருப்பம்னா நீ வர்ற வரைக்கும் எங்க வீட்டுக்கு வரச் சொல்லுமா; நாங்க தனியாத்தான் இருக்கோம்.'' என்றார் பாலுத்தாத்தா.

''தேங்க்ஸ்பா'' என்று கூறியவள், "அய்யோ அப்பா... உங்க கால்ல சிவப் பெறும்பு" என்றவள் சட்டென குனிந்து பாலுத்தாத்தாவின் காலில் கடித்துக் கொண்டிருந்த எறும்பைத் தட்டி விட்டாள்..!

மீனாவின் தலையில் கை வைத்து ''பரவா...யில்லம்மா'' என்று சொன்ன பாலுத்தாத்தாவின் கரங்கள் நடுங்கின; அகமும் புறமும் கலங்கின!

''இன்னிக்கி என்னன்னு தெரியல, பார்க்ல நிறைய எறும்புகள்.. எங்கேயும் உட்கார முடியல!'' என்றார் வேதம் பாட்டி.

அப்பொழுது எங்கிருந்தோ ஓடி வந்த இரண்டு நாய்க்குட்டிகள் அருகில் இருந்த மரத்தைச் சுற்றி சுற்றி ஓடி, இங்குமங்கும் தாவி, ஒன்றை ஒன்று செல்லமாய் கடித்து, கீழே விழுந்து புரண்டன! கீர்த்தியின் பாதங்களுக்கு நடுவே புகுந்து விளையாட்டுக்காட்டி ஓட,இதையெல்லாம் பார்த்து கீர்த்தி சிரிக்கையில், அவளின் பின்னே ரேகா ..!

"அம்மாவுக்குத் தெரியாமா வந்துட் டேனே...!"

இருவரும் பலமாய்ச் சிரிக்க... மரத்தைச் சுற்றி ஓடிய நாய்கள் சட்டென மரத்தையே உற்று நோக்கிக் குரைத்தன! மரத்திலிருந்த பறவைகளோ படபடவென்று பறந்தும், அமர்ந்தும் சலசலப்பை உண்டாக்கின!

''இன்னைக்கு என்னாச்சு இந்த ஜீவராசிகளுக்கு...? எல்லாம் வித்தியாசமா இருக்கு'' என வேதம் பாட்டி கேட்க, ''மழை வரப் போறதோ என்னவோ...'' என்றார் பாலுத்தாத்தா .

''மனுசாள விட இயற்கையை அதிகமா உணர்ந்து நேசிப்பதும், இயற்கையை அப்படியே ஏத்துக்கிட்டு, பாகுபாடின்றி வாழ்றதும்... இந்த ஜீவராசிகளால் தான் முடியுதுப்பா! ஆறறிவு இல்லாத ஜீவராசியாய்நாம்பிறந்திருக்கலாம்''என்று மீனா கூற, ''ஆமாம்மா... இயற்கைக்கு முன்னாடி நாம எல்லாம் எம்மாத்திரம்....'' என்றார் வேதம் பாட்டி .

மீனாவின் புன்னகையையும் தாண்டி, அவளின் வார்த்தைகளில் தெரிந்த நிதர்சனமும், மெல்லிய ஏக்கமும் வேதம் பாட்டிக்கு புரிந்தன.

ரேகா கீர்த்தியுடன் இருப்பதைக் கண்ட கலாவும் வசந்தாவும், ராணியின் வீடு நோக்கி நிலம் அதிர விரைந்தனர்!

..........................

''மீனா... நாங்க உன்கிட்ட ஒண்ணு கேட்கணும்... நீ... என் பையன்...'' தாத்தா சற்றே தடுமாறுகையில்....

சட்டென காற்றின் வேகம் அதிகமானது..! தாத்தா சற்றே தடுமாறி அங்கிருந்த இருக்கையில் அமர, நடைபயிற்சி செய் தோரும், குழந்தைகளும் ஏதோ உணர...

நிலம் - அதிர்ந்தது..! மூச்சு விட்டது! சுவற்றில் கோலமிட ஆரம்பித்தது ..!

சட்டென அமைதி கலைந்து எங்கும் அலறல்கள்..! ''எல்லோரும் வீட்டை விட்டு வெளியே வாங்க ...டேய் ரவி எங்கிருக்க..?

என்னங்க, ஓடி வாங்க.. சீக்கிரம் வாடி... கடவுளே... அம்மா...''

பல விதமான குரல்கள்... மாடிப்படியில் முண்டியடித்து ஓடிவரும் காலடி யோசைகள்... ஒருவரையொருவர் தள்ளிய படி வெளியில் வந்தவர்களின் வெளிறிய முகங்கள்.... தன் சொந்தம் தேடிய சில கண்கள்..!

ஓடி வந்தவர்களில் தன் அம்மா இல்லாதது கண்டு ''அம்மா... அம்மா'' என ரேகா அழுகையில், ''யாராவது காப்பாத் துங்களேன்... கதவு திறக்க முடியல...!'' என சன்னல் வழியே ராணி அலறினாள்.

மீனா, வேதம் பாட்டியையும் பாலுத் தாத்தாவையும் பார்த்து ''இந்த இரு குழந்தைகளையும் பத்திரமா பாத்துக் கோங்கப்பா; இதோ வரேன்'' என்று சொல்லி ராணியின் வீடு நோக்கி ஓடினாள்...!

மீனாவின் ஓட்டம் கண்ட பாலுத்தாத்தா, செய்வதறியாது இரு குழந்தைகளின் கைகளையும் இறுகப்பற்ற, எறும்புகள் அவர் கால் மேல் மீண்டும் ஏற முயற்சிக்க, கண்மூடி சத்தமாய்க் கூறினார்...

''தன்னடிமை வல்லார் தமக்கு உணர்த்துவான்...''

..........................

## அத்தியாயம் 4

## கி. இரகுநாதன்

மீனா ஓடினாளா அல்லது பறந்தாளா என்று சொல்ல முடியவில்லை. கண்ணிமைக்கும் நேரத்தில் கட்டிடங்கள் சரிந்த இடத்தில் இருந்தாள். ராணியின் வீட்டுக்குச் செல்லாமல் பக்கத்து வீட்டின் இடிபாடுகளுக்கிடையில் மேலே ஏறினாள். பல கூக்குரல்களுக்கிடையில் அவள் குரல் ஓங்கி ஒலித்தது.''அப்துல்..! கேட்ச் ஹிம்...'' என்று கத்தியபடி ஒரு நாய்க் குட்டியைத் தூக்கிப் போட, கீழே நின்றிருந்தவர் அதைப் பிடித்து மெல்ல இறக்கி விட்டார்.

வசந்தா ஆத்திரத்துடன் கத்தினாள். ''இவளுக்கு நாய்க்குட்டி தான் முக்கியமா போச்சா.. ராணியை காப்பாத்தாம இங்க நுழைஞ்சிட்டா.. நான் அப்பவே சொல்லல...'' அப்பொழுதுதான் மீனாவால் பத்திரமாக இறக்கப்பட்ட சிறுமியைப் பார்த்தாள். ''ஐயோ..! என் குழந்தை...'' என்று அலறியபடி கூட்டத்துக்குள் நுழைந்து தன் மகளை அணைத்துக் கொண்டு கண்ணீர் விட, அந்தச் சிறுமி மேலே கையைக் காட்டி ''அப்பா.. அப்பா...'' என்று திணறினாள்.

வசந்தா பயத்துடன் மகள் காட்டிய திசையில் பார்க்க... கை, கால்களில் சிராய்ப்புடனும், தலையில் இருந்து வழியும் இரத்தத்துடனும் தன் கணவனை கைதாங்கலாகப் பிடித்தவாறு மீனா வருவதை கவனித்தாள்.

''என்னங்க..'' என்று அலறினாள்.

இதற்குள் மீனாவின் செய்கையால் உந்தப்பட்டு பல இளைஞர்கள் சட்டென்று மீட்புப் பணியில் இறங்கினார்கள்.

ராணியின் மரணபயமும், அதிகமாகக் கத்தியதால் ஏற்பட்ட சோர்வும் அவள் முகத்தில் அப்பட்டமாகத் தெரிந்ததை மீனா பார்த்தாள்.

ராணி வீட்டின் பக்கவாட்டுச் சுவரில் விரிசல் விழுந்து நான்கைந்து செங்கற்கள் பெயர்ந்திருந்தன. அதன் வழியாக உள்ளே சென்ற மீனாவைப் பார்த்து உணர்ச்சி வசப்பட்ட நிலையில் ராணி 'ஓ' வென்று அழுதாள்.

மீனா ஆறுதலுடன், ''ராணி, நாம சீக்கிரம் இங்கிருந்து போகணும்.. ரொம்ப டேஞ்சர்ல இருக்கோம்..'' என்றவாறு தான் வந்த வழியைப் பார்த்தாள். அது எந்நேரமும் விழும் நிலையில் இருந்தது.

வெளியே அதற்குள் ஆம்புலன்ஸ் வண்டிகள், தீயணைப்பு வண்டிகள், ஜேசிபி இயந்திரங்கள் என அனைத்தும் வந்திருந்தன.

மீனா உள்ளிருந்து கத்தியபடி கையை ஆட்டினாள். ஒரு ஜேசிபி இயந்தரம் அவர்களை நோக்கி வந்தது. ராணியை அதில் பாதுகாப்பாக ஏற்றி விட்டு மீனா திரும்பும் போது அந்த சுவர் இடிந்து விழுந்தது.

அனைத்தையும் பதைபதைப்புடன் பார்த்துக் கொண்டிருந்த பாலுத்தாத்தா அதிர்ச்சியில் ''மீனா..'' என்று கத்த, அனைவரும் திரும்பி பார்த்தனர்.

..........................

''ஹேய்.. மீனு.. என்ன இது..? என் சட்டையும், பேண்ட்டும் போட்டுகிட்டு..» என்றான் மூர்த்தி மனைவியிடம்.

கணவனுடைய காவல் சீருடையை அணிந்து, கண்ணாடியில் பார்த்த மீனா தலையைச் சாய்த்து கொஞ்சலாகக் கேட்டாள்.

"எனக்கு இந்த ட்ரெஸ் எப்படி இருக்கு..?"

அவளை அணைத்த மூர்த்தி, ''உனக்கு எந்த ட்ரெஸ் போட்டாலும் நல்லா இருக்கும் மீனும்மா. ஆனா இந்த போலீஸ் ட்ரெஸ் மட்டும் நமக்கே நமக்குன்னு தைச்சுப் போட்டாதான் எடுப்பா இருக்கும். அது தான் கம்பீரமும் தரும். ஐபிஎஸ் படிச்ச எங்க டிஎஸ்பி போட்டுகிட்டு வரார்.. எப்படி கம்பீரமா இருக்கார் தெரியுமா..?'' அவன் சொல்வதை உன்னிப்பாக கவனித்த மீனு... அமைதியாய்ச் சொன்னாள், ''நான் ஐபிஎஸ் ஆகணும்....''

அவள் என்ன சொன்னாள் என்பதை சரியாகப் புரிந்து கொள்ள மூர்த்திக்கு சில நொடிகள் ஆயின. அவள் குரலில் இருந்த உறுதி, அவள் விளையாட்டாகச் சொல்லவில்லை என்பதை உணர்த்தியது.

''அதற்கு டிகிரி முடிச்சிருக்கணும் மீனு.. நீ பத்தாவது மட்டும் தான் படிச்சிருக்க..''

«என்னை படிக்க வெக்கறீங்களா..? நான் படிக்கிறேன்...»

மூர்த்திக்கு மனைவி மீது கொள்ளைப் பிரியம். மீனா இப்போது கருவுற்றிருந் தாலும்ஏற்கெனவேநிகழ்ந்தஅபார்ஷனால் மனதளவில் தளர்ந்திருந்தாள்.

''நீ படிக்கணும்னா நான் என்ன வேண்டுமானாலும் செய்யறேன் மீனு. ஆனா நீ நிறைய தியாகங்களைச் செய்ய வேண்டியிருக்கும்...''

''எல்லா விதமான தியாகத்துக்கும் நான் தயாரா இருக்கேன்..'' அவள் கண்களில் நீர் துளிர்த்தது. , ''நான் ஐபிஎஸ் ஆகணும்....''

அவள் கண்களின் உறுதி அவளுக்குச் சாதகமான முடிவெடுகளை எடுக்க வைத்தன. ப்ளஸ் டூ சேர்த்தான். உற்சாகத் துடன் படித்தாள். பட்டிப்படிப்பில் சேர்த்தான். ஆர்வத்துடன் படித்தாள். சிவில் சர்வீஸஸ் தேர்வு.. வெறியுடன் படித்தாள். இந்திய அளவில் வெற்றி பெற்றவர்களில் இருபத்தெட்டாவதாக தேர்ச்சி பெற்றாள். இரண்டு வருட ட்ரெய்னிங் முடிந்து எந்த நேரத்திலும் பணி நியமன ஆணை வரலாம்.

கீர்த்திக்கு மற்ற குழந்தைகள் போல் இல்லாமல் கற்றலில், சரளமாகப் பேசு வதில், விஷயங்களை கிரகிப்பதில் குறைபாடு இருந்தன.

தன் பணிகளுக்கிடையில் மூர்த்தியும், தன் படிப்புக்கு இடையில் மீனாவும், மருத்துவர்களின் ஆலோசனையின் பேரில் கீர்த்திக்கு உரிய பயிற்சிகள் கொடுத்து வந்தனர்.

சென்னையில் அதற்கென்றே இருக்கும் பிரத்தியேகப் பள்ளியில் கீர்த்தியைச் சேர்த்து.. அவளுக்காகவே இங்கே அடுக்கு

மாடி குடியிருப்புக்கு வந்து...

..........................

மீனாவையும் கீர்த்தியையும் நினைத்து கண் கலங்கினார் பாலுத்தாத்தா.

மாலை வரை மீட்புக் குழுவினரின் தீவிரமான தேடுதல் நடைபெற்றது.

# நோக்கும் திசையெல்லாம்!

பாரினிலே பாதிப்பாகம்
பறந்திருக்கும் கடலைப்பார்
பஞ்சமில்லா ஆழ்கடலில்
ஊர்ந்து செல்லும் உயிரைப்பார்
நீலமென்று விரிந்திருக்கும்
உச்சி தொடும் வானைப்பார்
இருள் வானில் பூத்திருக்கும்
கண்கவரும் நட்சத்திரம் பார்
பூமி பந்தில் ஒய்யாரமாய்
முளைத்து நிற்கும் மலையைப்பார்
மணம் பரப்பி மனம் கவரும்
பூத்துக் குலுங்கும் மலரைப்பார்
உயிர்களின் தேவை போக்க
ஓடி வரும் நதியைப்பார்
சுழன்று வீசும் காற்றை
பிளந்து பறக்கும் பறவையைப்பார்
நோக்கும் திசை எல்லாம் காட்டும்
இறைவனின் அற்புதம் பார்
இவ்வளவு அழகாக
படைப்பினங்களை படைத்தவனை
என்றோர் நாள் நினைத்துப் பார்

அகீலா ஜவுபர்
ஏத்தாளை புத்தளம் இலங்கை.

மீனா யார்..? அவளுடைய உறவினர்கள் யார்..? அவள் எங்கிருந்து வந்தாள்..??

''மீனாவை உங்களுக்குத் தெரியுமா..?'' என சிலர் பாலுத்தாத்தாவை கேட்க, ''.ம்...ரெண்டு வருஷத்துக்கு முன்னால என் மகனுக்கு திடீரென்று ஹார்ட் அட்டாக் வந்து ரோட்டுல விழுந்துட்டான். போட்டோவும், வீடியோவும் எடுக்கறதுல மக்கள் ஆர்வம் காட்டினாங்களே தவிர என் மகனக் காப்பாத்த யாரும் முன் வரலை.. அப்ப மீனா தான் என் மகனுக்கு 'சரியான முதலுதவி கொடுத்தாங்க. அது மட்டும் செய்யாம இருந்திருந்தா என் மகன் பொழச்சிருக்க மாட்டான்'னு டாக்டருங்க சொன்னாங்க..' எங்களோட ஒரே மகனை மீட்டுக் கொடுத்த தெய்வம் மீனா. போட்டோலயும், வீடியோலயும் பார்த்து தான் மீனாவை தெரிஞ்சுகிட்டோம். இப்பத்தான் நேர்ல பாத்தோம். அதுக்குள்ள இப்படி ஆயிடுச்சே..! பகவானே.. இதென்ன சோதனை..?'' பாலுத்தாத்தாவோடு சேர்ந்து வேதம் பாட்டியும் அழுதாள்.

கலா பதில் சொல்வதற்குள் காவல் துறையைச் சேர்ந்த உயர்ரக வாகன மொன்று வந்து நிற்க அனைவரும் அதனருகே சென்றனர்.

முதலில் கமிஷனர், தொடர்ந்து டிஎஸ்பி, மற்றும் இரு காவலர்கள் இறங்கினர். அவர்களுக்குப் பின்னால்...காவல்துறை சீருடை கச்சிதமாகப் பொருந்த, முகத்தில் முன்னெப்போதும் இல்லாத பொலிவுடன், கம்பீரமாக இறங்கி வருவது..?? அட... நம்ம மீனா..!!!

அத்தனை சோகங்களுக்கிடையிலும் அனைவரும் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் ஒரு சேர ''மீனா... மீனா...'' என்று குரலெழுப்பினர்.

அவர்களை கையமர்த்தி விட்டு கமிஷனர் பேசினார்.

"பூமியின் சீற்றம் காரணமாக இங்கே நிகழ்ந்துவிட்ட இன்றைய சோகமான சூழ்நிலையில் காவல்துறை உங்கள் துயரத்தில் பங்கேற்கிறது. கூடவே இன்று நடைபெற்ற இன்னொரு முக்கியமான நிகழ்ச்சியைப் பற்றி நான் சொல்லியே ஆக வேண்டும். இந்திய காவல்துறை பணிகளில் இன்று முதல் இணைந்துள்ள உங்கள் மீனாவை வரவேற்பதில் காவல்துறை பெருமை கொள்கிறது. இன்று அவருக்கான பணி நியமன ஆணை வந்த போது அவர் இங்கே மீட்புப் பணியில் ஈடுபட்டு பல உயிர்களைக் காப்பாற்றியுள்ளார்! மீனா.. பெண்ணினதிற்கே ஒரு முன்னோடியாகத் திகழ்ந்ததை அறிந்து, நானும் காவல் துறையில் இருப்பதை பெருமையாகக் கருதுகிறேன்..." மக்கள் தங்களை மறந்து கைதட்டினார்கள்.

கமிஷனர் தொடர்ந்தார். "நமக்கெல் லாம் காவல்துறையின் சீருடையை விளை யாட்டாக உடுத்தினாலே ஒரு மிடுக்கு வந்து விடும்; பேச்சும் தோரணையும் மாறி விடும். அதற்கப்புறம் அதை மறந்து விடுவோம். ஆனால்... என்றோ மீனா விளையாட்டாக செய்த செயலின் விளைவு... அந்த 'விளை யாட்டின் மறுபக்கம்'... அவங்களை இந்த அளவுக்கு உயர்த்தியிருக்கிறது என்பது வியப்பாகத்தான் இருக்கிறது.»

கைதட்டல் அடங்க சற்று நேரம் பிடித்தது.

மீனா அனைவரையும் கைகூப்பி வணங்கி பேச ஆரம்பித்தாள். "இன்றைய நிலநடுக்கத்தில் உயிர்சேதம் இல்லை என்பது மகிழ்ச்சியாக இருக்கிறது. ஆணோ... பெண்ணோ; முயன்றால் முடியாதது எதுவும் இல்லை. அப்பாவாக, அண்ணனாக, தம்பி யாக, நண்பனாக, கணவராக.. இப்படி யாரோ ஒரு ஆண்மகன் ஒவ்வொரு பெண்ணின் வெற்றிக்குப் பின்னாலும் கண்டிப்பாக இருப்பார்கள்.. எனக்கு.. என் வெற்றிக்கு முழு காரணமாக இருப்பவர் என் கணவர்..." மீனா மேற்கொண்டு பேச முடியாமல் கண்ணீருடன் தன் கணவனை வணங்கினாள்.

"ஐயே..! அவரோட தான் அன்னைக்கு மீனா கார்ல போனா.." என்ற கலா சுற்றும், முற்றும் பார்த்து, "....ங்க.." என்று முடித்தாள்.

"நான் அப்பவே சொல்லல.. அவரு அவளோட... சாரி அவங்களோட கணவர் தான்னு.." என்றாள் வசந்தா.

மீனா, "ஒவ்வொரு பெண்ணின் வெற்றிக்கு பின்னால்...." சற்றே நிறுத்தி யவள், கலாவையும், வசந்தாவையும் பார்த்தவாறு தொடர்ந்தாள். "ஒரு பெண் ணும் இருக்கலாம்.... 'ஒரு நல்ல தோழி யாக'.." என்று முடித்தாள்.

கூட்டம் கை தட்ட, பாலுத்தாத்தாவும் வேதம் பாட்டியும் புன்னகைக்க, கீர்த்தி "அம்மா, அப்பா" என பெற்றோரை நோக்கி ஓடி வந்தாள்.

..........................

கதிரவன் தன் கடமையை செய்யத் தொடங்கினான். பறவைகள் தங்கள் இரை தேடிப் பறந்தன.

சென்னையின் மையப் பகுதியில், ஒரு அடுக்குமாடிக் குடியிருப்பில் அமைந்துள்ள பூங்காவில் பலர் நடை பயிற்சி செய்து கொண்டிருந்தனர் .

அங்கே கடமையே கண்ணாக யாரை யும் ஏறெடுத்துப் பார்க்காமல் ஒரு அழகிய பெண் ஜாக்கிங் செய்து கொண்டிருந்தாள்.

"ரம்யா... அது யாரு புதுசா இருக்கு....!" "ஓ..அவளா ஜானு..? கொஞ்சம் புதுசு தான். நேத்து ராத்திரி அவ புருஷனோட பயங்கர சண்டை.."

"அப்படியா....! பெரிய ராங்கிக்காரியா இருப்பா போல... நான் அப்பவே சொல்லல..." என்றாள் கனகா !

(முற்றும்)

# வேர்

முனைவர் ப. கற்பகராமன்
MA.,MA.,MA.,M.Phil.,P.hD.,
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை
சோனாகலைமற்றும் அறிவியல் கல்லூரி,
சேலம்- 05



வேர்களை வைத்துத்தான் ஒரு மரத்தின் வளர்ச்சியைக் கணக்கிட்டுக்கூற இயலும். மேலே வான்வரை மரம் உயர்ந்து செல்வதற்கு கீழே மண்ணிலுள்ள வேர் ஆழமாக பதிந்திருக்க வேண்டும். மரம் சரியில்லை என்றால் அதனுடைய வேர் சரியில்லை என்றே அர்த்தம். இதன்மூலம் எந்தவொரு மரத்தையும் அதனுடைய வேர்களே அடையாளப்படுத்துகின்றன என்பது விளங்கும்.

மரத்திற்கும் அதன் வேருக்கும் உள்ள இத்தகைய உறவு, மனிதராகப் பிறந்த நம்முடைய வாழ்க்கையிலும் கச்சிதமாகப் பொருந்தும். நம்முடைய மரபுதான் வேர். நாம்தான் மரம். நாம் நன்றாக இல்லை என்றால் நம்முடைய வேராகிய மரபு நன்றாக இல்லை என்பதே உண்மை. நாம் சரியாக இருக்கிறோம் என்றால் நம்முடைய மரபும் சரியாகவே இருந்துள்ளது என்பதே உண்மை.

ஆரம்பத்தில் துளிராக இருந்து பின் செடியாக வளரும்வரை அனைத்துச் செடிகளும் பார்வைக்கு ஒன்று போலவே தான் காட்சிதரும். அச்செடிகள் அவற்றிற் கான பயனைத் தருகின்ற மரங்களாக வளரும்போதுதான் அதன் இனம் வெளிப் படும். பயன்களே மரபினைத் தீர்மானிக் கின்றன.

கீழே வேர் ஒன்றாகவும் மேலே மரம் வேறாகவும் இயற்கை ஒருபோதும் வெளிப் படாது. நாம்தான் நம்முடைய தேவைக்காக செயற்கையில் இவற்றை மாற்றம் செய்கின் றோம். கீழே எட்டிக் காயை வேராக வைத்துக்கொண்டு மேலே மாதுளையாகவும், ஆப்பிளாகவும், வாழையாகவும், இனிப்பைத் தருகின்ற இன்னும் எவ்வளவோ மரங்கள் போலவும் இடத்திற்குத் தகுந்ததுபோல் நாம்தான் நம்முடைய முகத்தினை மாற்ற முயன்று வருகின்றோம்.

தன்னை மாற்றி வெளிப்படுத்தும் இத்தகைய செயல்களை மேற்கொள்வதில் பச்சோந்திகூட நம்மிடம் தோற்றுவிடும் என்பதே உண்மை. கீழே தானே உள்ளது வேர், அது யாருடைய கண்களுக்கும் தெரியப்போவதில்லை. எனவே கசப்பைத் தரும் அந்த வேருக்கான மரமாக நாம் நம்மை வெளியே காட்டிக் கொள்வதற்குப் பதில், ஆட்களுக்குத் தருந்தாற்போலவும், இடத்திற்குத் தகுந்தாற் போலவும் ஒருசில பூசு வேலைகளின்மூலம் இனிப்பாக நம்மை வெளிப்படுத்த முயற்சிப்பது நமக்கே துன்பத்தைக் கொடுக்கும்.

எட்டிக்காயின் வேரை மறைத்து ஓரிடத்தில் வாழையாகவும், ஓரிடத்தல் மாதுளையாகவும் மற்றொரு இடத்தில் ஆப்பிளாகவும்பொய்யாகவிளையும்போது அதன் உருவத்தைக் கண்டு வேண்டு மானால் பெருமை கொள்ளலாம். ஆனால் அதன் ருசியோ இனிப்பதற்குப் பதிலாக

கசப்பினையே தரும். அப்போது மரபணுவே மாறியவர்களாக நாம் வெளிப்படுவோம். அதைவிட அசிங்கம் வேறு எதுவும் இல்லை என்ற உண்மை அப்போதுதான் நமக்குத் தெரியவரும்.

உலகில் ஒவ்வொருவருக்கும் ஒரு நிற முண்டு, வடிவமுண்டு, சுவையுமுண்டு. ஒவ்வொருவரும் அவரவர்களாகவே தங்களை வெளிப்படுத்தினால்தான் நம் முடைய முன்னோர்கள் கட்டிக்காத்த மரபினை, நம்முடைய சந்ததியினருக்கு நாம் விட்டுச் செல்ல முடியும். இது தவறு, இது சரி என்று முடிவெடுக்கும் வேலை நம்முடையதல்ல. அதனை நம்மால் செய்யவும் முடியாது. இதனை முழுமையாக உணர்ந்துகொள்ளாமல் யார் யார்க்காகவோ போலியாக நம்மை வெளிப் படுத்த முயல்வதில் ஒரு பயனும் இல்லை.

வாழையைப் பார்த்தோ, ஆப்பிளைப் பார்த்தோ, மாதுளையைப் பார்த்தோ நம்மை மாற்ற நாம் எண்ண வேண்டாம். இனிப்பு அதன் குணம் என்றால் கசப்பு நம் குணம் என்பதை ஏற்றுக்கொள்ளப் பழகுவோம். ஒவ்வொரு சுவைக்கும் ஒரு குணம் உண்டு என்பதை உணர்ந்து கொள்வோம்.

எது ஒன்று அதனுடைய தன்மை யிலேயே இருக்கிறதோ அதுவே முழுமை யடைந்த ஒன்றாகக் கருதப்படும். இன்னும் விளக்கமாகக் கூறவேண்டுமானால் தன்னுடைய தன்மையில் இருப்பது மட்டுமே முழுமை பெறும்.

நம்முடைய வேர் என்னவோ அதனு டைய தன்மையிலேயே நம்மை வெளிப் படுத்த நாம் முயற்சிப்போம். அதுவே நமக்கான மரபு. மரபினை மாற்ற முயற்சிக்க வேண்டாம். அது நம்மால் முடியாது. எனவே வேர் என்னவோ அதையே மகிழ்வுடன் வெளிக்காட்டுவோம், அதன் மூலம் வேரிலும் பழுத்து வேர்ப்பலாவாக இனிப்போம். ■

## தன்முனைக் கவிதைகள்

●

இரை காணாத இரைப்பை
பசியில் எரிகின்றது.
இறையோனிடம் யாசித்து
மனமோ அழுகின்றது.

●

பட்டினியில் பல குடும்பம்
பட்டியல் நீள்கிறது.
அரசியல் தலைமை
அமைதியாய் ஆள்கின்றது.

●

ஓலைக் குடிசைகளில்
வயிறுதான் எரிகின்றது.
ஏழையின் அடுப்பில்
பூனை உறங்குகின்றது.

●

வறுமையின் கோலங்கள்
வாழ்க்கையில் காயங்கள்.
விடியலின் திசைபார்த்தே
விழி நகரும் காலங்கள்.

●

வளமிகு இலங்கைத் திருநாடு
மக்கள் வாழ்வோ பெரும்பாடு.
நலமினிக் காண்ப தெப்போது
கலங்கும் நெஞ்சம் இப்போது.

●

துன்பமுறும் உயிர்களுக்கு
துணையாக இருப்போமே.
துவள்கின்ற உள்ளங்களை
துணிவாக மீட்போமே.

**மக்கொனையூராள்**



# மிரட்டிய பேய்

– புல்லாங்குழலன்

காவல் நிலையத்திற்கு வந்திருந்த ஒரு மொட்டைக் கடிதத்தை தாம்பரத்தின் புறநகர்ப் பகுதியிலிருந்த அந்த காவல் நிலைய இன்ஸ்பெக்டர் மற்றும் காவலர்கள் சூழ்ந்து நின்று பரபரப்புடன் படித்துக் கொண்டிருந்தனர்.

கடிதத்தில் எழுதப்பட்ட வாசகங்கள் புதிதாகஇருந்தன. அதில் 15வருடங்களுக்கு முன்பு கொலை செய்யப்பட்ட டாக்டர் பிரபாவதியை கனகாவும் மருதப்பனும் தான் கொன்றார்கள். நான் கண்ணால் பார்த்தேன். இப்போது பிரபாவதியின் ஆவி எங்களைக் கொன்றுவிடுமோ என்ற பயத்திலிருக்கிறோம். நான் செங்காட்டுக் கோட்டையில் இருக்கிறேன். எப்போது அழைத்தாலும் வருகிறேன் என்று முடிந்து கீழே ராசப்பன் எனக் கையெழுத்தும் இடப்பட்டிருந்தது கடிதத்தில்.

கடிதத்தைப் படித்த இன்ஸ்பெக்டர் குழப்பத்தில் ஆழ்ந்தார். அவர் இந்தக் காவல் நிலையத்திற்கு வந்து 2 வருடங்களே ஆயிற்று. அவர் தலைமைக் காவலரை அழைத்து இந்தக் கேஸ் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா என்றார்.

சார் நான் இங்கே வந்து மூன்று வருடங்களே ஆகின்றன என்றார் அவர்.

காவலர்களும் ஏறக்குறைய இதே பதிலைத்தான் சொன்னார்கள். ஒரே ஒரு மூத்த காவலர் மட்டும் தயங்கி நின்றார். அவரை அழைத்த இன்ஸ்பெக்டர் சுந்தரமூர்த்தி உங்களுக்கு இந்தக் கேஸ் பற்றி தெரியும் என நினைக்கிறேன். ஞாபகமாய் முடிந்த அளவு சொல்லுங்கள் என்றார்.

இந்தக் காவல் நிலையம் முன்பு 5 கிலோ மீட்டருக்கு அப்பால் ஒரு இடத்தில் இருந்தது. அப்போது தான் இந்தக் கேஸ் வந்தது. டாக்டர் பிரபாவதி அவருடைய வீட்டில் கொலை செய்யப்பட்டிருந்தார். இந்தத் தகவல் கிடைத்ததும் அப்போது பணியில் இருந்த இன்ஸ்பெக்டரும் நானும் அந்த வீட்டிற்குச் சென்றோம்.

டாக்டர் பிரபாவதியின் வீடு எங்கே இருந்தது.

சேலையூர் என்று ஞாபகம் சார்.

குற்றவாளியைக் கண்டு பிடிக்க முடிய வில்லையா?

முடியவில்லை சார்

டாக்டரம்மாவிற்கு அவர் இறந்த போது

என்ன வயதிருக்கும்.?

60 வயதிருக்கலாம் சார்.

கொலைக்கான காரணம் என்ன வென்று தெரிந்ததா? விசாரணை செய்தாரா இன்ஸ்பெக்டர்.?

அவர்களுடைய வீட்டின் அக்கம் பக்கம் உள்ள எல்லா வீட்டிலுள்ளவர்களையும் விசாரித்தோம்.

பிரபாவதியம்மாவைத் தவிர அந்த வீட்டில் யாருமில்லையா?

அவர்கள் மட்டும் தான். அவர்களுடைய மகன் லண்டனில் வேலை செய்து வந்தார். கணவர் துபாயில் இருந்தார். வீட்டு வேலைகளை செய்ய கனகா என்ற ஒரு வேலைக்காரம்மா வந்து போவார்களாம்..

கொலையான செய்தியை காவல் நிலையத்திற்கு யார் சொன்னார்கள் என்று தெரியுமா?

கனகா தன் ஊரில் நடக்கும் திருவிழாவிற்குச் செல்ல 4 நாட்கள் லீவு கேட்டுப் போனாளாம். லீவு முடிந்து எப்போதும் போல காலையில் டாக்டரம்மா வீட்டுக் கதவைத் தட்டினாளாம், அழைப்பு மணியையும் அடித்தாளாம். ஒன்றும் பதிலில்லையாம். பிறகு தான் அவள் பயந்து அக்கம் பக்கமுள்ளவர்களைக் கூப்பிட்டாளாம். வந்தவர்கள் அந்தக் கதவைத் திறக்க முயன்றார்களாம். கதவு உள்ளே பூட்டப்பட்டிருந்ததாம். வந்தவர்களில் ஒருவர் வீட்டின் பக்கவாட்டில் சென்று ஜன்னலின் ஓட்டை வழியே பார்த்தாராம். வீட்டினுள்ளே எல்லா பொருட்களும் வாரி இறைக்கப்பட்டு அலங்கோலமாகக் காட்சியளித்ததாம். பயங்கர துர்நாற்றமும் வீசியதாம்..

அவர் உடனே எங்கள் காவல் நிலையத்தைத் தொடர்பு கொண்டு நடந்தவைகளை எல்லாம் கூறி எங்களை வரச் சொன்னார்.

உடனே நிலையத்திலிருந்த இன்ஸ்பெக்டரும் நானும் கொலை நடந்த வீட்டிற்குப் புறப்பட்டோம்.

போய்ப் பார்த்த போது அங்கே கூட்டமாய் இருந்தது. விலக்கிக் கொண்டு சென்ற நான் அவர்களை முறைப்படுத்தி அகற்றினேன்.

இன்ஸ்பெக்டர் வீடு வெளியில் பூட்டப்பட்டிருக்கிறதா? அல்லது உள்ளே பூட்டப்பட்டிருக்கிறதா என சோதித்தார். அந்தக் கதவில் அமைந்திருந்த பூட்டு இரண்டு பக்கமும் பூட்டக் கூடியதாய் இருந்தது.. பிறகு அவர் கதவை உடைத்து உள்ளே செல்லப் பணித்தார்.

உள்ளே சென்றதும் அந்த நபர் சொல்லியது போலவே எல்லாப் பொருட்களும் ஒன்று விடாமல் வாரி இறைக்கப்பட்டுக் கிடந்தன.. பீரோ திறக்கப்பட்டிருந்தது. மெல்ல அவர்கள் சமையலறைப் பக்கம் போகும்போதே துர்நாற்றம் வீசத் தொடங்கியது. அங்கே

# புனிதம்!

அன்பை வழங்கும் இதயம் புனிதம்
ஆறுதல் அளிக்கும் சொற்கள் புனிதம்
உதவி செய்யும் கைகள் புனிதம்
தீங்கு நினைக்காத எண்ணம் புனிதம்
கடமை தவறாத கவனம் புனிதம்
மடமை நீக்கும் ஞானம் புனிதம்
கபடம் இல்லாத புன்னகை புனிதம்
துரோகம் செய்யாத தோழமை புனிதம்
நலம் பேணும் உறவு புனிதம்
மானம் காக்கும் மனிதம் புனிதம்

**அகீலா ஜவுபர்**
ஏத்தாளை புத்தளம் இலங்கை

பலமுறை பல இடங்களில் வெட்டப்பட்டுக் கிடந்த பிரபாவதியம்மாவின் பிணம் ரத்தத்தில் குளித்திருந்தது.

அதிர்ச்சியிலிருந்து மீண்டு இன்ஸ் பெக்டர் விசாரணையைத் தொடங்கினார். அக்கம்பக்கத்தினர் அனைவரையும் வரச் சொல்லி எல்லோரிடமும் விசாரித்தார். கனகாவையும் விசாரித்தார்.

தடய அறிவியல் துறைக்குப் போன் செய்து அவர்களை வரச் சொன்ன இன்ஸ்பெக்டர். இது தற்கொலையல்ல பார்த்தீர்களா என்றார் என்னிடம்.

ஆமாம் சார். சரி தான். ஆனால் கதவு உள்ளிலிருந்து அடைக்கப்பட்டிருக்கிறதே. இதைத் தான் சார் நாம் விசாரிக்க வேண்டியிருக்கும் என்றேன் நான்.

இதற்கிடையே தடயவியல் குழுவின ரும் வந்து பரிசோதனைகள் செய்ய முற்பட்டனர்.

எல்லோரிடமும் விசாரித்தும் எந்தத் துப்பும் கிடைக்காததால் நாங்கள் எங்கள் காவல் நிலையம் திரும்பினோம்.

அந்த இன்ஸ்பெக்டரும் மாறுதலில் சென்று விட்ட பிறகு கேஸ் கிடப்பில் போடப்பட்டதாயிற்று.

சரி, ஏதாவது திருடு போயிருந்தது தெரிந்ததா?

அப்போது தெரியவில்லை. பிரபாவதி யின் மகன் லண்டனிலிருந்து வந்த பிறகு தான் தெரிந்தது. அவர்கள் கழுத்திலிருந்த நகைகளும் வளையல்களும். பீரோவில் இருந்த ஒன்றிரண்டு நகைகளும் என 50 பவுனும். 15000 ரூபாய்களும் களவாடப் பட்டிருந்தன.

அப்படியென்றால் அந்த வீட்டைப் பற்றி நன்கறிந்தவர்கள் தான் இதை செய்திருக்க முடியும்?

நானும் அதைத் தான் நினைக்கிறேன் சார்.

அந்த கனகாவின் உறவினர் யாருமிருக் கிறார்களா? அவர்களை விசாரித்தீர்களா?

கனகாவின் கணவன் எப்போதாவது சிறு சிறு வேலைகளை டாக்டருக்கு செய்து கொடுப்பானாம்.. சில சமயங்களில் கைமாத்தாகக் கொஞ்சம் பணமும் கேட்டு வாங்கிக் கொள்வானாம்.

கடிதத்திலிருக்கும் மருதப்பன் தான் கனகாவின் கணவனா?

ஆமாம் சார்..

இந்தக் கேசின் பைல் ஏதும் இருக்கிறதா?

இருந்தது. காவல் நிலைய மாற்றலில் இடம் மாறியிருக்கும். நான் தேடித் தருகிறேன் சார் என்றார் சங்கரன்.

தினமும் பைல் தேடித்தேடி 12 நாட்கள் கடந்தன. 13வது நாள் ஒரு வழியாக அந்த பைல் கைக்குக் கிடைத்தது.

பைல் கிடைத்ததுமே இன்ஸ்பெக்டர் சுந்தரமூர்த்தி சங்கரனைக் கூப்பிட்டுச் சொன்னார்.

சரி நாம் நாளைக்கு செங்காட்டுக் கோட்டைக்குப் போகிறோம். நீங்களும் உடன் ஒரு காவலரையும் கூட அழைத்துக் கொள்ளுங்கள். ஜீப் ரெடி செய்யுங்கள் என்றவர் தன் இருக்கைக்கு சென்றார்.

அடுத்த நாள் காலையில் 8 மணிக்கு இன்ஸ்பெக்டரும் மூத்த காவலர் சங்கர னும் மற்றுமொரு காவலரும் ஏறிக் கொள்ள ஜீப் செங்காட்டுக் கோட்டையை நோக்கிப் புறப்பட்டது.

கடிதமெழுதிய ராசப்பனின் தகவலின் படி கனகாவையும் மருதப்பனையும்

அவர்களுடைய முகவரியில் தேடிப் பிடித்து ஜீப் அங்கே நின்றது.

கதவைத் தட்டியதும் வந்து திறந்த மருதப்பன் சற்றே செழிப்பாகத் தான் தோன்றினான்.

யார் நீங்கள்? போலீஸ் மாதிரி தெரிகிறதே. உண்மையான போலீஸ் தானா என இளக்காரமாய் கேட்டான்.

உண்மையான போலீஸ் உன்னை மாதிரி ஆட்களை எப்படி நடத்தும் என்பதை இன்னும் சற்று நேரத்தில் தெரிந்து கொள்வாய் மருதப்பா. உன் மனைவி கனகாவையும் கூப்பிடு. இருவருக்கும் நல்ல மரியாதை செய்கிறோம் என்றார் சங்கரன் மிடுக்காக.

சார் என்ன பேசுகிறீர்கள்? நான் சமூகத்தில் மதிப்பான மனிதன். மதிப்பாகவே பேசுங்கள் என்றான் மருதப்பன்.

அவனைப் பிடித்து மிதியுங்கள் மதிப்புகள் தானே வந்துவிடும் என இன்ஸ்பெக்டர் உரத்த குரலில் ஆணையிட இரண்டு காவலரும் அவனை இறுக்கிப் பிடித்தனர். பயங்கரக் கொலை செய்து விட்டு 15 வருடங்கள் ஜாலியாக வாழ்ந்து விட்டீர்கள். அந்தக் கொழுப்பு தான் உன்னை இப்படி பேசச் சொல்கிறது. நீதி தூங்கினாலும் சட்டென்று விழித்துக் கொள்ளவும் அதற்குத் தெரியும்.

நீங்கள் கொலை செய்ததற்கான ஆதாரங்களைத் திரட்டிக் கொண்டு வந்திருக்கிறோம். அதை வைத்துத் தான் இப்போது உங்களை சிறையில் அடைக்கப் போகிறோம்., கான்ஸ்டபிள்ஸ் இருவருக்கும் கை விலங்கிடுங்கள் என எங்களிடம் உத்திரவிட்டார்.

மரியாதையாய் சத்தமில்லாமல் வந்தால் அவமானப்படாமல் அழைத்துச் செல்வோம் இல்லையென்றால்...எங்களி

# கபாடபுரம்

பயணம் முடித்து
திரும்பும் போது
வெளிப்புறமாக
வீட்டுக் கதவு
பூட்டி இருப்பதை
ஏற்றுக்கொள்ளாத மனது

'அம்மா' என்றழைத்தபடி
கதவைத் தட்டிப் பார்க்கிறது
அழைப்பு மணியை
அழுத்தி அழுத்தி ஓய்கிறது

சாவி துவாரத்தில்
கண்வைத்து
உள்ளிருக்கும் வெளியை
ஆராய்கிறது

இன்னும் ஒருபடி மேலே போய்
மேலே மட்டும் திறந்திருக்கும்
வாசல் யன்னல் வழி
கையை நுழைத்து
கீழ் யன்னலைத் திறந்து
யன்னல் நிலையிலாவது
சாவி இருக்கிறதா என்று
ஏங்கித் தவிக்கிறது

இன்னும் மலையுச்சிக்கே
போய்பரணி பாடிய
செயங்கொண்டார் பாணியில்
'செம்பொற் கபாடம்
திறமினோ' என்று
இப்படியாக கவிதையும் எழுதி
முடிக்கிறது.

- மு.ஆறுமுகவிக்னேஷ்

டம் உங்களைக் கைது செய்வ தற்கான அரெஸ்ட் வாரண்டுகள் இருக்கின்றன. ஜாக்கிரதை.

கனகாவும் மருதப்பனும் பயத்தில் நடுங்கினர். அவர்களுடைய இன்றைய அந்தஸ்து ஆட்டம் காணத் தொடங்கியது.

இந்தக் கொலையை எப்படி நிறை வேற்றினீர்கள் என்று தெளிவாகச் சொல் லுங்கள். இல்லையென்றால் போலீசின் தேர்டு டிகிரி சித்திரவதைகளை நீங்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்

சார் எங்களை ஒன்றும் செய்யாதீர்கள். நான் நடந்தது அனைத்தையும் சொல்லிவிடுகிறேன். என்றான் மருதப்பன்.

எதையும் மறைத்து ஒளித்துச் சொல்லக் கூடாது. சொன்னாலும் எங்களுக்கு அது தெரிந்துவிடும் என்பதை நினைவில் வைத்து உண்மையைச் சொல்லுங்கள்.

சார், நான் செய்து வந்த சிறுசிறு வேலைகளில் கிடைத்த ஊதியமும் என் மனைவி செய்து வந்த வீட்டு வேலைகளில் கிடைத்த வருவாயும் எங்களின் எளிய வாழ்வுக்குகூட போதவில்லை. கடன் கேட்டாலும் யாரிடமும் கிடைக்காது. டாக்டரம்மாவிடம் சில சமயங்களில் கைமாத்தாக பணம் வாங்குவேன். அதை மிகவும் கஷ்டப்பட்டு தான் திருப்பிக் கொடுப்பேன். நிறுத்தினான் அவன்.

சொல்லு சொல்லு. தொடர்ச்சியாய்ச் சொல்லு என்று ஊக்கப்படுத்தினார் இன்ஸ்பெக்டர்.

அதுவரை நல்ல மனதோடிருந்த நான் அப்போது தான் கிறுத்துவமாய் யோசித்தேன். என் மனைவி கனகாவைக் கூப்பிட்டு, நாம் இப்படியே வறுமையில் வாட வேண்டாம். ஒரு யோசனை சொல்கிறேன், அதன் படி நீ நடப்பாயா என்றேன். அவளும் என் நிலையில் இருந்ததால் உடனே சரி என்றாள்.

டாக்டரம்மாவிடம் நகைகள் இருக் கிறதே அதை அவர்கள் எங்கு வைப்பார்கள் என உனக்குத் தெரியும்தானே, சாவி எங்கிருக்கும் என்றும் பார்.

பீரோவில் தான் நகைகள் இருக்கும். அந்தம்மா கழுத்திலும் இருக்கும். கொஞ்சம் பணமும் வைத்திருப்பார்கள். அதுவும் பீரோவில் தான் இருக்கும். சாவி வைக்குமிடமும் எனக்குத் தெரியும்.

சரி இன்று செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை நான் அங்கு வருகிறேன்.

திட்டமிட்டேன். அதுபோலவே அன்று அங்கு போனேன். என்னோடு என் நண்பன் ராசப்பனும் வந்தான். ராசப்பனை வெளியே நிற்கச் சொன்னேன்.. கதவைத் தட்டினேன் அந்தம்மா தான் வந்து கதவைத்திறந்தார்கள். என்னைத் தெரியும் என்பதால் என்னைப் பார்த்து விட்டு அவர்கள் உள்ளே செல்லத் தொடங்கினார்கள். நான் உள்ளே வந்து கதவைத் தாளிட்டதும் அவர்கள் திரும்பிப் பார்த்தார்கள். நான் வேகமாக அவர்கள் மீது பாய்ந்து நான் கொண்டு வந்திருந்த கத்தியை எடுத்தேன். அவர்கள் வேகமாக ஓடிசமையலறையில்நின்றுகொண்டுஐயோ என்னை ஒன்றும் செய்துவிடாதீர்கள். என்ன வேண்டுமோ கேளுங்கள் என்று அழத் தொடங்கினார்கள். நான் சற்றும் காத்திருக்காமல் நான் கொண்டு வந்திருந்த கத்தியால் அவர்கள் கழுத்தை அறுத்தேன். கனகா தன் கையில் இருந்த கத்தியால் அவர்களை பலமுறை குத்தினாள். ரத்தம் பீறிட்டு அதிகப்படியாய் சேதமானதால் உடனே உயிரிழந்தார்கள். அதை உறுதி செய்து கொண்டு அவர்களுடைய கழுத்தி லிருந்து நகைகளையும் பீரோவிலிருந்த நகைகளையும் பணம் ரு.15000 இருந்ததை யும் எடுத்துக் கொண்டேன்.

ஏன் பொருட்களை வாரியிறைத்தீர்கள்.

திருடவந்ததுபோல்காட்சிஅமைக்கவே இப்படி எல்லாப் பொருட்களையும் வாரி இறைத்தோம். சோபா கட்டில்களைக்கூட

கவிழ்த்துப் போட்டோம்.

கனகா, உன் எஜமானியம்மா உன்னிடம் நன்றாக நடந்து கொள்ள வில்லையா?

நன்றாகத்தான் அன்பாகத்தான் இருப் பார்கள். அதிகமாக பணம் ஒன்றும் தருவதில்லை. அவர்களுடைய மகன் லண்டனில் பணியில் இருக்கிறார். அவர்கள் இங்கே சுகமாக இருக்கிறார்களே நாம் அப்படி இருக்க முடியவில்லையே என்ற சிந்தனை தான் என்னை இப்படி செய்யத் தூண்டியது.

ராசப்பன் உங்களோடு வந்தாரா?

சார் அவன் என்னோடு கூட வந்தான். நீ வெளியே நில்லு என்று சொல்லிவிட்டுத் தான் நான் உள்ளே சென்றேன். அவன் ஜன்னல் வழியாக நாங்கள் கொலை செய்ததைப் பார்த்துவிட்டான். அதனால் தான் அவனுக்கும் ஒரு சிறு பங்கு கொடுத்தோம். மூவரும் செங்காட்டுக் கோட்டையில் ஒரு கடை வைத்து நல்ல வருமானம் வந்ததும் வீடுகளும் கட்டிக் கொண்டோம்.

இது தான் சார் நடந்தது.

ராசப்பன் ஆவி மிரட்டுகிறது என்கிறானே.

நல்ல நிலைமைக்கு வந்த சில நாட்களில் சில வேண்டாத துன்பங்கள் எங்களைச் சூழ்ந்தது. இந்த கிராமத்து கால்நடைகள் மடிந்து வீழ்ந்தன. ராசப்பனுக்கு இன்னும் கூடுதலாக இந்தத் தொந்திரவுகள் இருந்தன.

அதற்காக

அதனால் அவன் என்னிடம் வந்து நாம் பிரபாவதி அம்மாவுக்கு ஒரு சிலை வைத்து வழிபடுவோம். இந்தத் துன்பங்களிலிருந்து விடுபடலாம் என்று வற்புறுத்தினான்.

சரி என அரை மனதாக நாங்கள் சம்மதித்தோம்.

டாக்டரம்மாவின் ஆவி பழி வாங்குகிறது என்ற அவன் பேச்சில் எங்களுக்கும் சிறிது பயம் இருந்தது.

பிறகு அவன் அவனுக்குத் தெரிந்த ஒரு மலையாள மந்திரவாதியைக் கூப்பிட்டு வந்து அந்தம்மாவின் சிலை ஒன்றைச் செய்து பலவித பூஜைகளை பலவிதமாக தினமும் செய்து வந்தான். அதன் பிறகும் துன்பங்கள் தொடர்ந்தன. கால்நடைகள் ஆடு மாடுகள் செத்து மடிந்தன.

நான் அவனிடம் சென்று பூஜைகளை நிறுத்து என்று சொன்னேன். அவன் நிறுத்த வில்லை.. இது தான் நடந்தது.

கான்ஸ்டபிள் அந்த ராசப்பனைக் கூப்பிடு என்றார். வெளியில் நின்றிருந்த அவனும் உள்ளே வந்தான்.

ராசப்பா மருதப்பன் சொன்னதை யெல்லாம் கேட்டாயல்லவா எல்லாம் சரிதானா அல்லது பொய்யா?

அவன் சொன்னது முழுதும் உண்மை தான் சார். எங்களை ஒன்றும் செய்து விடாதீர்கள் என அவன் மண்டியிட்டு அழுதான்.

கான்ஸ்டபிள் இந்த மூன்று பேருக்கும் கைவிலங்கிடுங்கள். நம் ஜீப்புக்குக் கொண்டு போங்கள் என்றவர் ஜீப்பின் முன் இருக்கையில் சென்று அமர்ந்தார். அவர் முகத்தில் வெற்றிச் சின்னங்கள் தெரிந்தன.

15 வருடங்களுக்குப் பிறகு இந்தக் கேசின் குற்றவாளிகள் கைது செய்யப் பட்டது விவரமான செய்திகளுடன் எல்லா ஊடகங்களிலும் மின்னியது.

■

# எழுதிப் பழகுவோம் 8



## தமிழ்ச்செம்மல் இராம வேல்முருகன்

*வலங்கைமான்*

வணக்கம் நண்பர்களே

விருத்தம் என்பது பாவகைகளில் ஒன்று என்பதை யாவரும் அறிவோம். ஆனால் விருத்தத்திலும் பலவகை உண்டு. வெளி விருத்தம், ஆசிரிய விருத்தம், கலி விருத்தம் மற்றும் வஞ்சி விருத்தம் என்று விருத்தத்தைப் பலவாறு பிரிக்கலாம். இப்போது வஞ்சி விருத்தம் எவ்வாறு எழுதுவதெனப் பார்ப்போம்.

“சிந்தடி நான்காய் வருவது வஞ்சி விருத்தம்”

சிந்தடி என்பது மூன்று சீர்கள் கொண்ட அடி இச்சிந்தடி நான்கு வரவேண்டும் ; நான்கிற்கும் ஒரே எதுகை வரவேண்டும். இப்போது நான்கு எதுகைகளை எடுத்துக்கொள்வோம்

இரும்பு
துரும்பு
அரும்பு
கரும்பு

இவற்றோடு பொருத்தமான மேலும் இரண்டு சீர்களை எடுத்துக் கொள்வோம்.

இரும்பு மனத்தில் இருந்தாலும்
துரும்புக் குணத்தில் குனிந்தாலும்
அரும்பு மணத்தால் மனமாறிக்
கரும்புச் சுவையாய் இனிப்பாளே!

குறிப்பு : வாய்பாடு மாறக்கூடாது இங்கே புளிமா புளிமா புளிமாங்காய் என்பதே வாய்பாடு.

இதே போல் வேறு சில பாடல்களையும் பார்ப்போம்.

எடுத்துக்காட்டு

1.
தேமா புளிமா  புளிமாங்காய்
கண்ணே கலைய ழகேஎன்றன்
எண்ணச் சிறகெ ழிலேபாடும்
பண்ணில் இசையெ னவேவாழும்
பெண்ணே பிறைய ழகேவாராய்!

1.
தேமா கருவிளம்  கூவிளங்காய்

கண்ணே கலையழ கேஎன்றன்
எண்ணச் சிறகெழி லேபாடும்
பண்ணில் இசையென வேவாழும்
பெண்ணே பிறையழ கேவாராய்!

2.
தேமா கருவிளங்காய் தேமா

கண்ணே கலையழகே என்றன்
எண்ணச் சிறகெழிலே பாடும்
பண்ணில் இசையெனவே வாழும்
பெண்ணே பிறையழகே வாராய்!

எந்த வாய்பாட்டிலும் எழுதலாம் நான்கடிகளிலும் வாய்பாடு மாறலாகா. அடி எதுகை வேண்டும் நான்காவது அடியில் பாடல் முற்றுப் பெறுவது சிறப்பு.

# தூரிகை

தலைவாருவதைப் போல அல்ல
மீசையை வாருவது
அதில் இருக்கும்
அலகால் தன் சிறகை
தானே கோதும்
பறவையின் அழகு

பிறர் காணும் போது
கண்ணாடியைப் பார்த்து
தலைவாரவே வெட்கும் நாணம்
மீசையை வார கூடுதலாக
வெட்கிப் பூக்கும்
முறுக்கி விட்டால் வெட்கம்
தோற்கும்

சீப்பால் மீசையின் இருபுறமும்
கீழ்நோக்கி சீவி படிய விட்ட பின்
மேலுதடு என்னும் குவிபிறையை
மறைத்துக் கொள்ளும்
அதே வடிவத்தில் இருக்கும்
மீசை என்ற கருமேகம்

அவளுக்கு என்னை விட
முடி அதிகம்
அவளுக்கு ஜடை
தொடை வரை
எனக்கோ எலிவால்
என்பன போன்ற
கூந்தல்களின் அழுக்காறுகள்
மீசைகளுக்கு இல்லை

அது ஒவ்வொரு ஆணின்
தனிப்பட்ட தாரகை
தனித்துவமான தூரிகை.

மு.ஆறுமுகவிக்னேஷ்

# தாயே தெய்வம்

கருவறையில் தேடினேன்
உன்னைக் காணவில்லை
கருவறையில் என்னைச்
சுமந்தது நீயென்று
உணர்ந்தேன் இன்று

கவலைகளைத் தொலைக்க
கோயிலைச் சுற்றினேன்
வீட்டினுள் இருக்கும்
தாயெனும் தெய்வத்தை
மறந்து போனேன்

மகிழ்வற்ற முகத்தைக்
கண்டு பரிதவிப்பாள்
காரணம் அறிந்து
தீர்வு கொடுப்பாள்
தாயெனும் ஆசான்

தோழமையோடு பேசுவாள்
தோளும் கொடுப்பாள்
துவளாத மனதாய்
மாற்றிடும் வல்லமையாவாள்
தந்தையுமாவாள் தாய்

இதயக் கோயிலின்
கருவறையில் தெய்வமாய்
தாயைப் போற்று
தாய்க்கொருப் பாடலை
நிதமும் சாற்று

**செ. இலட்சுமணக்குமார்**
ஈரோடு






# மத்தாப்புக்குச்சிகள்

**ஆசிரியர் : திருமதி மாலதி இராமலிங்கம்**

## நூல் விமர்சனம்

**இராம வேல்முருகன்**
**வலங்கைமான்**

புதுச்சேரி அம்மையார் பதிப்பகம்

நூல் என்பது ஆடையை செய்ய உதவுவது; ஆடையைத் தைப்பதற்கு உதவுவது நூல்; இதைப் போலவே மனத்தைத் தைப்பதும் நூலே. ஒரு நூலில் உள்ள கருத்துகள் – அது கதையாக இருப்பினும் கவிதையாக இருப்பினும் அல்லது கட்டுரையாக இருப்பினும், நாவலாக இருப்பினும் அதில் சொல்லப்பட்ட கருத்துக்கள் வாசகனுடைய நெஞ்சத்தைத் தைப்பதாக இருந்தால் மட்டுமே அந்த நூல் ஒரு சிறந்த நூலாக கருதப்படும். ஒரு படைப்பாளி அவருடைய எண்ணத்திற்குத் தகுந்தாற் போல் படைக்கக்கூடிய படைப்பு அதை படிப்பவனுடைய எண்ணத்துக்கும் தகுந்தாற் போல் இருக்கும் பொழுதுதான் வெற்றி பெறுகிறது. அதாவது வாசகருடைய எண்ண ஓட்டத்துக்கு தகுந்தாற்போல் எழுதக்கூடிய படைப்புகளே வெற்றி பெறக்கூடிய படைப்புகளாக அமைகின்றன.

தமிழ் நெஞ்சத்தில் நூல் விமர்சனத்திற்காக நூல்களை வரவேற்பதாக அறிவித்த பிறகு நமக்கு வந்து சேர்ந்த முதல் நூல் புதுவை மாநிலத்திலிருந்து திருமதி மாலதி இராமலிங்கம் அவர்கள் அனுப்பிய நூல் தான். அந்த நூலின் பெயர் மத்தாப்பு குச்சிகள்.. புதுச்சேரி பதிப்பகம் வெளியிட்ட நூல்; 120 பக்கங்கள் உடைய நூல்; இது ஒரு கவிதை தொகுப்பு. திருவாரூர் மாவட்டத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான தமிழ்ச்செம்மல் விருதினைப் பெற்ற நகைச்சுவை பேச்சாளர் பட்டிமன்ற பேச்சாளர் புலவர் சண்முக வடிவேல் அவர்கள் அணிந்துரை எழுதிய நூல். புதுச்சேரி தமிழ் மாமணி புலவர் பட்டாபிராமன் அவர்கள் வாழ்த்துரை எழுதியிருக்கின்றார். மஸ்கட் ஓமன் மின் குழுமத்தின் உடைய மேனாள் ஆலோசகர் சீனி வரதராஜன் அவர்கள் இதற்கு மதிப்புரை வழங்கியிருக்கின்றார்.

21ஆம் பக்கத்திலிருந்து சுமார் 100 பக்கங்களில் பக்கத்துக்கு மூன்று வீதமாக சுமார் 300 கவிதைகள் நிரம்பி இருக்கக்கூடிய நூலாக இது காணப்படுகிறது ஒவ்வொரு கவிதையும் மூன்று மூன்று அடிகளால் ஆனதாக இருக்கிறது இவற்றை குறுங்கவிதைகள் என்று நாம் குறிப்பிடலாம் ஹைக்கூ எனக் குறிப்பிடலாம். விடுகதைக் கவிதைகள் என்றும் குறிப்பிடலாம். எப்படி ஆயினும்

குறுங்கவிதைகளாக நிரம்பி இருக்கக்கூடிய இந்த நூலில் உள்ள ஒவ்வொரு கவிதையும் ஒவ்வொரு செய்தியினை ஒவ்வொரு உணர்ச்சியினை ஒவ்வொரு செயல்பாட்டினைச் சொல்லக்கூடிய கவிதையாகவே காணப்படுகின்றது. சமுதாயம் சார்ந்த கருத்துக்கள் நிறைந்த கவிதை நூலாக இது காணப்படுகிறது

ஒரு சில கவிதைகளை மட்டும் எடுத்துக் காட்டாக நாம் பார்க்கலாம் பக்கம் 21-ல் அமைந்துள்ள கவிதை.

"புகுந்த வீட்டிற்கு செல்கிறது

மணல் கண்ணீருடன்

வண்டியில் ஆற்றில் இருந்து"

இது ஒரு காட்சியினை நமக்கு காட்டுகிறது மணல் வண்டியில் ஏற்றி அனுப்பப் படக்கூடிய மணலானது ஈரத்துடன் அதாவது நீரோடு கலந்து இருக்கும். வண்டியிலே மணலை ஏற்றிய பிறகு அந்த நீர் வடிந்து கொண்டே இருக்கும். அந்த மணல் வண்டி செல்லும் இடமெல்லாம் அந்த நீர் வழிந்து கொண்டே செல்லும். அதைத்தான் இங்கே கவிஞர் குறிப்பிடுகின்றார் மணல் வண்டியிலே செல்கிறது அதனுடைய நீரை கொட்டியவாறு; இதில் புகுந்த வீடு என்பதை மறைமுகமாக காட்டுகின்றார். புகுந்த வீட்டுக்கு ஒரு பெண் செல்லும் பொழுது பிறந்த வீட்டைப் பிரிந்து செல்கிறோம் என்று கண்ணீரோடு தான் செல்லுவார். அதைப்போல அந்த மணலும் ஒரு புதுமணப் பெண்ணோடு ஒப்பிடப்பட்டு, தன் பிறந்த வீடான ஆற்றை விட்டுப் பிரிந்து இன்னொரு இடத்திற்கு, கட்டுமானம் செய்யக்கூடிய ஒரு இடத்திற்கு செல்லுகிறது என்பதனை இந்தக் கவிஞர் மிக அழகாகத் தனது கவிதையிலே காட்டி இருக்கின்றார்.

இன்னொரு அருமையான ஒரு அரசியல் கருத்தைச் சொல்லக்கூடிய ஒரு கவிதை.

"உயிரை நீத்தார் தலைவர்

நீர்த்துப் போனது

அவரின் கொள்கைகள்"

இது ஒரு அழகான ஒரு குறுங்கவிதை; தலைவர் இறந்து போன பிறகு அவரது கொள்கையும் நீர்த்துப் போய்விடும் என்பதை அழகாக காட்டக் கூடிய ஒரு கவிதையாக இது அமைந்திருக்கிறது. "தலைவர் உயிர் நீத்தார், நீர்த்துப்போனது கொள்கைகள்" என்று கூட இன்னும் இதனைச் சுருக்கி இருக்கலாம். நடைமுறை செய்திகளை சொல்லக்கூடிய ஒரு கவிதையாக இந்த கவிதை காணப்படுகிறது.

பக்கம் 28ல் இருக்கக்கூடிய இன்னொரு கவிதை

"முண்டியடித்துக் கொண்டு

முன்னேறாத இடம்

மயானம்"

இது ஒரு வாழ்வியல் யதார்த்தத்தைக் குறிப்பிடக் கூடிய ஒரு கவிதை. பேருந்தில் ஏறும் பொழுது பேருந்து நிலையங்களிலேயே நாம் காணக்கூடிய ஒரு காட்சி அந்த பேருந்து வந்து நின்ற உடனேயே முண்டியடித்துக் கொண்டு கூட்டமானது உள்ளே செல்லும். இதனைப் போன்ற ஒரு காட்சியினை திரைப்பட அரங்குகளிலே நாம் பார்க்கலாம். தேவையான பொருள் களை பெறுவதற்கோ இன்ன பிற விஷயங்களுக்காகவோ பல இடங்களிலே நாம் முண்டி யடித்துச் செல்வதைக் காண முடியும். ஆனால் ஒரே ஒரு இடத்துக்கு மட்டுமே நாம் விரைந்து செல்ல விரும்புவது இல்லை. அது மயானம்; இதைத்தான் தனது கவிதைகளில் மிக அழகாகக் கவிஞர் முண்டியடித்துக் கொண்டு முன்னேறாத இடம் மயானம் என்று குறிப்பிடுகின்றார்.

பக்கம் 31ல் இருக்கக்கூடிய ஒரு கவிதை; இதுவும் யதார்த்தமான ஒரு கவிதை;

“செய்யாத தவறுக்கு

பழி சுமக்கிறது

சிறியதாகி விட்டது சட்டை

இதனை இவ்வாறு கூட நாம் குறிப்பிடலாம் செய்யாத தவறுக்கு பழி சுமக்கிறது சிறியதாகிப்போன சட்டை இவ்வாறு இது எதார்த்தமான ஒரு செய்தியைக் காட்டக்கூடிய ஒரு கவிதையாக அமைந்திருக்கிறது. பொதுவாக முள்ளின் மேல் நாம் காலை வைத்துவிட்டு முள் குத்தி விட்டது என்று சொல்வதும், கல்லில் இடித்துக் கொண்டு கல் வந்து நம்மை இடித்து விட்டது என்றும் சொல்வதுண்டு. கல் எங்கும் நகர்வதில்லை அது ஒரே இடத்தில் தான் இருக்கும் நாம் தான் கல்லின் மேலே இடித்துக் கொள்வோம். ஆனால் நம்முடைய உள்ளம் அதனை ஏற்காது கல் வந்து இடித்து விட்டது என்று தான் சொல்லுவோம். இதைப் போலவே தான் சட்டை சிறியதாகி விட்டது என்பதும் நாம் வளர்ந்த பிறகு அல்லது உடல் பருமனான பிறகு போட்டுக் கொண்டிருந்த சட்டை பொருத்தமானதாக இருக்காது என்ற சூழல் வரும் பொழுது சட்டை சிறியதாகி விட்டது என்று சொல்வதைக் கவிதையாக்கியிருக்கிறார்.

37 ஆம் பக்கத்திலே ஒரு கவிதை

“நெருக்கத்திலும் தொலைவு வேண்டும்

சொல்லிக் கொடுத்தது

நெல் நாற்று”

என்று எழுதியிருக்கின்றார். மிக அருமையான ஒரு கவிதை. ஒரு குடும்பத்தில் இருக்கக்கூடிய குடும்ப உறுப்பினர்களுக்கு இடையே ஒரு சிறிய இடைவெளி இருக்கும். அதைத்தான் மறைமுகமாக நாற்றுடன் ஒப்பிட்டுச் சொல்லுகின்றார். ஒவ்வொரு தனி மனிதனுக்கும் ஒரு சுதந்திரம் உண்டு. மிகவும் நெருக்கமாக அவர்கள் இருந்து விட முடியாது என்பதை நமக்கு நாற்று சொல்லிக் கொடுப்பதாக அந்த கவிதையில் காட்டுகின்றார். மிக அருமையான கவிதை.

47வது பக்கத்திலே ஒரு கவிதை

“விபூதியுடன் துவங்கியது வியாபாரம்

தேநீர் கடைக்காரரின்

வெற்றிக்கும் சாமான்களுக்கும்”

என்று சொல்லி இருக்கின்றார் இதை எல்லா இடங்களிலும் நாம் பார்க்கலாம். ஒரு தேநீர் கடையில் வெளியே இருக்கக்கூடிய அந்த வெந்நீர் வைக்கக்கூடிய பாத்திரத்தில் பெரிய பட்டை ஒன்று போடப்பட்டு அதன் நடுவே குங்குமப்பொட்டு வைக்கப் பட்டிருக்கும். சில இடங்களில் இந்த வெந்நீர் பாத்திரம் பயன்படுத்தக் கூட இயலாத நிலையில் இருந்தாலும் கூட அந்த பட்டையும் அதன் மேலே ஒரு பூச்சரமும் தொங்கும். அது மக்களைக் கவர்ந்திழுக்கக் கூடிய ஒரு உத்தி அதனைத் தனது கவிதைகளில் அழகாகச் சொல்லி இருக்கின்றார். வியாபாரம் பக்தியுடன் தொடங்குகிறது என்பதனை இவ்வாறு குறிப்பிடுகின்றார். இது பெரும்பாலான கடைக்காரர்களுக்கு பொருந்தும்.

தீநுண்மி காலத்தில் பட்ட துயரங்கள் சொல்லி மாளாதது. நிறைய வாழ்வியல் மாற்றங்களைத் தந்தது. பலருடைய வாழ்க்கையைப் புரட்டிப் போட்டது இதை ஒரு சிறிய கவிதையில் மிக அழகாக பக்கம் 53 ல் குறிப்பிடு கின்றார்.

தீநுண்மியால் ஊரடங்கு

விடுமுறையானது சிலருக்கு

விடியாத வாழ்வானது பலருக்கு

என்று அழகாகச் சொல்லி இருக்கின்றார்.

ஒவ்வொரு கவிதையுமே மூன்று அடிகளை கொண்ட கவிதையாக இருந்தாலும் அவைசொல்லக்கூடியகருத்துக்கள்எல்லாம் மிக விரிவான கருத்துக்களாக மக்களுக்கு பயன்படக்கூடிய கருத்துக்களாக உள்ளன. கடுகு சிறுத் தாலும் காரம் குறையாது என்பது போல இந்தக் கவிதைகள் சிறிய கவிதைகளாக இருந்தாலும் சொல்லக்கூடிய கருத்துக்கள் மிக விரிவானதாக சமுதாயத்திற்கு பயன்படக்கூடியதாக சமுதாயத்தில் நடைபெறக்கூடிய நிகழ்வுகளைப் பிரதி பலிப்பாக இருப்பது இந்த கவிதை நூலினுடைய சிறப்பு.

இன்னொரு கவிதையும் பக்கம் 65ல் சொல்லி இருக்கின்றார். இயற்கையான ஒரு கருத்து.

“தும்மல்

தோட்டாவானது

தீநுண்மியால்”

என்று குறிப்பிடுகின்றார். வெகு உண்மை. கொரோனா காலத்தில் தும்மல் இருமல் போன்றவை செய்யக்கூடாத ஒரு செயல்களாக உருவானது பொது இடங்களில் எச்சில் துப்பினால் கூட அவர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்க வேண்டும் என்றெல்லாம் கூட புதிய சட்டங்கள் இயற்றப்பட்டன. அதைத்தான் அழகாக அவர் குறிப்பிடுகின்றார். தும்மல் கூட தோட்டாவானது தீநுண்மியால் என்று. தும்மல் உயிரை குடிக்கக் கூடிய ஒரு செயலைச் செய்வதென்பது மிக அழகாக இந்த கவிதையின் வழியாக தெரிகிறது.

இவ்வாறு நூல் நெடுக உள்ள கவிதைகள் அனைத்தும் ஒவ்வொரு தோட்டாவாகவே உருவெடுத்துள்ளது பாராட்டத்தக்கது

நீங்களும் நூலை வாங்கிப் படித்து உணர வேண்டுமாறு பரிந்துரைக்கின்றேன்.

பதிப்பக முகவரி

அம்மையப்பர் பதிப்பகம்,
மனை எண். 106,
6 வது குறுக்குத் தெரு,
கர்மவீரர் காமராஜர் ஆசிரியர் நகர்,
ஒட்டம்பாளையம்,
முதலியார்பேட்டை அஞ்சல்,
புதுச்சேரி - 605 004.
தொடர்பு எண் : 63692 21462

## தமிழ்நெஞ்சம்

### இதழில் எழுதுபவர்கள் கவனத்திற்கு...

**பிரதிமாதமும் மாதத்தின் முதல் வாரத்தில் இதழ் வெளிவரும். அதற்கேற்றார்போல 20 தேதிக்கு முன்பாக ஆக்கங்களை அனுப்புதல் நல்லது. அதற்குமேல் வரும் ஆக்கங்கள் அடுத்த இதழில் சேர்க்கப்படும். முந்திக்கொள்வது நல்லதல்லவா?**

**தவிர, ஆக்கங்களை எழுதிவிட்டு அவசர, அவரமாக ஆக்கத்திற்கான தலைப்பு, மற்றும் எழுதியவர் பெயர்கூட எழுதாமல் அனுப்பிவிடுகிறீர்கள். அப்படியானவைகள் நிச்சயமாக இதழில் இடம்பெறச்செய்ய முடியாது.**

**இயன்றவரை மின்னஞ்சலில் அனுப்பிவைக்கும்படி தயவாய்க் கேட்டுக்கொள்கிறோம். முகநூல் உள்பெட்டி, வாட்ஸ் அப் போன்ற தொடர்பில் ஆக்கங்களை அனுப்புவதைத் தவிர்க்கவும்.**

**மின்னஞ்சல் : editor@tamilnenjam.com**

# தமிழ்

சீருறையும் இவ்வுலகில்
சிறப்பாக வாழ்ந்தவரே!
சீறிவந்த புலிதனையே
சிதைத்திடவே வைத்தவரே!

பாரினிலே நம்மினத்தைப்
போற்றிடவே செய்தவரே!
தேரினிலே ஊர்தோறும்
தெப்பமாக வந்தவரே!

நாகரீகச் செம்மலாக
நலம்நாடும் நெஞ்சராக
நாகாக்கச் சொன்னவரே
நா ந(ண)யங்கள் கொண்டவரே!

வாகாக வழிவகுத்து
வையகத்தில் நின்றவரே!
போகாத வழிதனிலே
போகாதே என்றவரே!

இலக்கியத்தில் இமயமாக
இலக்கணத்தில் இதயமாக
கலங்காத நெஞ்சவரேதாம்!
காப்பதிலே முதல்வர்தாம்!

நிலங்கொண்டு நிம்மதியாய்
நில ம் உ_ழுது வாழ்ந்தவரே!
பலங்கொண்டு எநநாளும்
வளமாக உயர்ந்தவரே!

சொல்லின்கண் சிறந்தவரே!
சோரமுறாக் கொள்கையிரே!
சொல்லாலே சொக்கவைக்கும்
சொகுசான மதியினரே!

இத்தனையும் கேட்கையிலே
இன்பமெல்லாம் சொட்டுதம்மா!
இத்தரையில் நம்மினமோ
இதயத்தைக் கிழிக்குதம்மா!

இழிவான செயல்களிலே
இதமாக ஈடுபட்டே
அழிவான அனைத்தையுமே
அரவணைத்து வாழுதம்மா!

இமயத்தை வென்றிட்ட
இனமான நம்மினமோ
இதயத்தை நஞ்சாக்கி
இழிவான செயல்களிலே

சமயத்தை மீறிடுதே,
சாக்கடையில் வீழ்ந்திடுதே!
சாதிசனம் வெட்கிடவே
சகலமுமே செய்திடுதே!

பண்பாட்டைப் பார்த்துதினம்
பரிகாசம் பண்ணிடுதே
பரம்பரையாய் காத்திட்ட
பழக்கத்தை மாற்றிடுதே

புண்பட்ட மனத்தவராய்
பொல்லாங்கு விளைத்திடுதே
பூவுலகில் நாள்தோறும்
புண்ணியத்தை மறந்திடுதே

வான்புகழும் வள்ளுவனும்
வளமாக வாழ்ந்திடவே
வகைவகையாய் சொன்னானே;
வாழ்க்கையிலே நன்னெறியைத்

தேனொழுகச் சொன்னானே!
தீதான செயல்களையே
தினமுமே நாடிடுதே
தீயோரின் நட்பதினால்.

செழிப்பான நம்நாடு
செழுமைமிகு பொன்னாடு
செப்பமுடன் வாழ்ந்தாலே
சிறப்பாமே உலகினிலே

விழிப்புடனே என்றென்றும்
வீரியமாய் நின்றாலே
வியனுலகம் உனைப்போற்றும்
வெற்றிமாலை சூடிடுவாய்!

**பெ. கந்தசாமி,**
சிரம்பான் மலேசியா

# நகை + சுவை

மனைவியுடன் பொது இடங்களுக்கு செல்லும்போது உஷாராக இருக்கவும்

ஒரு கணவனும் மனைவியும் லிப்ட்ல 10 வது மாடியிலிருந்து கீழே வந்து கொண்டிருக்கிறார்கள்.

5வது மாடியில் அழகான இளம்பெண் ஒருத்தி லிப்ட்ல ஏறி அந்த கணவன் பக்கத்தில் நிற்க,அவன் அவளின் அழகில் மயங்கி ஜொள் விடுகிறான்.

சிறிது நேரத்துக்குப்பின் அந்த இளம்பெண் இவனது கன்னத்தில் ஓங்கி அறைந்து விட்டு, «இனி இப்படி செய்தால் செருப்பு பிஞ்சிரும்» னு சொல்லிட்டு அவனிடமிருந்து விலகி நிற்கிறாள்.

இவனுக்கோ தன் மனைவி முன்னிலையில் அடிவாங்கிய அவமானம். லிப்ட் ல இருந்து இறங்கி வெகுநேரமாகியும் மனைவியிடம் பேச வெட்கி வாயடைத்தான்.

வீட்டிற்கு நடக்கிறார்கள்.
ஏங்க அதையே நினைச்சிகிட்டு....
விடுங்க..... ஏதாவது பேசிட்டு வாங்க....

இல்லடி, நான் லிப்ட் ல...
அட, அத தான் விடுங்கனு சொன்னேன்ல.
நீங்க ஜொள் விடுறத பொறுக்காம
நான்தான் அவ இடுப்பைக் கிள்ளுனேன்.

(அடிப்பாவி.. சண்டாளி..) மகிழ்ச்சி

இந்த கதையின் நீதி.
ஒரு கண்ணால் இளம்பெண்களை ரசித்தாலும், மறு கண்ணால் மனைவியை கண்காணிக்க வேண்டும்.....



## ஞாபக மறதி

.

சக்கரை வாங்கிக் கொண்டு
சடுதியாய் வரச்சொன் னாளோ
சுக்குடன் மிளகும் வாங்கச்
சொல்லியே அனுப்பி னாளோ
அக்கணம் சோம்பு பட்டை
அதனுடன் கிராம்பென் றாளோ
முக்கிய மாக உப்பை
முனகியே சொல்லிட் டாளோ

.

ஒன்றவள் சொல்லும் போதே
உடன்மகன் முன்னே நின்றின்
ஒன்றென மிட்டாய் கேட்பான்
ஓ...வென அழுதுங் கேட்பான்
இன்னுமே ஒன்றைச் சொல்வாள்
இளையவள் பனிக்கூழ் கேட்பாள்
இன்னுநான் போவ தற்குள்
எவரெவர் எதைகேட் பாரோ

.

ஓர்புறம் வறுமைத் தொல்லை
ஒருபுறம் பசியின் தொல்லை
ஓர்புறம் மனைவி இன்னும்
ஒருபுறம் பிள்ளை தொல்லை
நேர்ந்திடும் எல்லாம் இங்கே
நினைவினில் இருக்க நீக்க
ஓர்மனம் கொண்டேன் இன்னும்
ஒருமனம் வேண்டு மன்றோ

.

**ஏடி வரதராசன்**

# முதல் பெண்மணி

உம்முல்ஹாத்துல் முஃமினீன் அன்னை கதீஜா ரலியுல்லாஹுஅன்ஹா.. நினைவு நாள் ரமலான் பிறை 10...!!

கண்மணி ஹபீப் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் அன்னை கதீஜா ரலியல்லாஹு அன்ஹா அவர்களின் சிறப்பைபற்றி அடிக்கடி பேசக்கூடியவர்களாக இருந்தார்கள்..!!

அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா சொல்கிறார்கள்,,,,

“எல்லா வகையிலும் சிறந்த மனைவி மார் நாங்கள் உங்கள் அருகில் இல்லையா,

நீங்களோ அந்த கதீஜா ரலியல்லாஹு அன்ஹா எனும் பெண்ணை இன்னமும் நினைவில் கொண்டிருக்கிறீர்கள்?”

என நான் நபியவர்களை (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) ரோஷத்துடன் ஒருமுறை கேட்டேன் என்கிறார்கள்...,

அப்பொழுது கண்மணி ஹபீப் நபிகளார், ‘‘உனக்குத் தெரியுமா? ஆயிஷா... அது ஒரு வேதனைமிக்க காலமாக இருந்தது,

என்னைப் புறக்கணித்து ஒதுக்கி நான் ஒரு பொய்யன் எனக்கூறி இழிவு செய்து தங்களில் ஒரு மனிதராகக் கூட மதிக்காமல் அந்த சமூகமே என்னைப் புறந்தள்ளிய போது,

நான் சாய்ந்திட ஒரு தோளாக, என்னை அன்பொழுக அணைத்து உண்ண உணவும் உடுத்த உடையும் ஒழுக்கமான ஒரு பணியும் தந்து...

தனது செல்வங்களை எனக்காக அள்ளி அள்ளி ஈந்து, பிறரது ஏச்சுக்களையும் கூட பொருட்படுத்தாது,

கண்ணின் இமையாக என்னைக் கருதிக் காத்து நேசத்தையும் காதலையும் மட்டுமே காட்டி,

தாயிழந்த என் ஏக்கம் தீர்க்க வாஞ்சை யுடன் வாரியணைத்து அரவணைப்பை மட்டுமே என் கல்பில் விதைத்து ஆருயிராய்,

பிறர் துன்பம் என்னைத் தீண்டா வண்ணம் காத்து நின்ற அந்தப் பெண் எனக்கு இறைவன் அளித்த தாஹிரா எனும் பொக்கிஷம் அல்லவா... அவர்கள்..!!

என கண்மணி ஹபீப் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார் கள்.

ஒரு முறை கையில் ஒரு தட்டில் உணவைச் சுமந்து அண்ணலை நோக்கி வந்து கொண்டிருந்த அன்னை கதிஜா

உம்மாவை... முந்திய வண்ணம் அங்கு வந்த வானவர் தலைவர் ஜிப்ரயீல அலை ஹிஸ்ஸலாம் நபியிடம் சொன்னார்கள்..!!!.

“இறைவனின் தூதரே..! அந்த ரப்பு உங்களின் மனைவி கதீஜாவுக்கு அவன் வகையில் சலாம் சொல்லச் சொன்னான், என சொல்லக் கேட்ட அண்ணல் புல்லரித்துப் புளகாங்கிதம் அடைந்தனர்...!!!

என்ன ஒரு சிறப்பான நிகழ்வு...!!!

ரப்புல் ஆலமினான அல்லாஹ்.... அந்த சிருஷ்டி தனது படைப்பினத்துக்கு சலாம் சொல்லி கண்ணியம் செய்தது அந்தத் தாய்க்குத் தான்...!!

இந்த துன்யாவின் புனிதமான ஒரு தாய் அல்லவா அவர்கள்...!!

இஸ்லாத்திற்காக கண்மணி ரஸூல் லுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்காகவும் தனது செல்வங்களை அனைத்தையும் அர்ப்பணித்த அன்னை அவர்கள்..!!

கண்மணி ரஸூல்லுல்லாஹ் ஸல்லல் லாஹு அலைஹிவஸல்லம் அவர்களோடு தன்னை இணைத்துக் கொண்டு முதன் முதலில் கலிமா சொல்லி ஏற்று கொண்ட இஸ்லாத்தின் முதல் பெண்மணி அன்னை கதீஜா ரலியுல்லாஹு அன்ஹா அவர்கள் தான்....!!!

அல்லாஹ் அவர்களை பொருந்திக் கொண்டான். அவர்களும் அல்லாஹ்வை பொருந்திக் கொண்டார்கள்..!!

ஸல்லல்லாஹு அலா முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்....

# கடன்

வெட்டுப்படுவதற்கு
முந்தைய நாள் இரவில்
பாலூட்டியது தாய்

நேர்த்திக்கடன்
செலுத்திய மறுநாள்

எச்சில் இலையை
மேய்ந்துகொண்டிருக்கிறது
ஆட்டுக்குட்டி!

# விலகல்

பிரிய மனமில்லையென்று
ஏற்புரையாற்றினார்

கண்ணீர் மல்கக்
கட்டியணைத்து சிநேகம்
நீடிக்கயிறைஞ்சினார்

ஆறுதல்பட கரமிணைக்கையில்
அத்தனை வலிக்கவில்லை பிரிவு

அடுத்தடுத்த நாட்களின்
‘லெப்ட் மெசேஜ்’மட்டும்
சற்றே வலிக்கச்செய்தது!

**ரகுநாத் வ**
மதுரை

# மலர்ந்தது பெருநாள்

– வஃபீரா வஃபி

கதீஜாவும் ரெஹானாவும் பாட சாலை முடித்து வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள். வழமையாக வளவளவென பேசிக் கொண்டே வரும் கதீஜா இன்று மௌனமாகவே வருவதைக் கவனித்த ரெஹானா "ஏன் உன் முகம் வாட்டமா இருக்கு. என்னாச்சு" என விசாரித்தாள்.

இருவருமே ஆண்டு எட்டுபடிக்கும் மாண வியர். கதீஜா பதிலேதும் பேச முற்படாமல் அமைதியாக வந்தாள். "சொல்ல விருப்பமில்ல என்டா நானும் உன்ன வற்புறுத்த மாட்டேன்."

ரெஹானா பட்டென சொல்லவும் "அப்படியெல்லாமில்ல" என அவசரமாக மறுத்த கதீஜா, "உனக்குத் தான் தெரியுமே நம்ம வீட்டு நிலைமை. வாப்பா கூலி வேலை செஞ்சி வாற வருமானத்துல தான் எங்க ஊட்டுல ஏழு உசிரு வாழுது. அதுவும் நிரந்தரமில்லாத தொழில். வயசான வாப்பும்மாவோட நானும் ரெண்டு தங்கச்சியும் தம்பியுமா, ஏதோ அல்லாஹ்ட கிருபையக் கொண்டு இருக்கோம். உம்மாவும் தன்னால இயன்றமாதிரி இழுத்து பிடிச்சி சிக்கனமா குடும்பத்த நடத்தி போறாங்க. பெருநாள் வேற நெருங்குது. இருக்குற வெலவாசியில ரெண்டு வேளை சாப்பாட்டுக்கே தடுமாறிட்டு இருக்கோம். இதுல பெருநாள கொண்டாட வழி இருக்கா என்டு தெரியல" மூச்சு விடாமல் கொட்டி முடித்தாள்.

இதையே யோசித்தபடி ஒரு தெரு தள்ளியிருக்கும் தன் வீட்டுக்கு வந்து சேர்ந்தாள் ரெஹானா. வரும் போதே தகப்பனாருக்கு ஸலாம் சொல்ல, வாசலி





லேயே மகளின் வருகைக்காக காத்திருந்த கரீம் ஹாஜியும் ஸலாத்துக்கு பதில் சொல்லி, ''ரொம்ப அசதியா இருக்கீங்க. ஸ்கூலுக்கு கார் அனுப்பவும் வேணாம் என்டு சொல்லிட்டீங்க. நோன்பு டைம்லயும் நடந்து வரனுமா மா?'' என்று செல்லமாக கடிந்து கொண்டார். அஸர் தொழுகையின் பின், ரெஹானா கரீம் ஹாஜியிடம் «வாப்பா நீங்க ஸக்காத் குடுக்குறதை பல வருஷமா பாக்கிறேன். பல வருஷங்களாவே ஒரு குறிப்பிட்ட சில ஆட்களுக்கு தானே குடுக்குறீங்க, அதுவும் நூறு, ஐநூறு என்டு. வாப்பா உங்க கிட்ட ஒன்டு கேக்கனும். ஒரு வருஷ சம்பாத்தியத்துல உங்க ஸக்காத்து தொகை எவ்வளவு வரும்'' என்று கேட்டாள்.

கரீம் ஹாஜி ''அது கிட்டத்தட்ட 75 ஆயிரம், ஒரு லட்சம் என்டு வரும் மா'' சிலசமயம் அதுவும் கூடும் என்கிறார்.

ரெஹானா ''வாப்பா இத ஏன் வாப்பா சின்னத் தொகையா பிரிச்சி குடுக்குறீங்க? இதனால யாருக்கும் எந்த பயனுமில்ல. ரொம்ப கஷ்டப்படுற, வருமானம் குறைவான மக்கள் எவ்வளவோ பேர் இருக்காங்க. அவங்கள்ல ஒரு ரெண்டு குடும்பங்களுக்கு சுயதொழில் செய்ய மூலதனமா பயன்படுத்த சொல்லி இந்த தொகைய குடுத்தா அது எவ்வளவு நன்மையா இரிக்கும்.''

''அது சரிம்மா ஆனா அதை வீணா செலவு செய்துட்டு மற்ற பணக்காரர்கள் கிட்டயும் இவங்க ஸக்காத் எடுக்க போவதும், அடுத்த வருஷமும் ஸக்காத்தை எதிர்பார்த்து வர்ரதும் காலங்காலமா நடக்குதே மா''

அதற்கு ரெஹானா ''நீங்க சொல்றதும் சரிதான் வாப்பா! ஆனா, நாம் தான் தேடிப்பாத்து குடுக்கனும். அப்பிடி குடுக்கும் போது அவங்க கிட்ட சொல்லி குடுக்கனும், நீங்க இதை வச்சி முன்னேறி அடுத்த வருஷம் இதேபோல கஷ்டப்படுற ஒரு குடும்பத்தையாவது கைதூக்கி விடனும் என்டு. இப்பிடியே எல்லாரும் செஞ்சா நம்ம சமூகத்துல கையேந்துற கூட்டம் குறைஞ்சி, தர்மம் செஞ்சி நற்கூலி பெறும் மக்கள் அதிகமாகிடுவாங்களே வாப்பா''

''உண்மைதான் மா! இதுவரை இந்தக் கோணத்தில் நா யோசிக்கவே இல்லையே! உன் சின்ன அறிவுக்கு இப்பிடி ஒரு நல்ல விஷயத்தை யோசித்திருக்கும் உனக்கு அல்லாஹ் மேலும் அறிவை குடுப்பானாக! ஆமீன்! உனக்கு தெரிஞ்ச யாராவது இருந்தா சொல்லும்மா!''

ரெஹானா உடனே கதீஜாவின் குடும்பத்தைப் பற்றி சொல்கிறாள். மறுநாளே கரீம் ஹாஜி மகளோடு கதீஜாவின் வீட்டுக்கு, புத்தாடைகளுடன் வருகிறார். அவர்களைக் கண்ட கதீஜா வுக்கு சந்தோஷம் தாளவில்லை. நடந்த விடயத்தை ஒன்றுவிடாமல், கதீஜாவின் தந்தையிடம் எடுத்துக் கூறி, ஒரு பெரிய தொகையையும் கொடுத்து விட்டு மன நிறைவோடு வீடு திரும்புகிறார் கரீம் ஹாஜி.

கதீஜா ''வாப்பா நீங்க ஐவேளையும் தொழுது துஆ கேட்டதுக்கும், குடும்பத்துல எல்லாரையும் நேரந்தவறாம தொழ வைத்ததுக்கும் இன்டைக்கு அல்லாஹ் கைமேல் பலனை தந்திருக்கான். அவங்க சொன்னதை மனசுல வச்சி நீங்களும் உழைச்சி முன்னேறி நாலுபேருக்கு உதவி செய்யனும் வாப்பா'' என்று சொல்ல, ஆமாம் இதுவரை நாம ஸக்காத் எடுக்குற கூட்டம் என்டு நினைச்சிருந்தேன். ஆனா இனிமேல் இந்த பணத்தை முதலீடு பண்ணி நானும் உழைச்சி அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்வேன்» என உறுதி பூணுகிறார் கதீஜாவின் தந்தை ரஹீம்.அந்த உள்ளத்தில் நம்பிக்கையை விதைத்த நல்ல உள்ளங்களுக்காகப் பிரார்த்தனைக்கு கை யேந்தும் போது, தக்பீரின் ஒலி காற்றோடு மிதந்து வந்து காதில் இனிமை சேர்க்க, இரு குடும்பங்களுமே மனநிறைவுடன் பெருநாளை வரவேற்கத் தயாராகின்றன.

# சிறுவர்கள் சங்கமம்



## நடனம் ஆடிய தேனீக்கள்

சோலை நிறையப் பூத்தப் பூக்களைத்
தேனீக்கள் கண்டன
கூட்டை நோக்கி விரைந்து சென்று
தகவலைப் பகிர்ந்தன

மேலும் கீழும் பறந்து தானே
வாலை ஆட்டின
சுற்றி வந்து வட்ட நடனம்
அழகாய் ஆடின

நடனத்தைக் கண்ட தேனீக்கள் எல்லாம்
நலமென மகிழ்ந்தன
தேன் இருக்கும் சோலை நோக்கி
கூட்டமாய்ச் சென்றன

பூக்களில் அமர்ந்தத் தேனீக்கள் கூட்டம்
தேனை உறிஞ்சின
வயிறு நிறைய பருகிய பின்னே
நன்றி சொல்லின

நட்பாய் சிரித்த வண்ணப் பூக்கள்
தலையை அசைத்தன
மகரந்தம் சுமந்த தேனீக்கள் அங்கே
வனத்தைப் பெருக்கின

**– அன்புச்செல்வி சுப்புராஜு**

## வெள்ளி நிலவு

வெள்ளி நிலவு வட்ட நிலவு
வானில் வந்தது - இருள்
வேதனையை முழுதும் நீக்கி
வெளிச்சம் தந்தது!

உள்ள ஒளியை முற்றும் நல்கி
வள்ள லானது! - பணம்
உறங்க வைப்பார் திருந்து தற்குப்
பாடம் சொன்னது!

உண்ண உணவு அடம்பி டிக்கும்
தம்பி தங்கைகள் - தினம்
உண்டு களிக்க அம்மா வுக்குத்
துணையாய் ஆனது!

எண்ண முடியா மைல்கள் தூரம்
இருந்த போதிலும் - தான்
ஏற்றக் கடமை தவறா வண்ணம்
இன்னும் ஆற்றுது!


மேடு பள்ளம் நிறைந்த பகுதி
இங்கே இருப்பதாய் - வளர்
விஞ்ஞா னத்தார் நுணுகித் தேர்ந்து
வியக்க உரைக்கிறார்!

நாடி நீயும் நிலவின் மேன்மை
அறிந்து தெரிந்திட - பல
நன்மை கூட்டும் அறிவு நூல்கள்
விரும்பிப் படித்திடு!

**– இமயபாரதி**

## ஊக்கம்


தளர்வில்லா செயல்
மன எழுச்சியால் நல்லெண்ணம்
செய்யும் செயலில்
ஆர்வம் ஆர்ப்பரிக்க
முயற்சி முன்னிருக்க
துணிவு துணையிருக்க
திடமான திட்டம் உடனிருக்க
உந்து ஆற்றல் உருவெடுக்க
குறிக்கோள்களை தவறாதிருக்க
செய்யும் செயலை கண்ணும் கருத்தாக
அறிவை ஒரு கருவியாக
பயன்படுத்த.. பண்படுத்த
நாம் எடுக்கும் முயற்சியே-ஊக்கம்
இதை கண்டறிவதே ஞானத்தின் ஆக்கம்
நன்மைதான் இதன் மார்க்கம்
இதுவே ஊக்கத்தின் தாக்கம்



**ம.லவன்**
சென்னை

## உயிர்களிடத்து உயிர்ப்பாய் இரு

அனைத்துயிர்களும் ஆனந்தமாய் வாழ
உணர்வுகளை போற்ற
அறத்தோடு சேர
மனதில் இரக்கத்தோடு தோன்ற
பிற உயிர்களிடத்து அன்பாகப் பழக
இவ்வதிகாரமே அதற்கு எடுத்துக்காட்டாக
உயிர்களை கொல்லாது
துன்பங்களை வரவழைக்காது
தனக்குள்ளதை பிறருக்கு
பகுத்தண்ணும் குணமே
ஆகச்சிறந்த பண்பே
பிரிதோர் உயிரை நீக்கும் உரிமை
மனித குலத்திற்கு சிறுமை
இதனால் நம் வாழ்விற்கு தீமை
பிற உயிர்களை துன்புறுத்தாமல்
நல்லறத்தை மட்டும் வளர்ப்போம்




**ம.குசன்**
சென்னை



ஓவியம்
மணிமாறன். ச (*LKG*), சென்னை





தோ.ம.மோனிகா
நான்காம் வகுப்பு
தருமபுரி மாவட்டம்





படம் வரைந்தவர்
த.சூ.தருண்விஷ்வா

# கனவு

அருகாவூரில் சுமிதா என்ற சிறுமி மூன்றாம் வகுப்பு படித்து வந்தாள். அவளுக்குச் சாப்பிடுவது என்பதே அவளுக்குப் பிடிக்காத வேலை. அவளுக்கு வீட்டில் விளையாடுவதற்கு நிறைய பொம்மைகள் விளையாட்டுப் பொருட்கள் இருந்தன.

சுமிக்கு எப்போதும் விளையாடுவதற்கு ரொம்ப பிடிக்கும். அவளது அப்பா குமார் வேலையில் இருந்து வந்தவுடன் சுமியுடன் கட்டாயமாக விளையாடுவது வழக்கமாக இருந்தது.

அப்போது சுமியின் அம்மா வசந்தி, சுமி... அடிக்கடி சோர்ந்து விடுகிறாள் அதனால் தொடர்ந்து விளையாட முடியவில்லை

மருத்துவமனைக்கு அழைத்துச் சென்ற போது,டாக்டர் சாப்பிட நிறைய சத்தான உணவு வகைகளைச் சாப்பிடக் குடுக்கச் சொன்னார்” எனக் கூறிக்கொண்டே இரவு சாப்பாடு எடுத்து வைத்தார்.

அப்போது சுமி எனக்கு சாப்பாடு வேண்டாம் எனச் சொல்லிவிட்டு உறங்கச் சென்றாள். அப்போது சுமியின் அத்தை ஊரில் இருந்து “சுமி.... சுமி” என அழைத்துக் கொண்டே வந்தார். அப்போது மகிழ்ச்சியோடு துள்ளி ஓடி வந்து அத்தை என கட்டிக்கொண்டு முத்தமழையிட்டாள்.

வசந்தி சாப்பிட அழைத்தாள் மறுபடியும் மறுத்து விட்டாள் சுமி. அத்தை விஜியா கதை கூறத் தொடங்கினார். சுமி ஆர்வமாக உட்கார்ந்து கேட்கத் தொடங்கினாள். அப்போது சுமிக்கு புரியும் வண்ணம் பழங்களைப் பற்றி கூறத் தொடங்கினார் அத்தை.

ஒவ்வொரு பழத்திலும் ஒரு சத்து நிறைந்து உள்ளது என்று அதன் பயன்களைக் கூறிக் கொண்டே இருந்தார். பழங்களை வெறுப்பாக பார்க்காமல் விரும்பிச் சுவைக்க வேண்டும் எனக் கூறினார். அதைக் கேட்டுக் கொண்டே அப்படியே உறங்கி விட்டாள் சுமி.

அப்போது சுமி கனவில் பழங்கள் வந்து விளையாடிக்கொண்டே இருந்தது பழங்களோடு நாள் முழுவதும் விளையாடி மகிழ்வது போல் சுமிக்குத் தோன்றியது. எழுந்து பார்க்கும் போது தான் அனைத்தும் கனவு என புரிந்தது சுமிக்கு.

நிறைய சத்தான உணவு உட்கொண்டால் தான் எப்பொழுதும் சோர்வு இல்லாமல் சுறுசுறுப்பாக இருக்க முடியும் என உணர்ந்தாள் சுமி.

**ஜீ.மைத்ரேயி**





# வரிக்குதிரை

வரிக்குதிரை, வரிக்குதிரை
கோடு போட்டது யாரு..?

நான் வரைந்த வண்ணங்களெல்லாம்.
அழகாய் இருக்கு பாரு...

கருப்பு, வெள்ளை கோடுகளை
வரைந்தேன் உனக்கு பாரு...

மனிதனின் கை விரல் ரேகைப் போல
ஒன்றுப்போல ஒன்று இல்லாத
தனித்தன்மையாய்க் கோடுகளை
வரைந்தேன் உனக்கு பாரு...

வரிக்குதிரை, வரிக்குதிரை
கோடு போட்டது யாரு...?

கருப்பு கோடு இருப்பதனால்
வெள்ளை விலங்கா நீ - இல்லை
வெள்ளை கோடு இருப்பதனால்
கருப்பு விலங்கா நீ...

வரிக்குதிரை, வரிக்குதிரை
கோடு போட்டது யாரு...?

உச்சி முதல் பாதம் வரை
கருப்பு, வெள்ளை கோடுகளை
வரைந்தேன் உனக்கு பாரு...
வரிக்குதிரை. வரிக்குதிரை
கோடு போட்டது யாரு...?

**செ. கரோலின் பெல்சியா**
திருப்பூர்.

ஓவியம்
வே.க.ரோஹின்கவீ





ஓவியம் வரைந்தவர்

ஷ். அனன்யா [15]
சத்யா சிறப்பு பள்ளி
புதுச்சேரி



## புதைகுழியின் நியமங்கள்

சேர்த்து வைத்த
மொத்த நாளை
செலவு செய்யும் ஒரு தருணம்
வரும் நாளில் வரும்
இந்த அழகான மரணம்

ஆசைகள் வளர்த்து
அலைந்து திரிந்து
ஆதி மறந்து
அந்தம் துறந்து
வேண்டாததை வேண்டி

பாதி வழியில்
பயணம் முடித்து
பயந்து பயந்து
வாழ் நாள் கழித்து

இருந்த போது வாழத்தெரியாமல்
இறந்த பிறகு வாழமுடியாமல்
ஆன்மா பேசும் பேரமே !
புதைகுழியின் நியாயமே!

நான் இருந்தால்
எல்லாம் நடந்திருக்கும்
நீ இருந்திருந்தால் எனக்கு
நிறைவாகவே கிடைத்திருக்கும்.

**வி.அபிவர்ணா**
முல்லைத்தீவு.



## தன்முனைக் கவிதைகள்

இருளுக்கும், ஒளிக்கும் நடுவிலான
நுட்பமான தரிசனவெளிகள்
கட்டமைக்கப் படுகின்றன
மனப்பிறழ்வின் தருணங்களாக...

நகமும், சதையுமான சிம்மாசனத்திற்கு
எச்சில் ஒழுகக் காத்திருக்கிறது
தனக்குத் தானே முள் மகுடம்
சூட்டிக் கொண்ட மானுடம்

பல்லுயிர்களின் சுயம் காக்க
சமன்மை உலகை செதுக்குகிறது
ஐம்பூதங்களையும் தன்னுள் அடக்கிய
உலகின் கருவறை

**அன்புச்செல்வி சுப்புராஜு**

## இனிய நாட்கள்

இடர்கள் அறியா இருபது வயது
தொடருந்துப் பயணம் துணைகள் இன்றி
இரண்டாம் வகுப்பு இருக்கையில் அமர்ந்து
இரசித்த இயற்கை இன்றும் இனிக்கும்
வெண்ணிற முகில்கள் விரைவதும் கலைவதும்
எண்ணிறை கனவொடு ஏகிடும் உழவோர்
வச்சிரம் அன்ன வைர நெஞ்சினர்
உச்சி வெய்யிலின் உக்கிரம் மறப்பர்
பொன்வயல் சூழ்ந்து பொலியும் பூமி
நன்னிலம் செழிக்க நடமிடும் வாய்க்கால்
விரிந்த வானில் வெண்புறாக் கூட்டம்
நெரிவாய் ஆனை இறவினில் கூடும்
கடல்நீர் ஏரியின் கரையிலும் உப்பள
நடையிலும் ஆவலாய் நாடிடும் இரையை
சிற்றூர் பலவும் செழுமையின் கோலம்
பற்பல காட்சிகள் பகிரும் பயணம்
இற்றைநாள் வரையும் இதயம் நிறைக்குதே!

**சுகந்தி மார்க்கண்டு**
கனடா

# இட்டிலி

குறள் வெண்பா

இட்டிலிக்கு ஏதுசுவை என்றும் தனியாக?
சட்டிணிசாம் பாருமின் றேல்!

இன்றேல், பருப்பிட்ட இட்டிலிகா ரப்பொடி
நன்றாக ஏற்குமோநம் நாவு?

நாவடக்கம் என்போரும் நான்கைந்து சேர்த்துண்பார்
பூவான குஸ்பூவைப் பார்த்து!



பார்த்தவுடன் நாவூறும் பல்சுவையாட் டுச்சாறு
சேர்ப்போம்நாம் *புட்டுமா பத்து!

பத்தும்தான் பத்தாதே பக்கத்தில் பாத்திரத்தில்
சத்தான பாயாக்கால்ச் சாறு!

சாறென்றால் சென்னைதான், சாற்றில் மிதக்கும்பார்
சோறுபோல் நீபிசைந்தே உண்ணு!

உண்ணுதற்கே ஏற்றதாம், ஊறியநல் **பர்கராய்
பண்போன்ற பெங்களூர்த் தட்டு!

தட்டுயிட்லி என்றாலே தட்டே மணக்கும்பார்
பட்டாணி வெண்குருமா சேர்ந்து!

சேர்ந்துவரும் சாறினோடு சேர்ந்துதரும் இட்டிலி
சோர்வுதரா நல்மணத்தைச் சேர்த்து

சேர்த்த குருமிளகும் சேர்சுக்கும், காஞ்சிதனில்
பார்த்துசெய்த கோவிலிட் லி.

**சுந்தர்ராஜ் தயாளன்**
பெங்களூர்

* புட்டுமா = கொங்கு நாட்டில் இட்டலியை
புட்டுமா என்றும் அழைப்பர்!

** பர்கர் = Burger

# சாத்திரம் ஏதுக்கடி?

**- ஜெயந்திபத்ரி**



கங்கா தன் அலுவலக வேலையாக திருச்சி சென்று விட்டு சென்னைக்கு பேருந்தில் திரும்பிக் கொண்டிருந்தாள். பேருந்து சென்னையை நெருங்கிக் கொண்டிருந்த சமயம் திடீரென கி..... ரீச் என்று சப்தமிட்டபடி ஒரு குலுங்களுடன் நின்றது. பேருந்து ஓட்டுனரும், பயணிகள் பலரும் பேருந்தை விட்டு இறங்கி சாலையில் முன்னோக்கி ஓடினர்.

"என்னவாக இருக்கும்?' கங்காவும் ஆர்வம் தாங்காமல் இறங்கிச்சென்றாள். அங்குஒருகார்விபத்துக்குள்ளாகியிருந்தது. அதனருகே மோசமாக அடிபட்டிருந்த ஆண் ஒருவர் மயங்கிய நிலையில் சாலைஓரத்தில் படுக்கவைக்கப்பட்டிருந்தார்.

பாவம்! யாரோ தெரியலையே? படபடத்த மனதை இழுத்து பிடித்தபடி அருகில் சென்று பார்த்தாள்

''ஐயோ... பாஸ்கர்மாதிரியிருக்கே!'' அதிர்ச்சியுடன் வாய் விட்டுகூறியவளை கவனித்த அங்கிருந்த போலீஸ்காரர் அவளிடம், ''மேடம் உங்களுக்கு தெரிஞ்சவரா இவரு? அடிபட்டவரை ஆஸ்பத்திரியில் சேர்க்க சென்னைக்கு இப்போ ஆம்புலன்ஸில் கூட்டிட்டு போவாங்க. உங்களுக்கு தெரிஞ்சவங்களா இருந்தா அடிபட்டவருடன் நீங்க மருத்துவமனைக்கு வர முடியுமா? எங்களுக்கும் அவரைச் சேர்ந்தவங்களுக்கு விவரம் சொல்ல உதவியாய் இருக்கும்!'' என்றுகூறினார்.

"கண்டிப்பா வரேன் சார்"! இயந்திரமாய் பதிலளித்தாள்.

ஆம்புலன்ஸில் அமர்ந்திருந்த கங்காவின் மனம் பின்னோக்கி சென்று தனது கல்லூரி நாட்களின் நினைவில் மூழ்கியது.

கங்கா அப்போது பட்டபடிப்பு கடைசி வருடம் படித்துக்கொண்டிருந்தாள்... பொறியியல் கல்லூரியில் கடைசி வருடம் படித்துக் கொண்டிருந்த பாஸ்கர் அவளுடைய வகுப்புத் தோழியின் அண்ணனாக முதன் முதலில் கங்காவிற்குஅறிமுகமானான்.பின்அடுத்தடுத்து வந்த நாட்களில் இருவரும் பலமுறை சந்தித்து, பேசி சந்தோஷமாய் காதல் வானில் பறக்கத் துவங்க, .அவர்களுக்குள் காதல் யுகங்களாய் நீண்டு வளர்ந்தபோது,நாட்கள் நிமிடங்களாய் ஓடியது.படிப்பு முடிந்தவுடன் பாஸ்கருக்கு பெரிய கம்பெனி ஒன்றில் வேலை கிடைத்தது. கங்காவிற்கும் பட்டபடிப்பு முடிந்துவிட்டதால் வீட்டில் திருமணத்திற்கு வரன் தேட ஆரம்பித்தனர். இருவரும் தங்கள் காதலை அவரவர் பெற்றோர்களிடம் சொல்லி தங்களின் திருமணத்திற்கு அனுமதிகேட்ட போது இரு குடும்பத்திலிருந்தும் எதிர்ப்பு குரலே எழும்பியது.. கடைசியாக பாஸ்கரை சந்தித்த அந்த நாள் இன்றும் கங்காவின் மனதில் ஆறாத ரணமாகத்தான் இருக்கிறது.

''கங்கா! , என், அம்மாவிடம் எவ்வளவோ சொல்லிப்பார்த்துவிட்டேன். தன் அண்ணனுக்கு அவர் இறக்கும் தருவாயில் தான் கொடுத்த வாக்கிற்காக அவர் மகளைத்தான் நான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கிறாங்க.. பாவம் கங்கா அவங்க. என்னையும், என் தங்கையையும் அப்பா இல்லாம தனி ஆளாய் கஷ்டபப்பட்டு இவ்வளவுதூரம் வளர்த்து ஆளாக்கி இருக்காங்க.என்சந்தோஷத்தைவிடஅவங்க சந்தோஷம் தான் முக்கியம்னு எனக்கு தோணுது. என்னைத் தப்பாகநினைக்காதே.! எனக்கு அவங்க சொல்வதைக் கேட்பதைத் தவிர வேறுவழி தெரியவில்லை.'' என்று கூறியவன் அவள் பதிலுக்குக்கூட காத்திராமல் திரும்பிச்சென்றுவிட்டான். தன் உணர்வுகளைப்பற்றி சிறிதும் கவலைப் படாமல் அவன் முடிவை மட்டும் கூறிவிட்டுச் செல்லும் அவனை வேதனையும், விரக்தியுமாய் நோக்கிய கங்கா தானும் தன்மனதளவில் ஒரு முடிவுடன் தன் பெற்றோர் விருப்பப்படி திருமணம் செய்துகொள்ள சம்மதித்தாள்.

கங்காவின் பெற்றோர் தேர்வு செய்த மாப்பிள்ளை ராஜேஷ் வெளிபார்வைக்கு நல்லவன் போல் தோன்றினாலும் திருமணத்திற்குப் பின் அவனுடைய சுயரூபம் தெரியத்துவங்க கங்கா மனதிற்குள் நொறுங்கித்தான் போனாள். புகுந்தவீட்டின் இயந்திரத்தனமான வாழ்க்கையில் சாவி கொடுத்த பொம்மையானாள். கணவன் ராஜேஷ் வாயைத்திறந்தால் ஒன்று சாப்பிட இருக்கும், இல்லை கங்காவைக் குற்றம் சொல்ல இருக்கும்.! இதில் சந்தேகப்பேய் வேறு அவனைப் பிடித்து ஆட்டியது,. கங்காவிற்கு தினம்தினம் அக்னிபிரவேசம்,! எண்ணங்கள் அழுக்காகியிருந்த கணவனை எப்படித் திருத்துவது என்று தெரியாமல் தவித்தாள். கங்காவின் வயிற்றில் குழந்தை ஸ்வேதா உருவான சமயம் அது தன் குழந்தையே இல்லை என்று சந்தேகப்பட்ட ராஜேஷ் கருவைக் கலைக்க கங்காவை மாத்திரை சாப்பிடச்சொல்லி வற்புறுத்தினான். அதையும் மீறி குழந்தை ஸ்வேதா பிறந்தாள். தன் மனதின் ரணத்திற்கு மருந்திடப் பிறந்தவள் என்று குழந்தையே தன் உலகமாய் சுற்றி வந்தாள் கங்கா. ஸ்வேதாவிற்கு இரண்டு வயதாயிருந்தபோது அவள் 'ஆடிஸம்'எனும் நோயால் பாதிக்கப் பட்டிருப்பது தெரிந்தது. கங்காவின் மீதும், குழந்தை பேரிலும் மிகுந்த வெறுப்புடன் இருந்த ராஜேஷ் வெறுப்பின் உச்சகட்டமாக விவாகரத்துப் பேப்பரில் கையெழுத்து போடச்சொல்லி கங்காவைக் கேட்டபோது கங்காவின் கண்கள் கண்ணீர் சிந்தவில்லை! மாறாக சிறையிலிருந்து விடுதலையான சுதந்திர உணர்வுடன், நிம்மதி பெருமூச்சுடன் கையெழுத்திட்டு தன் முழு சம்மதத்தை தெரிவித்தவள், மகளுடன் தன் பெற்றோரிடம் வந்து சேர்ந்தாள். கங்காவிற்கு இப்படிப்பட்ட அவல வாழ்க்கையை ஏற்படுத்தி கொடுத்ததை நினைத்து அவர்கள் கவலையில் ஒடுங்க, அவர்களை சமாதானப்படுத்திய கங்கா தனக்கென முதலில் ஒரு வேலையைத் தேடிக் கொண்டாள். வேலையில் முழு கவனத் தையும் செலுத்தி தன் கசப்பான திருமண வாழ்க்கையை மறக்க முயற்சித்ததில் மூன்று வருடங்கள் ஓடிவிட்டது.

ஆம்புலன்ஸ் மருத்துவமனையை அடைந்தது . கங்கா பழைய நினைவுகளி லிருந்து மீண்டு நிகழுலகுக்கு வந்தாள். மருத்துவ மனையில் உடனடி சிகிச்சை கொடுக்கப்பட்டதினால் பாஸ்கருக்கு மெதுவாக நினைவு திரும்ப தொடங்க அருகில் சென்ற கங்கா,'' இப்போ உங்களுக்கு எப்படி இருக்கு பாஸ்கர்?"என்று கவலையுடன் வினா வினாள் .

தன் அருகில் நின்றிருந்த கங்காவை உற்று நோக்கிய பாஸ்கர் மிகுந்த வியப்பும் அதிர்ச்சியும் அடைந்தான்.

''கங்கா...... நீயா? நீ எப்படி இங்க? திணறியபடி கேட்டான்.

விபத்தில் நடந்த விஷயங்கள் அனைத்தையும் கங்கா அவனிடம்கூற,

இறந்து போனவள் தன் மனைவி என்று கூறி மிகவும் கலங்கினான்.

'பாஸ்கர் ரொம்ப ஸாரி! இறந்த பெண் உங்க மனைவின்னு நீங்க சொல்வதைக் கேட்க ரொம்ப வருத்தமாயிருக்கு! உங்க வீட்டிற்கு தகவல் சொல்லணுமே!''

''என்அம்மா இப்ப உயிருடன் இல்லை. என் தங்கையும் திருமணமாகி வெளிநாட்டில் ஸெட்டிலாகிட்டா. என் மனைவிக்கும் வேறு நெருங்கிய சொந்தம் யாருமில்லை. எங்களுக்கு ஒரு குழந்தை யில்லை என்று மனதளவில் மிகவும் பாதிக்கப்பட்டிருந்த என் மனைவியுடன் திருச்சி அருகில் கோயிலுக்கு போயிட்டு திரும்பிக் கொண்டிருந்தபோதுதான் இப்படி ஆகிடுச்சு'' விம்மியபடி கண் களை மூடிக்கொண்டான். அவன் மனைவியின் கடைசி காரியங்கள், மற்ற சட்ட விதிமுறைகள் முடிக்க அவனுக்கு உதவினாள் கங்கா.. பாஸ்கருக்கு உறவென்று சொல்லி உதவிக்கு அழைக்க அருகில் யாருமில்லாத காரணத்தால் டாக்டரின் அறிவுரைப்படி அவன் உடல் ஓரளவு குணமாகும் வரை மருத்துவ மனையிலேயே சில நாட்கள் தங்கி சிகிச்சை பெற ஏற்பாடு செய்யப்பட்டது. தன் பெற்றோரிடம் அனைத்து விஷயங்களையும் கூறியவள், தினமும் மருத்துவமனைக்கு வந்து அவனை நன்கு கவனித்துக்கொண்டாள். பாஸ்கர் உடல்நிலையும் நன்கு தேறிவிட அவன் ஊருக்கு கிளம்பும் நாளும் வந்தது அன்று பாஸ்கரைப் பார்க்க அலுவலகத்திலிருந்து சீக்கிரமாகவே கிளம்பி மருத்துவமனைக்கு வந்த கங்கா அவன்அறையை அடைந்து உள்ளே செல்ல முயலுகையில் அறைக்குள் அவளுடைய பெற்றோர், பாஸ்கருடன் தன்னுடைய பெயர் சொல்லி ஏதோ பேசுவது கேட்க அறைக்கு வெளியே நின்று கூர்ந்து கவனித்தாள்.

'தம்பி நாளைக்கு நீங்க இங்கிருந்து கிளம்பப் போறீங்கன்னு கங்கா சொன்னா! முக்கியமான விஷயம் உங்களிடம் பேசணும்னு வந்தோம். எங்களைத் தப்பா நினைக்காதீங்க! கங்காவுக்கும், உங்களுக்கும் இருந்த காதலைப் புரிந்து கொள்ளாமல் அன்று பெரியவங்க நாங்க தப்பு செய்துட்டோம். அதற்கு பிராயச்சித்தம் செய்ய நினைத்துதான் உங்களிடம் பேச வந்தோம். இப்ப நீங்களும் உங்க மனைவியை இழந்து தனியாகிட்டீங்க. கங்காவும் தன் கசப்பான திருமண வாழ்க்கையை விட்டு விலகி வந்து உடம்பு சரியில்லாத மகள் ஸ்வேதாவுடன் தனித்து தவிக்கிறாள். வயதான எங்க ஆதரவு அவளுக்கு இன்னும் எத்தனை நாளைக்கு? மறுபடியும் நீங்க இருவரும் ஏன் வாழ்க்கையில் ஒன்று சேரக்கூடாது?''

விபத்து நடந்த நாளிலிருந்து அன்று வரை தன்னை அன்பாக பார்த்துக் கொண்ட, வேண்டிய உதவிகளைச் செய்த கங்காவிற்கு தான் வாழ்க்கை தருவது மிக நல்ல விஷயமென்று எண்ணிய பாஸ்கர் அவர்களிடம் ''கங்காவுக்கு நான் மிகவும் நன்றிகடன் பட்டிருக்கேன். அவ வரட்டும். இதுபற்றி பேசுவோம்'' என்றான்.

சட்டென்று அறையினுள்ளே நுழைந்த கங்கா தானும் ஒரு நாற்காலியில் அமர்ந்தவள் ''பாஸ்கர் நாளைக்கு காலை உங்களை டிஸ்சார்ஜ், செய்துடுவாங்க. நீங்க ஊருக்கு கிளம்பும் முன் உங்களை ஒரு முக்கியமான இடத்திற்கு அழைத்துச் சென்று காட்டுகிறேன். இப்போ நல்லா ஓய்வெடுங்க.'' என்று கூறிவிட்டுச் சென்றாள்.

மறுநாள் காலை பாஸ்கரை மருத்துவ மனையிலிருந்து ஒரு பெரிய வீடு போன்ற கட்டிடத்தினுள் அழைத்துச் சென்றாள். அங்கு சில பெண்கள் பயிற்சியாளர்களாய் பத்து, பதினைந்து குழந்தைகளுக்கு மிகுந்த ஆர்வத்துடன் பயிற்சி கொடுத்துக் கொண்டிருந்தனர். ஆச்சரியத்துடன் அவளைப் பின்தொடர்ந்த பாஸ்கர், ''கங்கா, இது என்ன இடம்? எதற்கு என்னை இங்கு அழைத்து வந்தாய்?''

''காரணமிருக்கு. இது நான் சில நல்ல

உள்ளங்களின் உதவியுடன் ஆடிஸம்' குறைபாடுள்ள குழந்தைகளுக்காக நடத்தி வரும் பயற்சிக்கூடம். நான் வேலைக்குப் போகும் நேரம் தவிர மற்ற நேரங்களில் இங்கு தானிருப்பேன். அதோ அங்கு கீ.போர்டு வாசித்துக் கொண்டிருப்பவள்தான் என் மகள் ஸ்வேதா. இங்கிருக்கும் குழந்தைகள் அனைவரும் 'ஆடிஸம்' எனும் குறைபாடுள்ள குழந்தைகள்.. ஸ்வேதாவின் இந்த குறைபாட்டையும் ஒரு காரணமாக்கி என்மனதைக் காயப்படுத்திய ராஜேஷ் என்னை விவாகரத்து செய்துவிட்டார். நேற்று என்பெற்றோர் உங்களுடன் பேசியது என் காதில் விழுந்தது. "பாஸ்கர், அன்று உங்க அம்மா மேல பரிதாபப்பட்டு என்னுடைய உணர்வுகளைப் பற்றி கொஞ்சம்கூட யோசிக்காமல் என்னையும், என் காதலையும் தள்ளி வச்சீங்க. இன்று என் பெற்றோருக்காக என் மகள்மேல் பரிதாபப்பட்டு எனக்கு வாழ்வு தர சம்மதிக்கறீங்க!. மிகுந்த தன்னம்பிக்கையுடன் தனித்து நின்று என் மகளை நன்கு வளர்த்து ஆளாக்க முடியும் என்ற உறுதியுடன்தான் கசப்பான என் திருமண வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்தேன். காதலன் கைவிட்டதால் கணவன், கணவன் கைவிட்டதால் காதலன்... என்று ஒரு பெண் ஆணை சார்ந்தால்தான். எதையும் செய்ய இயலும் என்ற.. கட்டுப்பாடும் கட்டளையும். வேண்டாமே! தனக்கேற்ற ஆண் துணையை சுதந்திரமாக தன் மன உணர்வுகள் காயப்படாமல் தேர்ந்தெடுக்கும் உரிமையை பெண்களுக்கு கொடுக்கணும். இப்போது எனக்கு திருமணம் பற்றிய எண்ணமேயில்லை. இந்தக் குழந்தைகளுடன் இருந்து நன்கு பயிற்சி கொடுத்து அவர்களை இயல்பு நிலைக்குஓரளவு மாற்றும்போது என்னை ஒரு சாதனையாளராய் நினைத்து என்மனது மிகுந்த சந்தோஷமடைகிறது.அதுவே போதும். .நான் உங்களுக்கு மனிதாபிமானத்தினால் உதவி செய்தேனே தவிர உங்க மேலேயிருந்த காதலினால் இல்லை. உங்களுக்கு செய்த உதவிக்கு நன்றி கடனாக எனக்கு வாழ்க்கை தரணும்னு அவசியமில்லை இப்போது என் வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் கிடைத்ததில் முழுமனத்திருப்தியுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். என் வாழ்க்கைக்கு ''ஃபவுண்டேஷன்'' போடவரேன்னு நீங்க சொல்றீங்க! வேண்டாங்க:. இந்த ''ஃபவுண்டேஷனின் நல்வளர்ச்சிக்கு''சேவை மனப்பான்மை யுடன் உதவும் ஒரு நல்ல மனிதராய் நீங்க இருந்தால் அதுவே எனக்கு சந்தோஷம். நாம் இருவரும் நல்ல நண்பர்களாகவே பிரிந்து அவரவர் வேலைகளை கவனிப்போம். நீங்களும் பத்திரமாக ஊருக்கு கிளம்புங்க.''என்று தீர்மானமாகக் கூறியவள், பாஸ்கருக்கு கையசைத்து விடைகொடுத்து அனுப்பி விட்டு துறுதுறுவென அலைந்து கொண்டிருக்கும் அந்த அழகிய குழந்தை களை அணைத்தபடி உள்ளே சென்றாள். ■

## உலகத்தின் நிறம்

உயர போக போக சில்லறை
எண்ணுகிறான் ஒருத்தன்
உயர போக போக
ஈரக்குலை நடுங்கியது
ஒருத்திக்கு
உயர போக போக
கூட்டம் கூடியது அங்கு
உயர போக போக
தன்னை
தயார் படுத்திக் கொண்டான்
தகப்பன்...
உயர போக போக தத்துவ தர்க்கம்
பேசினான் ஒருவன்

உண்மையில்
"உயர போக போக தான்
உயிரை உணர்ந்தது
அந்த குழந்தை"

உலகத்தின் மேலே வாழும்
மனிதர்களால்
ஒவ்வொரு இடங்களில் உலகம்
ஒவ்வொரு நிறத்தில் இருக்கிறது
இங்கே உலகத்தின் நிறம்
"வறுமை"

**ஆரூர்.சிவ.மணிவேல்**




# அகமேந்தி நூல் விமர்சனம்

கவிஞர் . ராஜ் ஆரோக்கியசாமி

நூலின் பெயர்: அகமேந்தி
நூலாசிரியர் : ச. ராஜ்குமார்
பக்கங்கள் : 104
நூலின் விலை: 150.

அகமேந்தி என்றால்...
அன்பினைத் தாங்கி நிற்கும்
பெண்ணாம்...

சின்னச் சின்ன தலைப்புகளில்...
கவித்துவத்தோடு...
வாழ்க்கையை வாசத்தோடு
சொல்கிறார்...
கவிஞர் அகமேந்தியாய்!

வானம்..

பறத்தலுக்கு வானம்
கைவசத்தில் இருக்கு
திரும்பி வந்தால்
கூடு கட்டத்தான்
மரங்களில்லை பறவைகளுக்கு

The sky

Freely in hand,
Sky to fly...
But no trees,
For birds.
To build a nest,
When coming back.

முதல் கவிதையிது...
முடக்குகிறது வேதனையில்...
பறவைகளில்லா வானம்...
அப்பப்பா
பதைப்பதைக்க வைக்கும் கவிதை.

நிம்மதி

யாரோ ஒருவரிடம்
நம்மைத் தேடுவதில்
ஆரம்பமாகிறது...
நிம்மதியின்மை

Mental peace

Searching ourselves
In someone
There only begins...
Restlessness.

உள்ளுக்குள் தேடாதவர்,
உலகத்தைத் தொலைக்கிறார்.
எனச் சொல்லும் கவிதை.

ஹைக்கூ கவிதை

விற்பனைக்கு வந்த
மீனின் கண்களில்
வற்றிய கடல் பார்க்கிறேன் ..!

Fishes came for sale
I am looking into the eyes of them
Dry sea.

மு.முருகேஷ் அவர்களின் மனம் கவர்ந்த ஹைக்கூ...
முத்தாப்பாய்!

முதலில் நல்ல ரசிகன் ...அப்புறந்தான் கவிஞன்.... கவிதை படியுங்கள் புரியும்... ஆம்!

எத்தனை அழகு

சிறகில் வானத்தை
முடிந்து கொண்டு செல்லும்
பறவைகள்தான்
எத்தனை அழகு

How beautiful!

Birds are carrying,
Sky on their wings...
How beautiful!

கனவு காணுவோம்... கவிதைகள் கனவு காண வைக்க வேண்டும்... இதோ இந்தக் கவிதைபோல...

கனவுகள் ..

விரிக்காமல்
சுருண்டு
கிடக்கும்
பாயில்...
நமக்கான
ஓராயிரம்
கனவுகள்
சுருண்டேயிருக்கின்றன.

Dreams

On the mat...
Without unfolding
And not rolled up
One thousand dreams...
For us
Are curled up.

ஒரு கன்னம் காட்டச்சொல்ல, மறுகன்னமும் காட்டச்சொல்லும் கவிதை... மென்மையான வன்மையாக...

நன்றி...

நேசக் கரங்களின்
கதகதப்பு எப்போதெல்லாம்
குறைகிறதோ
அப்போதெல்லாம்
கவிதையோடு
நடைப்பயிலக்
கற்றுக் கொள்கிறேன்
என்னை
புறந்தள்ளியவர்களுக்கு
நன்றி...

Thanks

Whenever
The warm fronts of
Friendly arms decreases,
At that time...
I learn to walk
With my poetry.
Thanks
For the people who outcast me.

உலகில் நினைவுகள் பற்றி எழுதாமல் கவிஞரா? எவ்வளவு அருமையாய்... நினைவுகளில் நீந்துவது போல்...

நின்னினைவுகள்

கவிதை எழுதத் தொடங்கும் முன்னமே
எழுத்துக்களில் சிம்மாசனமிட்டு
அமர்ந்து விடுகிறது
உன் நினைவுகள்.

Your memories

Before starting to write poetry...
Your memories
Enthroned and sits
On the alphabet.

பிரிவின் வலியை பிழியும் கவிதை

ஒன்று...

விடைபெற்ற பின்
குடையொன்றை
தந்து செல்கிறாய்
முழுதாய் நனைந்து
கொண்டிருக்கிறேன்
கண்ணீரில்!

After saying goodbye,
You give and go...
An umbrella.
I have completely soaked...
In tears.

வேண்டல் ..

கோவிலுக்குள் சென்ற மழை
என்ன வேண்டியிருக்கும்?
கடவுளிடம்....

ஆமாம் என்ன வேண்டியிருக்கும்?
மனிதர்களிடமிருந்து காப்பாற்றி
பத்திரமாய் கடல் சேர்க்கவோ?
இருக்கலாம்...

Prayer

What will it pray God?
The templeஸ
Entered rain.

இப்படி அருமைக்கவிதைகளால்
அகமேந்துகிறார் முதல் கவிதைத்
தொகுப்பில் கவிஞர்...

இன்னும் பல செம்மையான கவிதைகள்
புத்தகம் முழுவதும் அணிவகுக்கின்றன.
நீளம் கருதி சிலவற்றையே இங்கே
குறிப்பிட்டுள்ளேன்....

மேலும் கவிஞருக்கு குறுங்கவிதைகளே...
சிறப்பாக கைவர... அவற்றில்
கவனம் செலுத்தி... இன்னும் பல
அகமேந்திகளைத் தந்து சிறக்க என்
வாழ்த்துகளும்... பிரார்த்தனைகளும்!

# துளிப்பா

பட்டாலே வலிக்கிறது
நீருக்கும் கூர்மை தீட்டும்
பனிக்காலம்.

நிமிஷங்கள் கரைகிறது
மனிதனுக்கு மட்டும்மல்ல
பூமிக்கும்தான்.

குரோட்டன்ஸ் செடிகளுக்கு மட்டும்
கால்முளைத்துவிடுகிறது
விருந்தினர் வந்தால்.

காடு அழிந்தாலும்
கழனி மூழ்குகிறது
நிவாரணம் கேட்டு.

மண்ணில் விஷம் போட்ட
சம்சாரி விசயம்
தற்கொலையானது.

நிலத்தை உழுது கொண்டிருக்கிறான்
விவசாயி
பட்டணத்து சுவர்களில்.

நறுமணம் வீசும் நவீன கழிவறையில்
அமர்ந்து கேட்டாள் சிறுமி
கக்காமட்டும்யேன் நாறுகிறது என்று.

மழை ஓய்ந்ததும்
நிறம்மாறுகிறது
கூவம்.

மடிந்துவிட்ட மரம்
மறுபடியும் நிற்கிறது
கதவுகளாகவும், ஜன்னல்களாகவும்.

**எஸ்.மைக்கேல் ஜீவநேசன்.**
தேனி.

# முதல் வெற்றி

முயற்சியுடன் தளராது முனைதலே வெற்றி!
முன்னேற வழியாகும் முதலாய் வெற்றி!
வாழ்க்கைப் பயணத்தில் சோதனைகளே பாடம்!
வாழ்ந்திடும் மனிதர்க்கோ தேர்வுகளே பீடம்!

பச்சிளம் குழந்தையைப் பார்க்கும் ஆவல்!
இச்செனக் குழவியை முத்தத்துடன் தழுவல்!
போன்றதோர் அனுபவமே முதல் வெற்றி!
போலவுண்டே யாவர்க்கும் முதலில் வெற்றி!

கிலுகிலுப்பைச் சத்தங்கள் கேட்டுச் சிரித்தே
கிளுகிளுப்பைக் கொள்ளும் மழலையாய் மாற்றும்!
சிலுசிலுக்கும் காற்றாய் நெஞ்சம் மயக்கும்
சிற்சில வெற்றிகளோ சிசுவாய் ஆக்கும்!

வாகையே சூடுவோர்க்கு வலியோ தெரியாது!
வராது வருவதால் தோல்வியோ தாங்காது!
முதல் வெற்றியே என்றென்றும் கிடைக்காது!
முதலிலே உணர்ந்தால் ஏக்கமோ வெறுந்தூசு!

தன்னம்பிக்கை தானே தலைமையாய் நடத்தும்!
நன்னம்பிக்கை தூண்டும் நாளும் முன்னேற்றம்!
முதிர்ந்த காய்களே முதலில் கனிந்திடும்!
முதிர்ச்சி எண்ணத்தால் மனமும் கனிவாகும்!

பக்குவம் மிகுந்தால் பாயாது அகமும்!
பக்கத்தில் இருத்தும் நிதானத்தை அணுக்கம்!
வெற்றியும் தோல்வியும் சமமாய்ப் பார்க்கும்
வெல்வதைத் தாண்டியே சமநிலை ஏற்கும்!

**கவிஞர் மாலதி இராமலிங்கம்**, புதுச்சேரி.

# நேரிசை வெண்பா

## வெண்பாப் பயணம் *17*

# உணவு வகை

தோசையினைச் சுட்டுநீ தொக்கோடு தந்ததும்
ஆசையாய் வந்தேன் அருந்த - பசைபோலே
நாவினில் ஒட்டும் நளபாகம் எங்குகற்றாய்
மாவினையே வைத்தாய் மடித்து.

**கோவை.லிங்கா**

.

கண்ணுசரி இல்ல கரண்டி பிடிக்காதேன்(னு)
என்மாமா சொல்லி எதைஎதையோ - கிண்டறார்....
வாயில வச்சா வயிறும் குமட்டுதே
நோயினால் நொந்தேன் நொடித்து.

**தென்றல் கவி**

.

ஆசையாய் சாப்பிட அல்வா எடுத்திட
பாசமாய் ஒட்டின பாந்தமாய்- தேசமே
நேசம் புகழ்கின்ற நண்பனின் கைவண்ணம்
பேசவக் கற்றான நாக்கு.

**பாண்டிச்செல்வி கருப்பசாமி கோவை**

.

நிலைக்கும் சமையல் நிலையா உலகில்
மலையென மாற மனையாள் - நிலையை
நிலையாய் மதிப்பாய் நிலவுலகில் என்றும்
உலையும் உரைக்கும் உணர் .

**சரஸ்வதி பாஸ்கரன்**

.

உப்பும் குறைந்தால் உடம்பிற்கு நல்லதுதான்
தப்பிதமாய்ப் பேசல் தவறன்றோ - எப்போதும்
நல்லதையே நாடி நலமுரைக்கும் இல்லாளைப்
பொல்லாங்கு பேசாதே போ!.

**நிறைமதி நீலமேகம்**

.

அப்பப்போ தந்தாயே ஆறியநற் தேநீரைத்
தப்பாமல் நான்பருகித் தான்வந்தேன் - இப்போ
சுடுநீரில் சீனியிட்டுச் சூடாகத் தாராய்
விடுதாயே வேண்டாம் விசம்!

**கவிதா முகுந்தன் தம்பலகமம்**

.

உப்புமா கிண்டித்தான் உண்ணக் கொடுத்தாயே
சப்பெனத் தின்னச் சகித்தேன்நான் - நித்தமும்
தப்ப வழியில்லை தங்கமே இவ்வுலகில்
உப்பொன் றிலையோ உரை.

**கு. கமலசரஸ்வதி**

.

சப்பென்(று) ஒருநாள் சமையல் இருக்கென்றேன்
உப்பையே சோறாய் உடன்வைத்தாய் - எப்பதான்
தப்பென்று உணர்வாயென் தாரமே உன்சமையல்
குப்பைக்கே போகும் குறி.

**க.சங்கரபாண்டியன்**

.

ஆசையாய்க் கேட்டேனே அன்புடை யாகவே
தோசையாய்த் தந்தாள் சுடச்சுட - மீசையில்
ஒட்டியது நீள்முடி ஓரமாய் வீசினேன்
தட்டம் தரையிலே தான்

**பா.இந்திரன்**

.

என்னடி சாம்பாரில் இவ்வளவு காரத்தைக்
கண்மண் தெரியாமல் கொட்டியுள்ளாய்- சின்னவன்
கண்களில் கண்ணீரைக் காணடி செல்லமேநீ
இன்னமுது ஆக்கிப் பழகு.

**குளோரிசக்தி, கரூர்.**

.

உட்கொள்ள மச்சானே உப்புமா செய்யென்றால்
பட்டெனக் கஞ்சிபோலப் பாய்கிறதே - வட்டிலில்!
பாய்ச்சலாய் வாயடைக்கப் பேசினால் போதுமா?
காய்ச்சியதைக் கொட்டிக் கழுவு.

**வானதி சந்திரசேகரன்**

.

காயமும் செய்யும் கணீரென்(று),ஒலியுண்டாம்
ஆயுதமும் ஆகும் அறிவீர்காள் - மாயமாய்க்
கைதவறும் கண்ணாடி காரிகையாள் செய்துதந்த
மைதாசேர் பூரியு மொன்று

**செந்தில் குமார்**

.

புகையும் நெருப்புமில்லை பொல்லாங்கு செய்யும்
பகையாய்த் தடையுமில்லை பாரீர்; - மிகைசக்தி
மின்னடுப்பு வந்தபின்னும் மீந்த "பழஞ்சோறே"
என்தட்டில் வீழ்கிறதே ஏன்...?

**ஜ.க.நாகப்பன்**

.

வாசத்தால் மூக்குணர்த்த வாய்சுவைக்கும் ஆசையிலே
பாச மனைவியினைப் பார்த்திட்டேன் - நேசமுடன்
தட்டினிலே வெண்பொங்கல் தந்தாள் ஒருபிடிதான்
பட்டென் றுடைந்ததென் பல்!

**பாவலர் கருமலைத்தமிழாழன்**

.

காடுமேடு போயிநான் கால்கடுக்க வந்தாக்கா
யூடுப்ல பார்த்துதான் உப்புமாவே - போடுவாளாம்
தேடுதே டுன்னுதேடி சேர்க்கும் ரவையெதுன்னு
பா(ஓ)டுறாளே கிண்டுவாளா பாரு

**கவிதா சீனிவாசன்**

.

நசநசவென்(று) ஏனென்னை நைக்கின்றீர் என்றாள்
ரசமாடி வைத்தாய் ரசம்.!ஓ. - விசந்தோற்கும்.!
சந்தைப் புளிகரைத்துச் சாகடிக்க நீசெய்யும்
விந்தைக்(கு) ஈ. டுண்டோஅவ் வீடு

**வள்ளி முத்து**

.

காரமும் தூக்கலாய்க் கண்ணீரும் கண்களில்!
பாரமும் நித்தமே பாராய்நீ - தாரமே!
காரத்தை நீக்கிட காரிகையே கும்பிடுவேன்!
நேரமாய் வந்திடுவேன் நான்!

**மகேஸ்வரி கிருஷ்ணசாமி**

.
உப்பிடாமல் உப்புமா கிண்டி உயிரெடுக்றா!
தப்பிதமா பால்காய்ச்சி தீயவெக்றா! - கப்பைக்
களியுமிங்கே கஞ்சியாச்சே!, காப்பீலெ ஈ..ஈ!!
புளியுமின்று கூடுதல்தான்...போ.

**கவிஞர் சுந்தரராசன் தயாளன்**

.
உடம்புசரி யில்லன்(னு) ஒருநாள் சமைத்தாய்க்
குடலுமட்டும் வாந்தி! கொடுமை - இடர்தரும்
இந்த உணவினை இப்படி செய்த.. நீ
வெந்து மடிந்துநொந்து வீழ்.

**மாலதி திரு**

.
இட்டவி யாயிது என்றுநான் கேட்டதற்கு
விட்டெறிந்தா யென்மீது வீசியே – பட்டால்
பரலோகம் சேர்ந்திருப்பேன் பாவியே நானும்
குரலுயர்த்தல் குற்றமா கூறு!

**செல்லமுத்து பெரியசாமி**

.
வடக்கத்திக் காரி வனப்பில் மயங்கி
அடங்காத காமம் அடைந்தேன் - சுடசுடச்
சப்பாத்தி தந்தாள்,நான் சாப்பிட்டேன், நொந்தவள்மேல்
அப்போதே விட்டேன் அவா.

**ஜாய் சத்தியா**

.
பிரியாணி கேட்டேன்; பிரியமாய் இல்லாள்
சரியாகச் செய்வதாய்ச் சாற்றிக் – கரிக்கவே
பேருப்பை உள்ளிறக்கப் பேய்முழி கொண்டோனாய்
ஊருள் உயர்வென்றேன் உண்டு

**விசு. இம்மானுவேல், பெங்களூரு**

.

தப்புநான் செய்ததற்கு தண்டனையா ? அப்பப்போ
உப்புமா செஞ்சே உயிரெடுக்க - எப்பதான்
எட்டுமோ  உன்காதில் என்வயிறு வாய்வலிக்க
கொட்டியழும் கண்ணீர்க் கதை

**ஞால ரவிச்சந்திரன்**

.

தப்பாமல் நாளும் தருவாயே ஒன்றெனக்கு
உப்புமா என்ற உருவத்தில் - அப்பப்பா
எங்கிருந்து கற்றாயோ என்னைப் பழிவாங்க
தங்கமே வேண்டாம் தவிர்.

**இரா அழகர்சாமி**

.

விட்டால்பார் நாலுஅறை  விட்டிடுவேன் நானுமின்று
தட்டில் நிரம்பத் தருகின்றாள்_பிட்டெனக்கு
மென்றுநான் தின்ன மெதுவாகப் போட்டேனே
சென்றவா யெல்லாம்கல் சே.

**வா.சண்முகம்**

.

நல்ல சுவைகிட்ட நாவின் உணர்வுகளும்
வல்லமையால் தேடியே வாடுதே, நல்லாய்
ஒருநாள் உசிதமென உண்ணக் கொடுத்தால்
திருநாளாம் அந்த தினம்!

**கண்ணன் கோபாலன்**

.

என்னதான் ஆக்கிடினும் இன்சுவை மட்டுறுத்தி
மென்மைச் சிரிப்புடன் முன்வைப்பாள் - அன்பாய்ப்
பரிமாறும் அன்னமவள் பார்க்க இனிமை
சரிவரச் சேர்ந்த சுவை.

**ஃபக்ருதீன் இப்னு ஹம்துன்**

.

பணியாரம் செய்றேன்னு பாய்ஞ்சவள் போக
மணிபாத்து காத்திருந்தால் வாயில் - பணிவின்றி
"என்னசட்டி வாங்கினாய்?!" என்றவுடன் நான்சுட்டக்
கன்னப் பணியாரம் காண்!

**செ. இராசா**

.

உப்பிலாம தின்பண்டம் ஊறுகாய்க் கும்உதவா
தப்பாமல் நாளும் தானுண்கிறேன் - எப்போதும்
இப்பேச்சா என்றே இடித்துரைக்கும் தேவியே
உப்பாலே போராட்டம் உண்டு..

**சேந்தன்குடிச் செந்தமிழாழன்ம புதுக்கோட்டை.**

.
அள்ளியள்ளி வச்சாலும் அம்மிக்கல் இட்டிலி
உள்ளோட நின்றமும் ஒப்பாரி - தள்ளாடி
தண்ணியில வந்தாதான் தாக்கிடலாம் போதையில
மண்ணான இட்டிலியே மப்பு

**மன்னை மணிமாறன்**

.
இட்லியைத் தட்டிலிட எட்டூருக் குங்கேட்கச்
சட்டெனவே புத்தியில் தன்மானஞ் - 6சொட்டியதால்
பட்டினியாய்ப் போகிடவே பாவிமகள் புன்னகைக்கத்
துட்டிருந்தும் வந்த துயர்.

**கவித்தென்றல் சௌ.நாகநாதன்**

.
காட்டும் உரைப்புகளால் காதுகண் தானெரிய
போட்டாய் மிறகாய்ப் பொடியதனைக் காட்டமாய்
என்னடி கண்ணேநீ இப்படிச் செய்யலாமா
என்ன சமையல் இது

**பாவலர் தாழை ந இளவழகன் மணப்பாறை.**

.
கண்டபடி திட்டும் கணவரே பல்வலியால்
எண்ணெய் பலகாரம் தின்ன - முடியாமல்
ஏங்கும் என்னிடம் எள்ளுருண்டை காட்றியே
ஓங்கியே வைப்பேனே ஒன்று.

**சு.யோ.முத்தமிழ்ச்செல்வி நத்தம்**

.
குழம்புக்கோ உப்பதிகம் கூட்டாதே என்றேன்
புலம்பாதீர் என்றுசொல்லிப் போனாள் - குழம்பிய
மூளை கொடுத்த முனைப்பினில் உப்பின்றி
வேளைதோறும் வைத்தாள் விருந்து .

**கவிஞர் அ முத்துசாமி தாரமங்கலம்**

.

நாள்தோறும் தின்பதற்கு நல்ல புளிச்சோறா?
வேள்வியெனில் இஃதே! விருப்பமில்லா தேள்முள்!
இதுதான் இயலுமென இல்லாள் சமைத்தாள்
அதுவே துயரெனும் ஆறு!

**பாலமுருகன்**

.

பாவிக் கணவா படுத்தேனே காய்ச்சலில்
ஆவி துடிக்க அழைத்தேனே - கூவித்தான்
சொல்லிக் கொடுத்தேன் சுவைரசம் வைத்திட
பல்லிவிசம் செய்தாயே பாழ்.

**ஓசூர் மணிமேகலை**

.

இன்னிக்கும் அந்த எதுக்களிக்கும் உப்புமாவா?
அன்னையா இல்லை அரக்கியாநீ? என்றவனே
இன்றைக்(கு) அதைவேண்டி ஏங்குகிறேன்! செய்துதர
அன்னைதான் இல்லை அருகு!

சுந்தர ராசன்

.

அழகி அறிவாளி என்பதனால் நானும்
உளம்விரும்பி ஏற்றேன் அவளை - முழுதாய்
அடுப்படி வேலை அறியாத பாவி
அடுமடையன் ஆக்கினாள் அன்று.

கலாபூஷணம் அப்துல் ஹலீம், ஏறாவூர், இலங்கை.

**வெண்பாப் பயணம் *17* ல் கலந்து சிறப்பித்தவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படுகிறது**

# வெண்பா போட்டி (பயணம்) 18

## போட்டியின் கால அளவு
## மார்ச் - 26 முதல் ஏப்ரல் 12 வரை

முழுமையாகப் படிக்கவும். இம்மாதம் ஒரு சுவாரஸ்யமான போட்டி...

இம்மாதப் போட்டியின் விதிகள்...

மருத்துவத்துறை என்னதான் முன்னேற்றம் அடைந்திருந்தாலும் பக்கவிளைவுகள் ஏதும் இல்லாத நமது பாரம்பரிய மூலிகை மருத்துவத்திற்கு என்று ஒரு தனிச்சிறப்பு உண்டு.
அந்த வகையில் உங்களுக்கு பிடித்த ஏதேனும் ஒரு மூலிகையும் ....
அதன் மருத்துவ குணத்தையும்.... ஒரே வெண்பாவில் பாடவேண்டும்....

தயவு செய்து இம்மாதப் போட்டியில் ஒருவர் பயன்படுத்திய மூலிகையின் பேரை இன்னொருவர் பயன் படுத்த வேண்டாம்......

இதோ எ - கா செய்யுள்

கற்பூர வல்லி (ஓமவல்லி)

கையால் பறித்தெடுத்த  கற்பூர வல்லியிலை
ஐந்தும்ட்டும் வாய்க்குள்  அடக்கியுண்டால் – மெய்தன்னில்
தொண்டை வறட்சி  தொடர்இருமல் மூக்கடைப்பு
அண்டுஞ் சளிபோம்  அகன்று.

பொதுவான விதிகள் : –

நேரிசை வெண்பா மட்டுமே எழுதவேண்டும், பல வெண்பாக்கள் எழுதினாலும் அதில் ஒன்று மட்டுமே தேர்வு செய்யப் படும், முடிந்த அளவு ஒருவர் பயன்படுத்திய பாடுபொருளை இன்னொருவர் பயன்படுத்த வேண்டாம்.

அசத்துங்கள் கவிஞர்களே....

வழக்கம்போல் களம் முழுவதும் கவிஞர்களின் கற்பனைக்கு. மனதில் பட்டதை பட்டென்று போட்டு உடையுங்கள் வெண்டளையில். எல்லாம் கற்பனைக்கே...அது நகைச்சுவையானாலும் ஏற்றுக் கொள்ளப்படும். உங்கள் மனம் சொல்வதை சரியான இலக்கணத்தோடு பகிருங்கள் போதும்.

காலத்தை கவிஞர்கள் கையில் ஒப்படைக்கிறோம்...

தளர்வுகள் : - தனித்தமிழில் தான் பாடல் அமையவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வாசித்தால் புரியும்படி இயல்பான வார்த்தைகளோ, அல்லது வட்டார வழக்குச் சொற்களோ பயன்படுத்தலாம். தளை தட்டாமல், புணர்ச்சி இல்லாமல், பிழையின்றி எழுதினாலே சிறப்பு.

என்றும் தமிழுடன்...

தமிழ்நெஞ்சம் அமின் மற்றும் தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழு,

# புள்ளியில்லாக் கோலம்

## மதிப்புரை

**க**விஞரும், **'முத்தமிழ் கலசம்'** பல்சுவை சஞ்சிகையின் ஆசிரியருமான **வஃபீரா வஃபி**யின் முதலாவது நூலாக வெளிவந்திருக்கும் 'புள்ளியில்லாக் கோலம்' 365 அழகிய ஹைக்கூக்களுடன் இலக்கிய வானில் வலம் வந்திருக்கிறது. இதற்கான சிறப்பானதொரு அணிந்துரையை முனைவர் கல்யாணசுந்தரம் வழங்கியிருக்கிறார். அவரின் அணிந்துரையும், நூலாசிரியரின் முதல் ஹைக்கூவும் இந்நூலை வாசிக்கும் ஆர்வத்தைத் தூண்டுவதாக அமைந் திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இலக்கியம் எனும் கடலில் ஹைக்கூவின் புதிய அலைகள் ஓய்வதே இல்லை எனச் சொல்லலாம். அவ்வகையில் புள்ளியில்லாக் கோலம் வாசகர் நெஞ்சங்களில் கல்வெட்டாய் பதிந்து கோலமிடும் என்பதே உண்மையாகும். இதில் அணிவகுக்கும் ஹைக்கூக்கள் வாசிப்போரின் மனதில் பல காட்சிகளை காணொளியாய் மாற்றிச் செல்லக்கூடும். அணிந்துரையில் குறிப்பிடப்பட்டது போன்று

'அழகு மயில்
பறந்ததும் ஆடத் தொடங்கும்
மிதக்கும் படகு'

எனும் ஹைக்கூ பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட வேண்டிய ஒன்று தான். இதிலுள்ள பெரும்பாலான ஹைக் கூக்களைப் படித்ததும் மனதில் பல கேள்விகள் தொக்கி நிற்பதை அனுபவப் பூர்வமாக உணர முடியும். அவை ஹைக்கூ படைப்பின் இலக்கண வரைபுகளைக் கொண்டிருப்பதை இனங்கண்டு கொள்ளக் கூடியதாகவும் அமைந்துள்ளன. தான் கண்ட காட்சிகளை உற்று நோக்கி அவற்றை சிறந்த ஹைக்கூக்களாக யாத்திருக்கும் இந்நூலாசிரியரின்இயற்கையோடொன்றிய ரசனையை பாராட்டாமல் இருக்க முடியாது. பார்வையில் விழுந்தவற்றையெல்லாம் கவிதையாக்குபவனே கவிஞன் எனப் பேரெடுத்து போற்றப்படுகிறான். இக் கவிஞரோ கண்ணில் பட்ட அனைத்தையும் ஹைக்கூவாக மாற்றி, காட்சியாக்கி வாசிப்பவர் மனங்களையும் ஆக்கிரமிக்கச் செய்திருக்கிறார்.

செம்புலப்பெயல் நீர் போல அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே' என குறுந்தொகையில் வரும் பாடல் போன்று இந்நூலில் இருக்கும் பெருவாரியான ஹைக்கூக்கள் மனதில் ஒன்றிக் கலந்து விடுகின்றதென்ன மாயையோ? வாசித்து முடித்த பின்பும் அவை எண்ண அலைகளில் மோதிச் செல்வதைக் காண்கிறேன்.

இந்நூலில் இடம்பெற்றுள்ள சில ஹைக்கூக்கள் பல புதிய ஹைக்கூ படைப்பாளிகளுக்கு வழிகாட்டியாக அமையும் என ஆணித்தரமாக நம்பலாம். அதே போன்று பல சமூக விழிப்புணர்வு ஹைக்கூக்களையும் கவிஞர் வஃபீரா வஃபி படைத்திருப்பது ஹைக்கூவை இன்னொரு பரிமாணத்துக்கு எடுத்துச் செல்லும் என்பது எனது கருத்தாகும். இது போன்ற இலக்கிய படைப்புகள் காலம் தாண்டியும் வாழ்ந்து சமூகத்துக்கு நன்மைகள் பயக்கும்.

இனி, இந்நூலில் அழகு சேர்த்து என் நெஞ்சம் கவர்ந்த சில ஹைக்கூக்களைக் காண்போம்...

பரபரப்பான நேரம்
அவசரமாக சாலையைக் கடக்கும்
உதிர்ந்த சருகுகள்

குழிந்த கன்னம்
முத்தத்தால் மீள் நிரப்பப்படும்
பிரிவின் இடைவெளி

உச்சிப் பகல்வேளை
சேற்று வயலில் ஓய்வெடுக்கும்
மங்கிய சூரியன்

பாலியல் வன்கொடுமை
பாலகர்களைக் காவு கொள்ளும்
ஆழ்துளைக் கிணறுகள்

எரிபொருள் தட்டுப்பாடு
சூழலை அழகு படுத்தும்
மாசற்ற வளிமண்டலம்

ஆளில்லா நடைபாதை
அங்கும் இங்குமாய் நடமாடும்
தென்னங்கீற்று நிழல்

எழுதிய ஹைக்கூ
சேர்க்கப் படவே இல்லை
கற்பனை வளம்

அமாவாசை இரவு
கொஞ்சமாய் வெளிச்சம் தரும்
ஒற்றை வெண்மேகம்

கலப்படத் தயாரிப்புகள்
மக்களை வந்து சேரும்
புதிய நோய்கள்

விடாமுயற்சி
வெற்றிகளைக் கையில் சேர்க்கும்
நேர்மறை சிந்தனைகள்

இப்படி அழகியலுடன் நூல் முழுக்கத் தடம் பதிக்கும் ஹைக்கூக்களை காணக் கூடியதாக உள்ளது.

இவரின் நூலான புள்ளியில்லாக் கோலம் இயற்கைக்கு இசைவாகவும் மனிதனின் சிறந்த வாழ்வியலுக்கு வழிகாட்டியாகவும் அமைந்து மனதில் அசை போடுகின்றது. ஹைக்கூவை நேசிக்கும் அனைவரும் இந்நூலையும் நேசிப்பார்கள் என்பது திண்ணம். இவர் இதுபோல் பல நூல்களைப் படைத்து தமிழ் கூறும் நல்லுலகில் தன் பேரை நிலைநாட்டிப் புகழ்பெற வேண்டுமென மனதார வாழ்த்துகிறேன்.




128 பக்கங்களைக் கொண்ட இந்நூலின் இலங்கை விலை 850/= ஆகும். நூல் தேவைகளுக்கு

muththamizh.kalasam@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்குத் தொடர்பு கொள்ளலாம்.

- தமிழ்மின்

பல்சுவை
தமிழ்நெஞ்சம்
www.tamilnenjam.com
ஏப்ரல் 2023

# பிறையில் பூத்தது பெருநாள்...

மறையிறை வழியில் மாண்புடன் நோன்பு
மாதம் முழுவதும் மேன்மையாய் இருந்து
படைத்தவன் அருளைப் பாந்தமாய் அணுகி
பித்ராவெனும் தர்மம் பேணுதலோடிந்து
இரவெலாம் நின்று ஏகனைத் தொழுது
இகத்திலே முக்தி இசைந்தே பெற்று
முப்பது நோன்பு முடிவிலே நிறைந்து
முத்தான ஷவ்வால் மலர்ந்திடும் நாளில்
விளக்கு வைக்கும் வேளையில் சேர்ந்து
விண்ணின் மேகத்துள் வான்பிறை தேடினோம்

இழையும் மேகங்கள் இடையே வளைவெள்ளி
இமைக்காமல் தேடிட இலங்கியது மறைந்திட
பிறைகண்டதும் பெருவெள்ளமாய்ப் பொங்கிய சந்தோஷம்
பேணுதலாய் நோன்பை பூரணமாக்கிய சேமம்
துள்ளிக்குதித்துத் தோழியரை அழைத்து
தோளோடு தோளுரச தொழுதிடும் திருநாள்

நாளையென்று நாவிலே நுரைத்திடும் நல்செய்தியோடு
நனைத்திடும் நல்வாழ்த்து நாடுதேசம் தாண்டியொலிக்க
விடிந்தால் பெருநாள் வீதியெங்கும் வாகனத்திரள்
விடலையர் ஆசையாய் வாங்கினர் பண்டம்பட்சணம்
தையற்காரரும் தடதடவென தம்வேலையில் மும்முரமாய்

தக்பீரின் ஓசையோ தரணியெங்கும் தீவிரமாய்
கும்பலாய் சிறுவர் கும்மாளமிட்டே ஆட
குலமங்கையர் மருதாணி கைகளில் போட
வெடி வெடிக்க வாணவேடிக்கையும் விரிய
வழிந்திடும் ஆனந்தம் வைகையாய்ப் பொங்க
மங்கலம் ஏற்றும் மரகதத் திருநாள்
மாந்தருக்கோர் தெய்வீகம் மணக்கும் பெருநாள்

வந்ததே நம் வாசல் நாடி
தந்ததே மனங்களில் வசந்தங்கள் கோடி
குளித்து முழுகிக் குதூகலம் பீறிட
குடும்பமே புத்தாடை புதுமணம் பூசிட
கூட்டுத் தொழுகை குத்பா பிரசங்கம்
கலந்துசிறந்து முஸாபஹாசெய்து கட்டித் தழுவி
பேரன்பை வெளிப்படுத்தும் பெருநாள் வந்ததே
பாரினில் இன்பம் பன்மடங்காய் விளைந்ததே

உறவுகள் வீடுகள் உபசரிப்பில் நிறையும்
உத்தம வழியில் நேசமும் நிறையும்
பண்டிகை பாரம்பரியம் பெருநாள் பந்தயம்
புன்னகை ஏந்தியே பரவசத்துடன் அனைவரும்
கொண்டாடியே தீர்ப்போம் குதூகலமாய் இருப்போம்
கண்ணீரோடு ரமழானை வழியனுப்பி வைப்போம்

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர், இலங்கை